Registered as a News Paper in Sri Lanka | දිනමුරසු වාරමලර් | பக்கம் 24 ரூபா 30.00
ஒகஸ்ட் 21 - 27, 2014

# வாரமலர் தினமுரசு



சினி விசிட்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1080

# வடக்கு - தெற்கு உறவுப்பாலம்







## இந்தியக் கனவும் அமெரிக்க உறவும்



## வறட்சி

## 14 மாவட்டங்கள் பாதிப்பு

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## ஸ்ரீபஞ்சமுக ஆஞ்சநேயருக்கு விரதம்

மூன்று கண்கள் 10 கரங்களுடன் புறப்பட்ட வீரதீரம் நிறைந்த ஸ்ரீபஞ்சமுக ஆஞ்சநேயரை வணங்கினால் வாழ்வில் வளங்கள் பல பெற்று வாழலாம். பஞ்சமுக ஆஞ்சநேய யாராலும் சாதிக்க முடியாத காரியங்களையும் சாதிக்கவல்லவர்.

பஞ்சமுக ஆஞ்சநேயரை வழிபடத் தொடங்கும் முன்பு காலையிலேயே எழுந்து சூரிய நமஸ்காரம் செய்யவேண்டும். விரதமிருந்து அனுமன் சாலீசா பாராயணம் செய்யவேண்டும். இதை சொல்ல இயலாதவர்கள் இதன் பொருளை வாசிக்கலாம். மாலையில் 1008 முறைக்கு குறையாமல் "ஸ்ரீராம ஜெயம்" சொல்லவேண்டும்.

அவரது கோயிலுக்குச் சென்று வெண்ணெய், வெற்றிலை, வடை மாலை சாத்தி வழிபடவேண்டும். ஏழைக் குழந்தைகளுக்கு புத்தகம் தானம், கல்வி உதவித்தொகை வழங்கவேண்டும். இரவில் தூங்கும்முன் "ஸ்ரீராம ஜெயம்" என 108 முறை சொல்லவேண்டும். பஞ்சமுக ஆஞ்சநேயரை இந்த முறையில் வழிபட்டால் அவர் உள்ளம் மகிழ்வார்.

அவரைத் தரிசிக்க வெண்ணெய் வாங்க முடியவில்லை, வெற்றிலை வாங்க முடியவில்லை, வடைமாலை அணிவிக்க முடியவில்லை என்ற வருத்தமெல்லாம் வேண்டாம்.

பணமிருந்தால் இதை செய்யலாம். முடியாத பட்சத்தில், அவருக்குப் பிடித்தமான "ஸ்ரீராம ஜெயம்" சொல்லி வணங்கினாலே போதும். அவரது அருள் கிடைக்கும்.

## நம்பிக்கையினால் வாழ்வு!

ஆன்மீகம்

கி.மு. 600 ஆம் ஆண்டையொட்டி யூதா நாட்டில் வாழ்ந்த இறைவாக்கினர்தான் அபக்கூக்கு. வடக்கிலிருந்து பாபிலோனியர்கள் படையெடுத்து வந்து தாக்கும் ஆபத்து எப்போதும் சூழ்ந்திருந்தது. யூதாவிலோ நாட்டின் ஒற்றுமையும், நீதியும் குலைந்து, வலியோர் எளியோரை ஒடுக்கிக்கொண்டிருந்தனர்.

இத்தகைய சூழலில்தான் அபக்கூக்கு இறைவாக்குப் பணியில் ஈடுபடுகிறார். கயவர்களை ஏன் இறைவன் தண்டிக்காமல் விட்டு வைக்கிறார்? பொல்லாதவர்கள் நேர்மையாளர்களை விழுங்கும்போது இறைவன் ஏன் மௌனமாய் இருக்கிறார்? என்னும் கேள்விகளை அபக்கூக்கு எழுப்பி, அவற்றுக்கு விடை காண முயல்கிறார்.

பன்னெடுங்காலமாக மானிட இனத்தைத் தட்டி எழுப்பும் கேள்வி அல்லவா இது! ஏன் இந்த உலகில் தீமை? ஏன் தீயவர்கள் தழைக்கிறார்கள், நல்லவர்கள் துன்புறுகிறார்கள்? இக்கேள்விக்கு விடை காண முயலும் இறைவாக்கினருக்கு ஆண்டவர் தரும் பதில்: நம்பிக்கையோடிருங்கள். எனவேதான், மிகப் பிரபலமான இந்த வார்த்தைகளோடு இன்றைய முதல் வாசகம் நிறைவுக்கு வருகிறது: "நேர்மையுடையவரே தம் நம்பிக்கையினால் வாழ்வடைவர்"

## இஸ்லாம் நெறிப்படுத்தும் வாழ்க்கை முறை

நீங்கள் பிரச்சினைகள் இல்லாது மகிழ்ச்சியோடும் வசதி வாய்ப்புக்களோடும் இருக்கின்ற நிலையில் அல்லாஹ்வை அறிந்து வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் கஷ்டப்படும் போது அல்லாஹ் உங்களைத் தெரிந்துவைத்திருப்பான்.

இப்பணிக்கு இஸ்லாம் முன்வைக்கின்ற வழிமுறை அல்லாஹ்வை முதலில் உங்கள் உள்ளத்தில் நிறுத்த வேண்டும் என்பதே. இதன்மூலம் இஸ்லாம் மனித உள்ளத்தை மாற்றி வடிவமைத்துப் பக்குவப்படுத்துகிறது.

மனித வாழ்க்கைக்கு உள்ளம்தான் அடிப்படையாக அமைகிறது. அந்த உள்ளத்தை மாற்றுகின்ற மிகப் பிரதான வேலையைத்தான் இஸ்லாம் செய்கிறது.

இஸ்லாத்தை உள்ளத்தில் இருத்தினால்தான் இஸ்லாம் எமது வாழ்க்கையாக மாறும். இஸ்லாத்திற்கு மாற்றமான ஒன்றை உள்ளத்தில் வைத்துக் கொண்டு இஸ்லாமிய வாழ்க்கைக்குள் வர முடியாது.

இதனை ஒருவர் ஏற்றுவிட்டால் அது அவரது ஈருலக வாழ்வுக்கும் ஏற்புடையதாக அமைந்துவிடும். இதுதான் இஸ்லாம் நெறிப்படுத்தும் வாழ்க்கை முறை.

எம்.சி.கலீல், கல்முனை -05

## கவிதைப்போட்டி 1077



### ● பாராட்டுக்குரியது ●

### சுமை

என் குட்டியை சுமக்கவில்லை
உன் குட்டியை சுமக்கிறேன்
சுமை என்று சுமக்கவில்லை
என் துணை என்று சுமக்கிறேன்
இனத்துக்கு இனம் வந்த...
பாசத்தின் நேசம் என்று சுமக்கிறேன்
உன் சுமையிலே...
நான் சுகம் காணும்போது...
என்னை மறந்து...
உன்னை என் முதுகிலே
சுமக்கிறேன்...


ஜே.ஜேசுமணி,
கண்டி.

### நன்றி சொல்வேன்

அன்னை இருந்தபோது – அவள்
அடிவயிற்றைப் பிடித்தேன் – அவள்
என்னைப் பிரிந்தபோது – உன்
முதுகைப் பற்றிப் பிடித்தேன்
நன்றி உள்ள உயிரே
நலமுடன் நான் வாழ்ந்தால்
நன்றி சொல்வேன்
என்றும் உனக்கு.

இளம்பிறை யோகன்,
புத்தளம்.

## கவிதைப் போட்டி இல 1080



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபால் அட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 01.09.2014

கவிதைப் போட்டி இல. 1080 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### கோடி நன்மை

இனபேதம்
இருக்கக் கூடாது
நன்றியுள்ள நாயும்
நானுமிருப்பதைப் பாருங்கள்
பார்த்து உணர்ந்து
'பா' எழுதுங்கள்
கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை.

எம்.சி.கலீல், கல்முனை-05.

### புதிருக்கு விடை?

நாயின் முதுகில்... இங்கு
குரங்கின் குடித்தனம், உலகில்
பேயின் உருவில்... நாளும்
மனிதன் காடைத்தனம், இதில்
யார் உயர்திணை?
யாரோ அஃறிணை?

K.M.A.அஸீஸ், சாய்ந்தமருது-II

### சமரசம்

மந்தி இதன் சேட்டைகளால்
மனம் நொந்த எஜமானனிடம்...
தன் நண்பனான மந்திதனை
தன் முதுகில் சுமந்து...
சென்றங்கே சமரசம்
செய்துவைக்கும் நன்றியுள்ள நாயிது!

ஏ.எம்.கமால், புத்தளம்.

### இந்த நேசம்

மனித பாசம் மறைந்த பாசம்
மிருக பாசம் இன்றைய நேசம்
நாயின் மீதேறி
சுற்றுலா செல்லும்
குரங்கின் பாசம்...
மனித குலத்துக்கு...
பாடம் புகட்டவல்லவோ?
இந்த நேசம்.

P.இவோன், கண்டி.

### நன்றி உள்ள நாயகன்

பெற்றவள் என்னை விட்டுப் பிரிந்தாள்
கருணை அற்றோர் விட்ட தவறாலே
உற்றோர் என்று உதவிக்கு
யாருமற்ற பிறவி நான் – அதனால்
நன்றி உள்ள நாயகனே நானும்
உன் குட்டிபோலே ஒட்டிக்கொள்ளவா – உன்
முதுகின் மேலே நலமாய் வாழ்ந்தால்
நானும் வாழணும் உன்போலே.

இளம்பிறை யோகன், புத்தளம்.

### இந்த பாசம்

மனிதருக்கில்லா பாசம்...
இந்த மிருகங்களுக்குண்டே!
நாயின் முதுகில் குரங்கிருந்து
பயணிக்கும் பயணம்...
பார்வைக்கு புதுமையல்லவோ?
உன்னைப் போல் பிறரையும் நேசி
என்பதற்கு இலக்கணமோ?
இறைவன் படைப்பின் மகிமையை
பிரதிபலிக்கின்றதே...
இந்தப் பாசம்.

யே.ஒகஸ்ரா, கண்டி.

## உங்கள் பக்கம்

### பாதசாரிக் கடவையில் வாகனங்கள் தரித்துநிற்காதது ஏன்?

யாழ்.குடாவில் பல அபிவிருத்தித் வேலைத் திட்டங்களும் இடம் பெற்றுவருகின்றது. அந்தவகையில் காப்பெட் வீதிகளாக எமது வீதிகள் மெருகேறிக் கொண்டிருக்கின்றது. இருந்தாலும் வீதி விபத்துக்களையும் தடுக்க முடியவில்லை. வீதி விபத்துக்களை தடுக்கவும், பாதசாரிகளின் நன்மை கருதியும் பாதசாரிகள் கடவைகள் தேவைப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டு இருக்கின்றது.

ஆக, சாரதிகள் பாதசாரிக் கடவைகள் பாதசாரிகள் கடந்து செல்லுவதற்கு நிற்பதில்லை என்ற குற்றச்சாட்டை மக்களாகிய நாம் முன்வைக்கின்றோம். ஆகவே பாதசாரிகள் வீதியைக் கடப்பதற்கு பாதசாரிக் கடவைகளில் தரித்து நின்றாலும் அதை வாகன சாரதிகள் கணக்கில் எடுப்பது இல்லை. இதனால் பாதசாரிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அதாவது பஸ்ரியன் பிரதான சந்தியில் பாதசாரி கடவையில் கடந்து செல்வதற்கு பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் சாரதிகளின் கவனயீனத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது கட்டாயமாகும். அல்லது சாரதிகளுக்கு போக்குவரத்து விதிமுறைகளை கற்றுக் கொடுக்க வேண்டிய கட்டாயமும் உள்ளது. இச்சந்தியில் மட்டுமல்ல பல இடங்களிலும் இந்நிலையே காணப்படுகின்றது.

எனவே மக்களின் போக்குவரத்தில் கவனமெடுத்து விபத்துக்களைக் குறைக்க உரிய போக்குவரத்து அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

எம்.ஜுட், யாழ்ப்பாணம்

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

### அமைதியின் சொற்கள்

விஞ்ஞானிகள் விண்ணிலே உயிர்கள் இருக்கின்றனவா?, இல்லையா? என்று தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இருக்கின்றனவா? இல்லையா என்று நான் சொல்லவில்லை. இதுவரை அவர்கள் ஒருவரையும் கண்டுபிடிக்கவில்லை. கோடான கோடி மைல்களுக்கு எம்மைத் தவிர எவருமில்லை. அமைதி ஒவ்வொரு மனிதரிலும் ஏற்படும்போது பூமியிலும் சொர்க்கம் ஏற்படக்கூடும். - பிரேம் ராவத்




## வாசகர்சாலை

### சூப்பர்

தினமுரசின் பக்கங்கள் அனைத்தும் எப்போதும் முரசு தனக்கென தனித்துவமான பக்கங்களாக இருக்கின்றன. முரசு அண்மைக் காலங்களாக முன் பக்கம் பார்ப்பதற்கு அழகாக இல்லை. முன்னைய காலங்களில் இருந்த தன்மை இப்போது இல்லை என்பதே எனது மனக்குறைவாக உள்ளது. உன்னில் மாற்றங்களை பெரிதும் விரும்புகின்றேன்.

எம்.பவித்ரன், கொழும்பு -15.

### காலத்தின் தேடல்

காலத்தின் தேடலில் முரசின் பக்கங்களை விரிக்கும்போது சூடு, சுவை, சுவாரசியமாய்த்தான் இருக்கின்றது. மருத்துவப் பக்கத்தில் மருத்துவர் ஒருவரின் கட்டுரையை பிரசுரிக்கவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

முரசு விளையாட்டுப் பக்கத்தில் உள்ளூர் விளையாட்டு வீரர்களின் கட்டுரைகளை முரசு பிரசுரிக்கவேண்டுமென்பதே எனது வேண்டுகோள். உள்ளூர் வீரர்களுக்கு முரசு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

எம்.விதுர்ஷன், வவுனியா.

### எதிர்பார்ப்பு

வணக்கம்,

லேடீஸ் ஸ்பெஷல், மருத்துவம், பாப்பா முரசு என்பவை என்னைக் கவர்ந்தவை. லேடீஸ் ஸ்பெஷலில் வரும் அழகு குறிப்புகள் மிகவும் அருமையாக உள்ளது. அந்த அழகு குறிப்புகளை செய்தும் பார்த்துள்ளேன். இயற்கையான அழகு குறிப்புகளை பிரசுரிக்கும் ஆசிரியருக்கு நன்றிகள். இன்னும் லேடீஸ் ஸ்பெஷல் பக்கத்தை அழகுபடுத்த வேண்டும். பெண்கள் பக்கத்திற்கு இன்னும் முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

குட்டிராதா, மட்டக்களப்பு

JAFFNA

# ஐ.நா.வின் போர்க்குற்ற விசாரணை கள்ளத்தனமானது, போலி நாடகம்!

## - சாடுகிறார் வெளிவிவகார அமைச்சர்-



ஐக்கிய நாடுகளின் போர்க்குற்ற விசாரணையானது எந்த நோக்கத்தையும் கொண்டிராத ஒன்றாகும். இது ஒரு போலி நாடகமாகும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த விசாரணையானது நீதியை கேவலத்துக்கு உட்படுத்தும் ஒன்றாக உள்ளது. அதனால்தான் அந்த விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் ஆதரவை வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் அண்மையில் ஆரம்பமான நான்காவது பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர், மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் விசாரணையின் போது சேகரிக்கப்படும் சாட்சியங்கள் கள்ளத்தனமாக இலங்கை மக்களிடம் பெறபபடுபவையாகும். சிலவேளையில் பொதுமக்களுக்கு பணம்கொடுத்தும் சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளன.

இலங்கை தற்போது மனித உரிமைகள் விடயத்தில் சில நாடுகளிடம் இருந்து பாரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளது. எனினும் இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் இருந்து தனித்துப் போகவில்லை. ஐ.நா. விசாரணையானது குறிக்கோள் அற்றது. அது நீதியானது அல்ல என்பதுடன் இந்த விசாரணை போலி நாடகமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## கழுகுப் பார்வையில் அழகு சாதன நிலையங்கள்

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து சாதன நிலையங்களையும் தீவிர சோதனைக்கு உட்படுத்தும் நடவடிக்கையை சுகாதார அமைச்சு மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

அழகு சாதன நிறுவனங்களில் உபயோகப்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் தரம் மற்றும் அழகுக் கலை நிறுவனங்களை நடத்துவோரின் தகைமை அனுபவங்களையும் ஆராயும் நடவடிக்கைகள் இதன்மூலம் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கிணங்க நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கும் அழகு சாதன நிலையங்கள் உடனடி சோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளன. சோதனை நடவடிக்கைகளையடுத்து அங்கு பாவணைக்குட்படுத்தப்படும் உபகரணங்கள் அலங்காரப் பொருட்களின் தரம் தொடர்பில் தமக்கு உடனடியாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவேண்டுமென சகல மாகாண மற்றும் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளார்.

அழகு சாதன நிலையத்தில் பெண் டாக்டர் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தையடுத்தே அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கடந்தகாலத் தவறுகளால் பலதையும் இழந்துவிட்டோம்

## வடமராட்சி கடற்றொழிலாளர் சங்க உபதலைவர்



கடந்த காலங்களில் எமது தவறான தெரிவுகள் காரணமாக எமக்குக் கிடைக்கவேண்டிய பல்வேறு விடயங்களை இழந்துவிட்டோம். இனிவரும் காலங்களில் அவ்வாறான தவறுகளை செய்யப்போவதில்லை என வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தின் உபதலைவர் திரு சிவகாமி தெரிவித்துள்ளார்.

வடமராட்சி நாகர்கோவில் பிரதேசத்திற்கான மின்விநியோகம் ஆரம்பித்துவைக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கடந்தகால அழிவுகளால் பாதிக்கப்பட்டிருந்த எமது பிரதேசத்தின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட மீள்கட்டுமானப் பணிகள் காரணமாக தற்போது புதுமெருகூட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறு வடபகுதி மாகாணத்தின் ஒவ்வொரு பகுதியும் அமைச்சரின் திட்டமிட்ட செயற்பாடால் மெருகூட்டப்பட்டுவருகிறது. மக்கள் தமது தேவைகளைப் படிப்படியாகப் பெற்றுவருகின்றனர். அமைச்சரின் இவ்வாறான திட்டமிட்ட வேலைத்திட்டத்திற்கு அப்பிரதேசத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு குடிமகனும் தமது ஒத்துழைப்பை வழங்கவேண்டியது இன்றியமையாததாகும் என்றும் தெரிவித்தார்.

# திட்டம் ஜெயிக்குமா?

ரிஷி

புலிகளின் முன்னாள் நிழல் அரசியல் கட்சியான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, புலம்பெயர் தமிழருக்காக புதிய தேசியத் தலைவர் ஒருவரை உருவாக்கும் ஏற்பாடுகளில் இறங்கியுள்ளது. இதற்காக, மாகாணசபை வேளாண்மை மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் என்பவரே மிகப் பொருத்தமான நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

புலிகள் இருந்தவரை "புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள்" என முழக்கமிட்டு வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னர், ஒரு உண்மையை உறுதி செய்துகொண்டது. அது என்னவென்றால், இப்போது நிஜப் புலிகள் இல்லை, காகிதப் புலிகளும், கி-போர்ட் புலிகளுமே உள்ளனர் என்பதுதான்.

அதையடுத்து, அக்கட்சியின் தலைவர் இரா.சிம்பந்தன் "நம்ம கட்சிக்கும், புலிகளுக்கும், முன்போ, இப்போதோ, எப்போதோ எந்த தொடர்புமே கிடையாது" என்று டோனை மாற்றிக்கொண்டார்.

அக்கட்சியின் இளைஞர் அணித் தலைவர் 77 வயதான மாவை சேனாதிராஜா, "புலியா? நாங்கள் கண்ணால் கண்டதே இல்லையே... சின்ன வயதில் ஆங்கிலம் படித்தபோது, T for Tiger என்று படித்த ஞாபகம் மட்டுமே புலியை பற்றி உள்ளது" என்றார்.



போதும் போதாதற்கு, 2009-க்கு முன் மேடைகளில் புலிக்கொடி முன்னால் நின்று உறுமிய இரா.சம்பந்தன், யாழ்ப்பாணத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து, சிங்கக்கொடியை (இலங்கை கொடி) உயரத் தூக்கி அசைத்து மகிழ்ந்தார். "தனிநாடு (ஈழம்) ஏதும் தேவையில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் இருக்கவே ஆவல்" என்றார்.

புலிகளை அழிக்க உதவிய அமெரிக்காவில் தமிழீழம் அமைத்து அதில் உருத்திரகுமாரன் பிரதமராக இருக்க, தமிழீழம் அமையவேண்டிய இலங்கையில் இவர்கள் இப்படி "ஒன்றே இலங்கை, ஒருவரே ஜனாதிபதி" என கோஷமிட்டால், புலம்பெயர் தமிழரின் நிதியுதவி கட்சிக்கு (கட்சிக்கு என்றால், கட்சி முக்கியஸ்தர்களின் பொக்கெட்டுகளுக்கு) கிடைக்குமா?

இப்போதெல்லாம், பணவரவு வற்றிவிட்டது.

"நீங்க வேணாம். நாங்களே இங்கேயே (வெளிநாட்டில்) ஈழம் அமைத்துக் கொள்கிறோம்" என இவர்களை வெளிநாட்டு தமிழர்கள் கைகழுவி விட்டார்கள். இதற்கிடையே, தமிழகத்தில் ஈழம் அமைக்கும் முயற்சிகள் சுவாரசியமாகவும், சினிமா கவர்ச்சியுடனும் இருக்கவே, கிட்டத்தட்ட அனைவருமே தமிழ் தேசியக் கூட்டமைப்பை அம்போ என்று கைவிட்டுவிட்டார்கள்.

மீண்டும் முக்கியத்துவம் பெறவேண்டுமானால், ஒரு புலிக்கதை விடவேண்டும் என்ற நிலை இவர்களுக்கும் ஏற்பட்டது. அதற்காக இரா.சம்பந்தனுக்கோ, மாவை சேனாதிராசாவுக்கோ புலிச்சீருடை அணிந்து போட்டோ எடுக்கவா முடியும்? சீருடை தைக்கவரும் டெயிலரே வாய்விட்டு சிரித்துவிடுவார்.

இதனால், அடுத்த தேசியத் தலைவராக கட்சிக்குள் மற்றொருவருக்கு வேஷம் கட்டுவது என் முடிவாகியது. அதற்காகத்தான், பொ.ஐங்கரநேசன் என்பவர் பொருத்தமான நபர் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார்.

இவர் தற்போது யாழ்ப்பாணத்தில் (வடக்கு மாகாணசபை) அமைச்சராக உள்ளார். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு 'பெருமை சேர்க்கும்' பல திட்டங்களை செயற்படுத்தியுள்ளார்.

**உதாரணமாக ஒரு திட்டம்:**

யாழ்ப்பாணத்தில் விஷச்செடி வளர்கிறது (இவர்களது கட்சியல்ல, நிஜ விஷச்செடி) என இந்த அமைச்சர் ஒரு திட்டம் கொண்டு வந்தார். அதன்படி, விஷச்செடிகளை வேரோடு பிடுங்கி, இவரது அமைச்சுக்கு கொண்டுவந்து கொடுத்தால், செடிக்கு ரூ.10 வழங்கப்படும்.

அப்படியே யாழ்ப்பாணத்தில் உள்ள விஷச் செடிகளை பூண்டோடு அழித்துவிடலாம் என்பது இவரது அறிவுக்கு எட்டிய திட்டம்.

ஆனால், 23-ம் புலிகேசி பாணியிலான இந்த ஐடியா, தலைகீழாக வேலை செய்தது.

இப்போதெல்லாம், யாழ்ப்பாணத்தில் ஆளாளுக்கு தரிசு நிலங்களில் விஷச் செடி வளர்க்க தொடங்கியுள்ளார்கள். செடிக்கு ரூ.10 கொடுக்க தமிழர் தேசிய அரசு உள்ளதே! தண்ணீர்கூட ஊற்றத் தேவையில்லாத சூப்பர் விவசாயம் அல்லவா?

இப்படியாக இந்த கால்நடைத்துறை அமைச்சரின் ஐடியாக்களை பார்த்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைமை, "அட, நம்ம பாணி அரசியலுக்கு சரியான ஆளாக இவர் உள்ளாரே" என கண்டுகொண்டது. அதையடுத்து, அடுத்த தேசியத் தலைவராக இவரையே முன்னிலைப்படுத்துவது என்ற முடிவை எடுத்துள்ளது.

அதற்காக இவரை வன்னிக்கு அழைத்துச் சென்று, சில போட்டோக்கள் எடுக்கப்பட்டது.

புலிகளின் தலைவராக இருந்த பிரபாகரன் முன்பு எடுத்துக்கொண்ட போட்டோக்கள் போல இவர் போஸ் கொடுத்து எடுத்த போட்டோக்களை வெளிநாட்டு தமிழர் மத்தியில் புழக்கத்தில்விட்டு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சிக்கு செல்வாக்கு தேடும் மெகா திட்டம் இது.

"என்னங்க இது.. கேனத்தனமான ஐடியாவாக உள்ளதே" என்று நினைக்கிறீர்களா?

என்னது, கேனத்தனமான ஐடியாவா? "விஷச்செடிக்கு ரூ.10" திட்டத்தை விடவா?

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

### பகுத்தறிவு பயன்பட வேண்டும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அமைத்திருக்கும் விசாரணைக்கு குழுவுக்கு சாட்சியமளிப்பவர்களின் பாதுகாப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உத்தரவாதமளிப்பதாகவும் சாட்சியமளிக்க விரும்புகின்றவர்கள் தம்மை நாடுமாறும் தெரிவித்திருந்தார்கள்.

ஆனால் சாட்சியமளிப்பவர்கள் எவ்வாறு தமிழ்க் கூட்டமைப்பினரை அணுகுவது?. யாரை சந்திப்பது? தமது சாட்சியங்களை பெறுவார்கள்? என்பதையோ. அதற்கான விசேட காரியாலயம் ஏதேனும் அமைக்கப் பட்டுள்ளதா? என்பதைப் பற்றி எந்த தெளிவுபடுத்தலையும் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு கூறவில்லை.

ஐ.நா. விசாரணைக்குழுவோ. இலங்கையிலிருந்து முப்பதுக்கும் அதிகமானவர்களிடம் ஸ்கைப் மூலமாக வாக்குமூலங்களைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் விசாரணைக்குழுவினரின் செயற்பாடுகள் இலங்கையின் இறைமைக்கு விரோதமானதாகும். இரகசியமாக சாட்சியமளித்தவர்கள் தேசத்தின் துரோகிகளாகவும் கருதப்படுகின்ற சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றைப் பார்க்கும்போது ஐ.நா மனித உரிமை பேரவைக்கு அங்கத்துவ நாடான இலங்கையுடன் நடைமுறைச்சாத்தியமான அணுகுமுறையை கொண்டிருக்க முடியவில்லை. இலங்கையை அணுகத் தெரியவில்லை. ஐ.நா. விசாரணைக் குழு இரகசியமாக வாக்குமூலம் பெற்றுள்ளதானது அதன் தோல்வியாகவே கருதப்படுகின்றது.

அவ்வளவுக்கு வலிமை இல்லாத பேரவை எதற்கு? அதன் கள்ளத்தனமான வாக்குமூலங்கள் எதைச் சாதிப்பதற்கு? தனது இயலாமையை மறைப்பதற்கு ஒரு தேசத்தின் மக்களை தேசத்துரோகிகளாக உருவாக்கிவிடுகின்ற இந்தப் பேரவையால் தமிழ் மக்களுக்கு எத்தகைய நன்மைகளைப் பெற்றுக் கொடுக்க முடியும்? என்ற பல கேள்விகள் தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ்க் கூட்டமைப்பு தனது அரசியலையும் செய்துகொள்ளவே சாட்சியங்களை வழங்குவோருக்கு பாதுகாப்பளிப்பதாக கதைவிட்டுள்ளது.

உலக நாடுகள் தமது பாதுகாப்பு. பொருளாதாரம் என்று பல வருடங்கள் முன்னோக்கிச் சிந்திக்கின்றன. உலக மக்கள் பலர் தமது இருப்பு. எதிர்காலம். பொருளாதாரம். நவீனத்துவம். விஞ்ஞான வளர்ச்சி என்று பல்வேறு முன்னேற்றங்களைப் பற்றிய சிந்தனைகளிலும் ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் தமிழ் மக்கள் மட்டும் தமது கைகளில் எந்தப் பிடிமானத்தையும் கொண்டிருக்காமல் ஐ.நா.வையும். அமெரிக்காவையும் காட்டி ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

"நன்மையும் தீமையும் நாடி
நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்"

அதாவது நன்மையும் தீமையுமாகிய இரண்டையும் ஆராய்ந்து நன்மை தருகின்றவற்றையே விரும்புகின்ற இயல்புடையவன் ஆளப்படுவான் என்பது திருக்குறள்.

ஆனால் தமிழ் மக்களாகிய நாமோ. நம்மைச் சுற்றி நடக்கும் நல்லதையும் கெட்டதையும் ஆராய்ந்து பார்ப்பதே இல்லையே. பார்ப்போமா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# வடக்கு - தெற்கு உறவுப்பாலம்



**தே**சியத்தை இனவாதமாக்கி அதற்குள் அரசியல் இலாபம்பெறும் கூட்டமைப்பினரின் முதுகிலேயே தேசியம் பற்றிய விமர்சனத்தை சுமத்திவிட்டு முன்னோக்கித் தள்ளிப்பார்க்கும் துரதிர்ஷ்டம் பரீட்சிக்கப்படுகின்றது. இந்த கையறுந்த நிலையானது வடக்கிற்கும், தெற்கிற்கும் ஒரு இடைவெளியை பாதுகாத்துக் கொண்டு தமிழ் மக்களை பதற்றப்படுத்திக்கொண்டோ அல்லது பிரச்சினைகளுக்குள் வைத்துக்கொண்டோ மாற்றம்மொன்றை சிந்திப்பதாகும்.

வடக்குக்கும் தெற்கிற்கும் உறவுப்பாலம் மிக அவசியம். அவ்வாறில்லாமல் மொழியையும், கலாசாரத்தையும், வாழ்க்கை முறையையும், சிந்தனை ஓட்டத்தையும் ஒப்பீட்டுப்பார்ப்பதும், ஒன்றை ஒன்று மிஞ்சுகின்ற வாதங்களால் நிரந்தரமான இடைவெளியை ஏற்படுத்துவதுமே முரண்பாடுகளின் பிரதான காரணமாக இருக்கின்றது.

இலங்கை தமிழர்களின் பிரச்சினையை தற்போது வடக்கின் பிரச்சினையாக இறுதி வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. மலையகமும், கிழக்கு மாகாணமும் தென்னிலங்கையுடன் இணங்கி அல்லது அதைப் புரிந்து வாழப் பழகிவிட்டார்கள்.

மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பை அல்லது அரசியல் பொறுப்பை கொண்டிருப்பவர்கள் அதைச் சரியாகச் செய்கின்றார்களா என்பது கேள்வியாக இருக்கலாம். அல்லது அவர்களின் ஆற்றல் குறைவானதாக இருக்கலாம். மக்களுக்கு திருப்தி அற்றதாக இருக்கலாம். ஆனாலும் சிங்கள மக்களோடும், தென்னிலங்கை அரசியல் தலைமைகளுடனும் உறவு-களை பலப்படுத்திக் கொண்டு மெல்ல முன்னேறிக் கொண்டு இருக்கின்றர்கள்.

அந்த மக்களும் தமது கலாசாரம், பண்பாடுகளை பாதுகாத்துக்கொண்டு வாழ்வதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தி வாழ்கின்றார்கள். வடக்கில் இருந்த கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று அங்கு இணக்கத்தோடு வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். உதாரணமாக கொழும்பில் வாழும் மக்கள் சிங்கள மக்களுடன் உறவாகவும், சிங்களத்தை கற்றுக்கொண்டும் வாழ்கின்றார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் நின்று கொண்டு தென் இலங்கை சிங்கள அரசு என்றும் அவர்கள் சிங்களவர்கள் என்றும் தமிழ்த் தேசியம் பேசுகின்ற ஒரு வழக்கம் இருந்துவருகின்றது. தெற்கே இணங்கியும், வடக்கே பகைத்தும் வாழ்தலே தமிழ்த் தேசியம் என்று இங்கே ஒரு இனவாதம் வளர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலைமை மாற்றமடைய வேண்டும். தெற்கோடு உறவைப் பலப்படுத்துவது அடிமையாக வாழ்வதோ, சலுகை பெறுதலோ இல்லை. உரிமையைப் பெறுவதற்கும், நாங்களும் இலங்கையர்களே என்பதை உணர்த்துவதற்கும் அவசியமாகும்.

இம்மாதம் பதினைந்தாம் திகதி யாழ்ப்பாணத்தில் வடக்கிலிருந்து தெற்குநோக்கிய சைக்கிள் பயணம் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறிய கருத்துக்கள் யதார்த்தமானவை. அந்த உரையில், வடக்கில் இருதய சத்திர சிகிச்சைக் கூடம் ஒன்றை கட்டியெழுப்பும் நல்ல நோக்கத்தோடு வடக்கிலிருந்து தெற்குநோக்கி ஆரம்பிக்கும் சைக்கிள் ஓட்ட நிகழ்ச்சி அதன் இலக்கை வெற்றிகரமாக அடைந்துகொள்வதற்கு எனது வாழ்த்துக்கள்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான உறவுப்பாலத்தை பலப்படுத்துவதன் ஊடாகவே எமது பல பிரச்சினைகளுக்கு தீர்வைக் காணமுடியும்.

எமது மக்கள் இருதய சத்திர சிகிச்சை மற்றும் இருதயம் தொடர்புபட்ட பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக தென் இலங்கைக்கு செல்லவேண்டியுள்ளதோடு பணச்செலவு, அலக்கழிப்பு, காலதாமதம் என பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துவருகின்றனர்.

அதற்கு ஒரு தீர்வைக் காணும் முகமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த முயற்சி நிச்சயம் வெற்றிபெறும். இதேபோல் தெற்கே இருந்து வடக்கு நோக்கி பாத யாத்திரையாக வருகை தந்து நிதி திரட்டி தெல்லிப்பளையில் புற்றுநோய் சத்திரசிகிச்சைப் பிரிவு ஒன்றை சில நல்ல உள்ளங்கள் கட்டித்தந்ததையும் இங்கே ஞாபகப் படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் ஒரு உறவுப்பாலமாக நாமே தற்போது இருந்துவருகின்றோம். அதை மேலும் பலப்படுத்தும் இதுபோன்ற முயற்சிகளை நான் பெரிதும் வரவேற்கின்றேன். ஆகவே இன்றைய தெற்குநோக்கிய சைக்கிள் ஓட்டம் எமது மக்களின் உணர்வுகளையும், கோரிக்கைகளையும், விருப்பங்களையும் வெளிப்படுத்துகின்ற நிகழ்வாக இருக்கட்டும். இந்த முயற்சிக்கு எனது ஒத்துழைப்பும் நிச்சயம் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்திருந்தார்.

இவ்வாறு தெரிவித்ததோடு நின்றுவிடாமல் அவரும் ஒரு சைக்கிளை எடுத்துக்கொண்டு சைக்கிள் பவனியில் பங்குகொண்டவர்களுடன் பயணித்தார். அமைச்சரின் அந்தச் செயல் அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களுக்கும், அதில் பங்குகொண்டவர்களுக்கும் ஒரு உத்வேகத்தை கொடுப்பதாக அமைந்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்தார். அந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனும் கலந்துகொண்டிருந்தார்.

முதலமைச்சரை டபுள்ஸ் போக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைத்ததையும், முதலமைச்சர் தனது வயது ஒத்துழைக்காது என்று ஒதுங்கிக்கொண்டதையும் தமிழ் ஊடகங்கள் நகைச்சுவையோடு செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முதலமைச்சரை அழைத்ததில் நேரடியாக சைக்கிள் பயணத்தை குறிப்பிட்டிருந்தாலும், அரசியலில் வாருங்கள் டபுள்ஸ் போகலாம் என்று அழைத்ததுபோலவே இருந்தது.

ஏனென்றால், முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் அரசியலும், வேலைத்திட்டங்களும் தெற்கோடு ஒரு உறவை பலப்படுத்துவதாக ஒருபோதும் இருக்கவில்லை. எதிர்காலத்தில் இருக்கப் போவதுமில்லை. அத்தகைய ஒருவர் வடக்கிற்கும் தெற்கிற்கும் உறவுப் பாலம் அமைக்கும் ஒரு வேலைத்திட்டத்தோடு தன்னை விசுவாசமாக ஈடுபடுத்தியிருக்கமாட்டார்.

அப்படியானால் முதலமைச்சரின் பங்குபற்றுதலானது வெறுமெனவே சடங்காகவே இருந்திருக்கும். மருத்துவபீட பல்கலைக்கழக மாணவர்கள் இங்கே யாழ்ப்பாணத்தில் இருதய சத்திர சிகிச்சைக்கூடம் ஒன்றை கட்டவேண்டுமாக இருந்தால் அதற்கு யாழ்ப்பாணத்துக்கு பவனி வந்தாலோ அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வரை பவனிபோய் வந்தாலோ நோக்கத்தை நிறைவேற்ற முடியாது என்பதை ஆராய்ந்துள்ளார்கள். வடக்கிலிருந்து தெற்கிற்கு போவதுதான் பல்வேறு நன்மைகளைப் பெற்றுத்தரும் என்று முடிவு செய்தார்கள்.

இருதய சத்திர சிகிச்சைக் கூடமொன்றை அமைப்பதற்கே தெற்கிற்கு போகவேண்டுமென்றால், இன்னும் எத்தனையோ பிரச்சினைகளுக்கு தீர்வுகாணவும் தெற்கு நோக்கியே உறவைப் பலப்படுத்த வேண்டியுள்ளது.

இதையே அரசியலிலும் செய்ய வேண்டியுள்ளது. வரலாற்றின் பக்கங்களை புரட்டிப்பார்த்தால் அத்தனை பக்கங்களிலும் வடக்கும் தெற்கும் துண்டிக்கப்பட்டிருந்தபோது அழிவுகளும் இழப்புக்களுமே அதிகம் இடம்பெற்றுள்ளது. தெற்கிற்கு வடக்குநோக்கிய தேவைகளை விடவும் வடக்குக்கு தெற்கு நோக்கிய தேவைகளே அதிகமாக இருந்துள்ளது.

வடக்கும் தெற்கும் சுமூகமான சூழலில் இருந்தபோது வடக்கில் அழிவுகள், இழப்புக்கள் மிக மிகக் குறைவு. அபிவிருத்தியும், கட்டுமானமும் எழுச்சிபெற்றுள்ளது. வாழ்வாதாரம், நம்பிக்கை பெற்றுள்ளது. அவ்வாறான உறவு பலப்படுத்தப்பட்டு, வளர்த்தெடுக்கப் பட்டிருந்தால் வடக்கின் முன்னேற்றம் பல மடங்கு அதிகரித்திருக்கும்.

ஆனால் தமிழ் மக்களிடையே வடக்கு, தெற்கு உறவை சலுகை அரசியலாகவும் தேசியத்தின் துரோகமாகவும் முட்டாள்தனமான பிரசாரம் ஆழமாக பரப்பப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியமானது தமிழ் மக்களை பாதுகாப்பதாகவும், த்னித்துவத்தை பாதுகாப்பதாகவும் அறிவியல் சார்ந்த முன்னெடுப்பாகவும் கையாளப்படவில்லை என்பதை இப்போது சில புத்திஜீவிகள் சிலாகிக்கத் தொடங்கி இருக்கின்றார். ஆனாலும் இந்த உண்மையை புதிய தளத்திற்கு கொண்டுவருவதற்கு துணிச்சல் கொண்டுவருவதை ஒரு விஷப் பரீட்டையாகவே அவர்கள் கருதுகின்றார்கள்.

ஆகையால், தேசியத்தை இனவாதமாக்கி அதற்குள் அரசியல் இலாபம்பெறும் கூட்டமைப்பினரின் முதுகிலேயே தேசியம் பற்றிய விமர்சனத்தை சுமத்திவிட்டு முன்னோக்கித் தள்ளிப்பார்க்கும் துரதிர்ஷ்டம் பரீட்சிக்கப்படுகின்றது. இந்த கையறுந்த நிலையானது வடக்கிற்கும், தெற்கிற்கும் ஒரு இடைவெளியை பாதுகாத்துக் கொண்டு தமிழ் மக்களை பதற்றப் படுத்திக்கொண்டோ அல்லது பிரச்சினைகளுக்குள் வைத்துக் கொண்டோ மாற்றமொன்றை சிந்திப்பதாகும்.

தமிழ் மக்களின் சிந்தனை புதிய தளத்துக்கு நகர்த்தப்படுமாக இருந்தால் வடக்கிற்கும், தெற்கிற்குமான இடைவெளிகள் குறைந்துவிடும். எதிர்ப்பு அரசியல் அநாவசியமாகிவிடும். உறவு பலப்பட்டுவிடும் என்ற அச்சம் தமிழ்த் தேசிய அரசியல் கூடாரத்துக்குள் பலமாகவே உள்ளது.



தொடருக்காக, அந்த நாளைய 1800ஆம் ஆண்டு பிரிட்டிஷ் ரயில்வே சிஸ்டத்தின் பின்னணி பற்றி கூறவேண்டியுள்ளது. இதோ, அந்த விபரங்களை தனிக் கட்டுரையாகத் தருகிறோம்.

பிரிட்டனின் ரயில்வே சிஸ்டம் மிக வேகமாக வளரத் தொடங்கிய நேரம் அது. ஆனால் லண்டன் நகருக்கு ஒரு மைய (சென்ட்ரல்) ரயில்வே ஸ்டேஷன் இருக்கவில்லை.

ஒவ்வொரு திசையிலும் செல்லும் ரயில்வே பாதைகள் ஒவ்வொரு தனியார் நிறுவனத்தினால் அமைக்கப்பட்டு தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான பாதைகளாக இருந்தன. இதனால் எல்லாப் பாதைகளும் ஒரு சென்ட்ரல் ரயில்வே நிலையத்துக்கு வந்துசேரும்படியான அமைப்பு இருக்கவில்லை.

1800–களின் நடுப்பகுதியில் லண்டனின் ஒரு முனையில் இருந்து மற்றொரு முனைக்குச் செல்லவேண்டும் என்றால், ஒரு தனியார் ரயில்வே லைனில் ஏறி, அது முடிவடையும் ஸ்டேஷனில் இறங்கி, குதிரைவண்டி மூலமாக மற்றுமோர் நிறுவனத்துக்குச் சொந்தமான ஸ்டேஷனுக்குப் போய், அவர்களது ரயில்வே லைனில் பயணிக்கவேண்டும்.

இதனால், ஒவ்வொரு தனியார் ரயில்வே நிறுவனமும் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு ரயில்வே நிலையத்தை அமைக்கத் தொடங்கின. விக்டோரியா ஸ்டேஷனும், கிங்ஸ் குரொஸ் ஸ்டேஷனும் 1851இல் அமைக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து வேறு சில ஸ்டேஷன்களும் அமைக்கப்பட, இறுதியில் 1899இல் மேரி லெபோன் ஸ்டேஷன் கட்டிமுடிக்கப்பட்டபோது லண்டனில் மொத்தம் 15 மெயின் ரயில்வே ஸ்டேஷன்கள் இருந்தன. எந்தவொரு ஐரோப்பிய நகரத்திலும் இல்லாத அதிக எண்ணிக்கையில்.

இந்த ரயில்வே ஸ்டேஷன்களை அமைத்த தனியார் ரயில்வே நிறுவனங்களில் ஒன்று 'சௌத் ஈஸ்ட்டர்ன்' ரயில்வே. இவர்களது ரயில் செல்வது லண்டனில் இருந்து கரையோர நகரமான போக்ஸ்டோன் நகரத்திற்கு. கிட்டத்தட்ட 80 மைல்கள் தூரம் பயணம்.

# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



'சௌத் ஈஸ்ட்டர்ன்' ரயில்வேயின் ரயில்கள் 1851ஆம் ஆண்டுவரை லண்டனின் மையப் பகுதிவரை வரவில்லை. 'லண்டன் பிரிட்ஜ்' ரயில்வே நிலையம் 1851இல் மீண்டும் கட்டப்பட்டபோதுதான் 'சௌத் ஈஸ்ட்டர்ன்' ரயில்வே நிறுவன ரயில்கள் லண்டனுக்குள் வரச் சந்தர்ப்பம் கிடைத்தது.

தேம்ஸ் ஆற்றின் தெற்குக் கரையில் அமைக்கப்பட்டிருந்த 'லண்டன் பிரிட்ஜ்' ரயில்வே நிலையம்தான் லண்டனின் மிகப் பழைய ரயில்வே நிலையம். 1836இல் லண்டன் அன்ட் கிரின் விச் ரயில்வே நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட அந்த ரயில்வே ஸ்டேஷன் மிகச் சிறியதாகவும் வசதியற்றதாகவும் இருந்துவிட, பயணிகளிடம் அவ்வளவாக பிரபல்யமாக இருக்கவில்லை.

எனவே 1851இல் மீண்டும் கட்டப்பட்டு, நியூ 'லண்டன் பிரிட்ஜ்' ஸ்டேஷன் என்றபெயருடன் பயணிகளுக்காகத் திறந்துவிடப்பட்டது.

இப்படி அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில்தான் 'சௌத் ஈஸ்ட்டர்ன்' ரயில்வே தனது ரெயில் சேவைக்காக லண்டனுக்குள் ஒரு ஸ்டேஷன் தேவை என்று தேடத் தொடங்கியிருந்தது. அவர்களது பார்வையில் இந்த நியூ 'லண்டன் பிரிட்ஜ்' ஸ்டேஷன் தட்டுப்படவே, ஸ்டேஷன், தண்டவாளம், பிளாட்பாரம், ரயில்வே அலுவலகங்கள் ஆகியவற்றை தங்களது சேவைக்கு பயன்படுத்துவதற்கு ஒரு லீஸ் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது.

அதன்படி, அந்த ரயில்வே ஸ்டேஷன், 'லண்டன் அன்ட் கிரின்விட்ச் லைன்' நிறுவனத்துக்கு சொந்தமானது. அங்கே ரயில் சேவையை நடத்தியது 'சௌத் ஈஸ்ட்டர்ன்' ரயில்வே.

மேலே குறிப்பிடப்பட்டதுதான், 'லண்டன் பிரிட்ஜ்' ரயில்வே ஸ்டேஷனின் பின்னணி.

இதை இவ்வளவு விலாவாரியாக இந்த ரயில்வே ஸ்டேஷனில்தான் எம்து தொடர் 'முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை'யின் முக்கிய கொள்ளை முன்னேற்பாடு ஒன்று நடந்தது.

'லண்டன் பிரிட்ஜ்' ஸ்டேஷனிலுள்ள அலுவலக மேலதிகாரியின் அலுவலகத்தில் நான்கு அறைகள் இருந்தன. இரண்டு அறைகள் கிளார்க்குகள் அமர்வதற்கு ஒதுக்கப்பட்டவை. ஒரு அறை பெறுமதியான (வேல்யூ) பொருட்களை வைக்கும் ஸ்டோர் ரூம். நான்காவது அறை அலுவலக மேலதிகாரியின் பாவனைக்கு.

எல்லா அறைகளின் முன் சுவர்களும் பெரிய கண்ணாடி ஜன்னல்கள் பதிக்கப்பட்டிருந்தன. அத்துடன் எல்லா அறைகளும் கட்டடத்தின் இரண்டாவது தளத்திலே இருந்தன. இந்த அலுவலகங்களுக்கு செல்லும் பாதை ஒன்றே ஒன்றுதான். அது ரயில்வே ஸ்டேஷன் பிளாட் பாரத்தில் இருந்து மேலே செல்லும் இரும்புப்படிகள்.

(தொடரும்...)





# புலிகளின் வதை முகாமில்

## வதை 127 — மணியம்

சில விடயங்களில் முந்திக் கொள்பவனே வெற்றிவாகை சூடிக் கொள்கிறான் என்ற உண்மை, பல தடவைகள் வரலாற்றில் நிரூபிக்கப் பட்டிருக்கிறது. பிரேமதாசவின் கொலை இதற்கு ஓர் உதாரணம். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை புலிகள் மனித வெடிகுண்டு மூலம் கொலை செய்ததை இன்னொரு உதாரணமாகக் கூறலாம்.

1987இல் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் இந்திய - இலங்கையுடன் படிக்கையைச் செய்வதற்காக அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொழும்பு வருகை தந்த சமயத்தில், அவருக்கு அளிக்கப்பட்ட இராணுவ அணி வகுப்பு மரியாதையின்போது, கடற்படை வீரன் ஒருவன் அவரைத் துப்பாக்கிப்பிடியால் தாக்கிக் கொலைசெய்த முயன்ற போது, அவர் தனது புத்திசாதுரியத்தினால் தன்னைத் தற்காத்துக் கொண்டார். அந்தச் சிங்களக் கடற்படை வீரன் முயன்று தோற்ற விடயத்தைப் பின்னர் (21.05.1991) புலிகள் இந்திய மண்ணில் வைத்து - அதுவும் தமிழ்நாட்டில் வைத்து - ஒரு பெண் மனித வெடிகுண்டின்மூலம் நிறைவேற்றி அவரது உயிரையும் மாய்த்துவிட்டார்கள்.

இதில் கவனிக்கவேண்டிய முக்கிய விடயம் ஒன்று உள்ளது. புலிகளால் கொல்லப்பட்ட இந்த முக்கியமான இரண்டு அரச தலைவர்களும் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையில் எதிரும் புதிருமானவர்கள்.

ஒருவர், அதாவது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைத் தமிழ் மக்களின் நலனுக்காக, அதேநேரத்தில் பிரேமதாசவினாலும் புலிகளினாலும் வெறுக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர். அவரையும் புலிகள் கொலை செய்தனர்.

இன்னொருவர், அதாவது இலங்கை பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் இருந்த ஆர்.பிரேமதாச சிங்களப் பேரினவாதி. அவருடன் புலிகள் கூட்டு வைத்து, வடக்கு - கிழக்கு மாகாண சபையை அவர்மூலம் இல்லாமல்செய்து, தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டு, அவரையும் புலிகள் பின்னர் போட்டுத் தள்ளிவிட்டார்கள்.

இந்த விடயத்தில் பிரேமதாச போல, ராஜீவ் காந்தியும் புலிகளிடம் ஏமாந்துவிட்டதாகவே அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. இந்திய அமைதிப்படை புலிகளுக்கு எதிராக எடுத்த இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, புலிகளின் கட்டமைப்பு முற்றாக நொருக்கப்பட்டு, பிரபாகரன் உள்ளிட்ட புலிகளின் முக்கிய தலைவர்கள் சுமார் 200 பேர் அடங்கிய குழுவொன்றை, இந்திய அமைதிப் படை முல்லைத்தீவு நித்திகைக் குளம் காட்டுப் பகுதியில் சுற்றி வளைத்திருந்தது.

இந்த நிலைமையில் புலிகளின் தலைவர்களை உயிருடன் கைது செய்வதா அல்லது கொல்வதா என்ற இறுதி நடவடிக்கையை மேற்கொள்வதற்காக, இலங்கையிலிருந்த அமைதிப் படையின் உயர்பீடம் (அது பெரும்பாலும் இந்திய அமைதிப்படையின் தளபதியாக இருந்த ஜெனரல் கல்கத் எனப் பலராலும் ஊகிக்கப்படுகிறது) இந்திய அரசின் தலைமையுடன் (பிரதமர் ராஜீவ் காந்தி எனக் கூறப்படுவதுண்டு) கலந்தாலோசித்ததாகவும், புலிகளைக் கொல்லாமல் தப்பிப் போவதற்கு அனுமதிக்கும்படி புதுடில்லியிலிருந்து ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் கூறப் படுகிறது.

இந்த விடயம் எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியவில்லையாயினும், பிற்காலத்தில் இந்திய அமைதிப் படையில் இலங்கையில் பணியாற்றிய சில அதிகாரிகள் எழுதி வெளியிட்ட நூல்களை வாசிக்கையில், இந்த மாதிரியான ஒரு சம்பவம் நடந்ததிற்கான சாத்தியங்கள் இருக்கின்றது.

இந்திரா காந்தியின் காலத்திலும் சரி, அவரது மகன் ராஜீவ் காந்தியின் காலத்திலும் சரி, இலங்கையில் இந்தியா தலையீடுகளை மேற்கொண்டதற்குத் தமிழர் பிரச்சினை மட்டும் ஒரு காரணம் அல்ல, குறிப்பாக, அமெரிக்காவுக்கும் ஏனைய மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளுக்கும் ஆதரவான ஐ.தே.க அரசாங்க காலங்களிலேயே, இந்தியா இலங்கையில் அதிக தலையீடுகளைச் செய்திருக்கிறது. அதற்கொரு காரணம், தனக்கு மிகமிக அருகிலுள்ள தென்பக்கக் கோடிக்குள் தனக்கு விரோதமான சக்திகள் காலூன்ற விடக்கூடாது என்பதுதான்.

இந்தியாவைப் பொறுத்தவரையில், ஆரம்பத்தில் அது புலிகள் மீது விரோதமான நிலைப்பாடு எதனையும் கொண்டிருக்கவில்லை. பின்னர் புலிகள் மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளுடனும், பிரேமதாச அரசுடனும் தொடர்புகளைக் கொண்டிருந்தபோதிலும், இந்தியா புலிகளை முற்று முழுதாகக் கைகழுவி விடும் எண்ணத்துடன் செயற்படவில்லை. புலிகளைக் கட்டுக்குள் கொண்டு வரும் அதேவேளையில், இலங்கையில் இருந்த ஐ.தே.க அரசையும் கட்டுக்குள் வைத்திருக்கவே இந்தியா விரும்பியது. அதனாலேயே புலிகள் இந்தியாவுக்கு எதிராகச் செயற்பட்டபோதிலும், இந்தியா விட்டுக்கொடுப்புடனேயே நடந்து கொண்டது. அதன் ஓர் அங்கமாகவே முல்லைத்தீவு நித்திகைக் குளம் காட்டுக்குள் இந்திய அமைதிப் படையிடம் சிக்கிய புலித் தலைவர்களை இந்தியா 'தந்திரோபாயம்' எனக் கருதித் தப்பிப்போக விட்டிருக்கலாம்.

ஆனால் புலிகளுக்கு இந்தியாவின் பூகோள அரசியல் பற்றியோ, அல்லது இந்தியாவின் இலங்கை குறித்த தந்திரோபாயங்கள் குறித்தோ, எந்த விதமான புரிந்துணர்வும், முக்கியமாக அக்கறையும் இருக்கவில்லை, குறிப்பாகப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் பொறுத்தவரை, ஓர் ஆரம்பப் பாடசாலை மாணவனுக்கு இருக்கும் "எனக்கு அடித்தவனைத் திருப்பி அடிக்காமல் விடமாட்டேன்" என்ற மனோபாவமே மேலோங்கியிருந்தது. அதைப் புரிந்து கொள்ளாததால்தான், இந்தியா அநியாயமாக ராஜீவ் காந்தியை புலிகளிடம் பலிகொடுக்க வேண்டி வந்தது.

இந்த விடயங்களை இங்கு நான் விவரிப்பதற்குச் சில காரணங்கள் உண்டு. புலிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக மிகவும் அர்ப்பணிப்புடன் போராடுபவர்கள் எனத் தம்மைச் சொல்லிக்கொண்டாலும், புலிகள் நடைமுறையில் வரலாறு முழுவதும் தமிழ் மக்களுக்கு தீங்கையே விளைவித்து வந்துள்ளார்கள்.

முதலில் ஜே.ஆர். தலைமையில் உருவான சிங்கள இன வெறி அரசுக்கெதிராகப் போராடப் புறப்பட்ட ஏனைய தமிழ் போராளிக் குழுக்களை அழித்து, தமிழ் மக்களின் போராட்ட சக்தியைப் பலவீனப்படுத்தினார்கள். பின்னர் தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் தலைமைகள், புலமை சார் அறிஞர்கள், சிறந்த நிர்வாகிகள் என எல்லோரையும் அழித்தொழித்தார்கள். ஜே.ஆர். அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கைகளை கட்டுக்குள் கொண்டுவந்த இந்திய அமைதிப்படையுடன் போர் புரிந்தார்கள். அதன்பின்னர் எதிரியுடன் சேர்ந்து, தமிழ் மக்களுக்குக் கிடைத்த வரப் பிரசாதமான இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையை இல்லாதொழித்தார்கள். (அதை இல்லாதொழித்துவிட்டு, இன்று புலிகளின் வாரிசுகளான கூட்டமைப்பினர், பிரித்த மாகாணசபைக்காவது அதிகாரம் தாருங்கள் என்று கெஞ்சித் திரியும் நிலையில் இருக்கின்றனர்)

பின்னர் இலங்கைத் தமிழர்களுக்கு (சுயலாபம் இருந்தபோதிலும்) எப்பொழுதும் பக்கபலமாக இருந்துவந்த இந்தியாவின் ஒரு மதிப்புக்குரிய தலைவரை, நேருவின் பேரன் பிரதமர் ராஜீவ் காந்தியை தமிழக மண்ணிலேயே வைத்துப் படுகொலை செய்தனர். இவைகள் எல்லாம் இரத்தக் காட்டேரிகளான புலிகள் எதிரியை அழிப்பதாகச் சொல்லிக்கொண்டு, இலங்கைத் தமிழினத்துக்கு எதிராகச் செய்த வேலைகள். அத்துடன் புலிகள் நின்றுவிடவில்லை.

(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்

116

பா.ராகவன்

**ஆகவே** கிராமம் கிராமமாக தினசரி ரெயட்டுக்கு போவார்கள். பாழடைந்த கட்டடங்கள், பாலைவனப் பகுதிகள், குன்றுகள், குகைகள், மசூதிகள் என்று திட்டமிட்டுச் சென்றுதேடி போராளி களின் ஆயுதங்களைப் பறிமுதல் செய்து அழித்துவந்தார்கள்.

ஆகவே பலஸ்தீன் போராளிகள் தமக்கான ஆயுதங்களை உள்ளூரில் தயாரிக்க முடியாத சூழல் ஏற்பட்டது. சிரியாவிலிருந்தும் எகிப்தில் இருந்தும் ஜோர்டானில் இருந்தும் சற்றுத் தள்ளி ஈராக்கிலிருந்தும் அவர்கள் ஆயுதங்களை இரகசியமாகத் தருவித்துக் கொண்டிருந்தார் கள். பேரீச்சம்பழ மூட்டைகளின் அடியில் பதுக்கி துப்பாக்கிகளை அவர்கள் கடத்தினார் கள். பயணிகள் வாகனங்களில் இரகசிய அறைகள் ஏற்படுத்தி அதன்மூலம் ஆயுதங்கள் கடத்தினார்கள். எல்லையோர கிராமவாசிகள், ஆடுகள் மேய்ப்போர், நாடோடிக் கூட்டங்களைச் சேர்ந்தவர்களைக் கருவி களாகப் பயன்படுத்தி அவர்கள்மூலம் ஆயுதங்களைக் கடத்தினார்கள். எல்லையோர கிராமவாசிகள் ஆடுகள் மேய்ப்போர், நாடோடிக் கூட்டங்களைச் சேர்ந்தவர்களைக் கருவி களாகப் பயன்படுத்தி அவர்கள்மூலம் ஆயுதம் கடத்தினார்கள்.

இப்படி பலஸ்தீனுக்கு ஆயுதம் அனுப்ப ஒவ்வொரு நாட்டிலும் சில குழுக்கள் இருந்தன. எல்லைவரை ஆயுதங்களைக் கொண்டுவந்து உரியவர்களிடம் சேர்ப்பித்துவிட்டுச் செல்வது அவர்களது பணி.

அப்படியான ஒரு குழுவின் தொடர்பு தான் அரபாத்துக்கு முதல் முதலில் ஏற் பட்டது. பலஸ்தீன் விடுதலைக்காகத் தன்னாலான எதையாவது செய்யவேண்டும் என்றுகருதிய அரபாத் ஆயுதங்களை எல்லைவரை கடத்திச் சென்று கொடுத்து வரும் பணியை மனமுவந்து ஏற்றுக் கொண்டார். இந்தப் பணி தன் படிப்பை பாதித்தாலும் பரவாயில்லை என்பதே அவரது கருத்தாக இருந்தது. ஆனாலும் பள்ளிப் படிப்பில் அவர் சுமாரான மதிப்பெண்களைப் பெறவே செய்தார்.

பள்ளிப் படிப்பு முடிந்ததும் அரபாத் கெய்ரோவில் உள்ள பாத் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பட்டப்படிப்பைத் தொடங்கினார். பின்னாளில் இதுதான் கெய்ரோ பல்கலைக்கழகம் என்று அறியப் பட்டது. இந்தப் பல்கலைக்கழகத்தில் அரபாத் படிக்கத் தொடங்கியது கட்டுமானப் பொறி யியல் படிப்பு. இந்தப் படிப்பில் சேர்வதன் மூலம் பாலைவனங்களுக்கும் மலைப் பகுதிகளுக்கும் நிறைய பயணம் மேற் கொள்ள வாய்ப்பிருக்கும் என்று அவர் கருதினார். கல்லூரிமூலமாகவே பலஸ்தீன் செல்லவும் சந்தர்ப்பம் கிடைக்கலாம் என்று நினைத்தார். ஏனெனில் அன்றைக்குப் பல்வேறு மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தும் பொறியியல் மாணவர்கள், கட்டடங்களை ஆய்வுசெய்ய புராதன கட்டுமானங்களைப் பற்றி அறிந்துகொள்ள ஜெருசலேத்துக்கு வந்துகொண்டிருந்தார்கள். அப்படியொரு சந்தர்ப்பம் தனக்கும் கிடைத்தால் அடிக்கடி ஜெருசலேத்துக்குச் செல்லமுடியுமே என்று அவர் கருதியிருக்கலாம்.

ஆனால் அதற்கெல்லாம் அவசியமே இல்லாமல் போய்விட்டது. 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் உருவாகி, அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் யுத்தம் மூண்டிருந்த தருணம். அரபாத்துக்கு அப்போது பத்தொன்பது வயது.

ஏற்கெனவே பலஸ்தீன் போராளிகளுக்கு உதவவேண்டும் என்கிற எண்ணத்தில் இருந்த அரபாத்துக்கு யுத்தத்தில் அரபு முஸ்லிம்கள் பட்டுக்கொண்டிருந்த காயமும் அவமானமும் ஆறாத வடுவாகிப்போனது. வழிகாட்ட ஒரு நாதியில்லாமல் இப்படி நிலத்தை இழந்து தவிக்கிறார்களே என்று கண்ணீர்விட்டார். அதாவது ஏதாவது செய்ய மாட்டோமா என்று அவர் மனம் ஏங்கியது. இஸ்ரேலியர்கள் அத்தனைபேரையும் நிற்க வைத்துச் சுடவேண்டும் என்கிற வெறி மேலோங்கியது. இதற்குமேல் தன்னால் படிப்பில் கவனம் செலுத்தமுடியுமா என்று சந்தேகப்பட்டார். உடனடியாகச் சில தோழர் களுடன் எகிப்து எல்லையைக் கடந்து காஸா பகுதிக்குள் புகுந்தார். யுத்தத்தில் பங்கெடுக்கத் தொடங்கினார்.



கவனிக்கவும். அரபாத்துக்கு அப்போது பெரிய போர்ப்பயிற்சிகள் கிடையாது. முதல் முறையாக ஆயுதங்களைப் பயன்படுத்தினார். எப்படிச் சுடவேண்டும் என்பதுகூடத் தெரி யாது. இலக்கு சரியாகப்பட்டால் அதிர்ஷ்டம் என்கிற நிலையில்தான் இருந்தார். தனக்கு மட்டுமல்ல பெரும்பாலான பலஸ்தீனப் போராளிகளும் தன்னைப் போலத்தான் இருக்கிறார்கள் என்பதையும் கவனித்தார். ஒருங்கிணைக்கும் சரியான தலைமை இல்லாமல், தளபதி இல்லாமல் காட்டான் களின் கூட்டம்போல் அவர்கள் மூர்க்கத் துடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களது நோக்கம் ஒன்று மட்டும்தான் தெளிவாக இருந்ததே தவிர, வழிமுறைகள் எதுவுமே அவர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை.

யுத்தத்தில் அராபியர்கள் அடைந்த வீழ்ச்சி அரபாத்தை மிகவும் பாதித்தது. உதவிக்குவந்த சகோதர அரபு தேசங் கள் அனைத்தும் அமைதி ஒப்பந்தம் என்கிற பெயரில் ஆளுக்குக் கொஞ்சம் இலாபம் பார்த்துவிட்டு ஊர் திரும்பியதும் அவரை வருத்தமுறச் செய்தது. விரக்தியில் என்ன செய்வதென்று புரியாமல் சில காலம் பிரமை கொண்டு திரிந்தார். தன்னால் மேற்கொண்டு கெய்ரோவில் படித்துக்கொண்டிருக்க முடியும் என்று அவருக்குத் தோன்றவில்லை.

ஒரு கட்டத்தில் அந்தப் பிராந்தியத்தை விட்டே விலகி எங்காவது போய்த் தனியாக வசித்தால் உருப்படியாகத் தன்னால் யோசிக்க முடியும் என்று அவருக்குத் தோன்றியது.

( தொடரும்...)

# காதல் ஊழல்



**விடுதலை** மெதுவாக கண்விழித்து "அம்மா பசிக்குது" என்றான். அந்தச் சோகக்குரல் எஜமானியின் காதுக் குருத்தை கிழப்பதுபோல் உணர்ந்தாள். உடனே எஜமானி சமயலறை நோக்கி விரைந்தாள். தாய்க்கும் மகனுக்கும் மீன் குழம்பும் சோறும் பகிர்ந்துகொண்டு "இந்தாங்கோ சாப்பிடுங்கோ. நான் குடிக்க தண்ணீர் எடுத்திட்டு வாறென்"

தண்ணீர் கொண்டுவருவதற்குள் தட்டில் சோறு முடிந்திருந்தது... எஜமானிக்கு அதிர்ச்சி என்றாலும் பசியின் கொடுமையை பகிர்ந்துகொண்ட சந்தோசம்.

அதன்பிறகு இரண்டாம்கட்ட விசாரணை ஆரம்பமானது. "அம்மா" என்று மெதுவாக அன்புகலந்த குரலில் நாவசைத்தாள் எஜமானியம்மா.

கேள்விகளை மறுபடியும் தொடுத்தாள்.

எஜமானியின் திரையரங்கில் பொன்னம்மாவின் குடும்பப்படத்தை திரையிட்டாள்.

பொன்னம்மாவின் வாழ்க்கையைப்போல் கண்ணீர் வரலாற்றை இதுவரை பார்த்ததில்லை. அதையும்விட சினிமா படம் பார்ப்பதற்கு வன்னியில் அப்போது தடை... என்றாலும் புலிகள் அமைப்பின் நிதர்சனப் பிரிவு பல புதுமையான சோகக்காட்சிகளை வடிவமைத்து உணர்ச்சிப்படங்களை வெளியிட்டது. அப்படியான படங்களைக்கூட பார்த்து அழாத எஜமானி பொன்னம்மாவின் கதைகேட்டதும் அழுதுவிட்டாள். வீட்டு எஜமானியின் பெயர் பிரிந்தா. அவளின் கணவனின் பெயர் ரூபன். பிரிந்தா பெறுமதியான ஒரு முடிவெடுப்பதற்காக சிந்தித்தாள்.

அதாவது தாயை தன் வீட்டில் தங்க வைப்பதற்காகவும் மகனை தன் கணவனுடனேயே அனுப்பிவிட்டாள்... என்று முடிவு முடியாத பாதியில் இருக்கையில் கணவன் ரூபனின் குரல் கேட்டது.


"பிரிந்தா கேற்றை திறவுங்கோ"

"இருங்கோ... வாறென்" என்று கூறிக்கொண்டு ஓடிச்சென்று கேற்றைத் துறந்தாள்.

வீட்டுக்குள்ளே நுழைந்த ரூபன் விறாந்தையில் இருந்த சோபாவில் சாய்ந்தவண்ணம் "பிரிந்தா குடிக்கத் தண்ணி எடுத்திட்டு வாங்கோ" அவன்கூறி ஒரு நிமிடத்திற்குள் தண்ணீர்க்கோப்பையை நீட்டினாள் பிரிந்தா.

"இந்தாங்கோ தண்ணி"

அவன் தண்ணீரை குடித்துக்கொண்டிருக்கும்போது பொன்னம்மா



வின் கதையை துவங்கினாள் பிரிந்தா.

ரூபன் கதையைக்கேட்டதும் உடனே மறுத்துவிட்டான்.

அதற்கு பல காரணங்களை கூறினான். ஒருவகையில் அப்படிக் கூறியது நியாயம்தான். புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது எப்படி இருக்கவேண்டுமோ... அப்படித்தான் இருக்கவேண்டும். வௌவாலின் வீட்டுக்குப்போனால் தொங்கித்தானே வாழ வேண்டும்...?

"நீங்க சொன்னால் சரிதானே?" என்றாள் பிரிந்தா.


"நான் சொன்னால் சரிதான். நான் கதைத்துப் பார்க்கிறேன்" தன்மானம் இழக்காமல் தன் மனைவியிடம் அப்படிக் கூறினான்.

எது எப்படியானாலும் அவன் இதயத்தில் இடிமின்னலுடன் அடைமழையும் அடிக்கடி பொழிந்தது...!

(ஊழல் தொடரும்...)

மிஹிந்தலை A.பாரிஸ்

PUBLIC LIBRARY
JAFFNA.



**வே. அர்ச்சுணன்**

# யாழில் இருந்து 06 முள்ளிவாய்க்கால் வரை

**புதிய தொடர்**



பொங்குதமிழ் நிகழ்வு தொடர்பான வேகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த அதேவேளை மகேஸ்வரனை சமாளிப்பது பெரும் கஷ்ரமாக இருந்தது.

பொங்குதமிழ் நிகழ்வில் எப்படியாவதுதான் கலந்து கொள்ளவேண்டும், தன்னை அந்த நிகழ்வில் எப்படியாவது உரையாற்றவிடவேண்டும் என்பதில் அமைச்சர் மகேஸ்வரன் விடாப்பிடியாக இருந்தார்.

பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் சிவரூபன்மூலம் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியைச் சந்தித்ததால் மகேஸ்வரன் அடுத்தகட்டமாக ஊடகவியலாளர் வித்தியாதரனுடன் தொடர்புகொண்டு வித்தியாதரன் ஊடாக பல்கலைக்கழக மாண்வர் ஒன்றியத் தலைவர் கஜேந்திரனுடன் தொடர்பை ஏற்படுத்தி அந்தத் தொடர்பின் ஊடாக பொங்குதமிழ் நிகழ்வில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அரசியல் இலாபம் தேட துடித்துக் கொண்டிருந்தார்.

இந்தவேளையில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய தலைவர் கஜேந்திரனும், செயலாளர் திவ்வியனும் மகேஸ்வரனைச் சந்திப்பதற்குரிய நாள் நேரம் என்பன குறிக்கப்பட்டு ஒரு திங்கட்கிழமை அதிகாலை ஆறுமணிக்கு பலாலி வீதியில் உள்ள மகேஸ்வரனின் இல்லத்தில் இந்த சந்திப்பிற்குரிய ஏற்பாடுகளை ஊடகவியலாளர் வித்தியாதரன் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த ஏற்பாட்டின் பிரகாரம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தினருக்கும், மகேஸ்வரனிற்கும் இடையேயான முதலாவது சந்திப்பு இடம்பெற்றது. இந்த சந்திப்பு இடம் பெறுவதற்குமுன்னர் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் மகேஸ்வரனிற்கு ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது.

அதாவது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும், உங்களுக்கும் இடையில் நடக்கின்ற எந்த ஒரு சந்திப்புக்களும் வெளியில் தெரியக்கூடாது.

குறிப்பாக இது தொடர்பாக ஊடகங்களுக்கு நீங்கள் தெரியப் படுத்தக்கூடாது. அத்துடன் இது தொடர்பாக எந்த ஒரு ஊடகத்திலும் செய்தியும் வரக்கூடாது என்ற நிபந்தனையுடனேயே இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் கலந்து கொண்ட மகேஸ்வரன் நானும் தமிழன்தானே என்னையும் பொங்கு தமிழ் நிகழ்வில் உரையாற்ற நீங்கள் விடவேண்டும் என்று மாணவர்களிடம் கேட்டபோது எங்களுக்கு அதில் உடன்பாடு உள்ளது. ஆனால் அரசியல் ரீதியாக அது பிழையாகப் பார்க்கப்படும்.

நீங்கள் பொங்குதமிழ் நிகழ்விற்குரிய முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கமுடியும். அதையும் நாங்கள் மறுக்கமாட்டோம். ஆனால் முதல் பொங்குதமிழ் நிகழ்வில் உங்களை உரையாற்ற விடுவதில் எங்களுக்கு சில சிக்கல்கள் இருக்கின்றது. ஆனால் உங்களை நாங்கள் முழுமையாக நம்புகின்றோம். படையினர் ஏதாவது குழப்பங்களில் ஈடுபட்டால் அதைத் தடுக்கும் வல்லமை உங்களிடம் இருக்கின்றது.

"நீங்கள் எங்கள் பக்கம் நிற்பீர்கள்" என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கின்றது என்று கூறியபோது சரி பொங்குதமிழ் நிகழ்வை பார்ப்பதற்கு வருவதற்காவது அனுமதிப்பீர்களா? என்று மகேஸ்வரன் சின்னப்பிள்ளை போன்று குழைந்துகொண்டு கேட்டபோது கண்டிப்பாக நீங்கள் மட்டுமல்ல, ஏன் யாழ்.மாவட்ட படைத்தளபதி வந்து பார்வையிட்டால்கூட நாங்கள் தடுக்கமாட்டோம். எவரும் பார்வையிடலாம். ஆனால் யாராவது இடையூறு விளைவித்தால் மட்டுமே பிரச்சினைக்குரிய விடயமாக இருக்கும். இந்த விடயத்தில் நாங்கள் உங்களது முழுமையான ஆதரவை எதிர்பார்க்கின்றோம். இதைத்தான் வன்னியிலுள்ள புலிகளின் தலைமைப்பீடமும் எதிர்பார்க்கின்றது.

நிச்சயமாக அடுத்த பொங்குதமிழ் நிகழ்வில் உங்களை கலந்துகொள்ள இடமளிப்போம் என்று கூறியபோது, மட்டற்ற மகிழ்ச்சி அடைந்த மகேஸ்வரன் உங்களது பொங்குதமிழ் நிகழ்விற்கு என்ன உதவி தேவை என்றாலும் தொடர்புகொள்ளுங்கள் நான் தருவேன் என்றுகூறி மாணவர்களை வழியனுப்பி வைத்தார். ஆனால் பல்கலைக்கழக மாணவர்களின் பதிலில் திருப்தி



கொள்ளாத மகேஸ்வரன் பொங்குதமிழ் நிகழ்வில் தான் கலந்துகொண்டு அரசியல் செய்யலாம் என முயன்றபோது அது முடியவில்லையே என்று மனதுக்குள் வெதும்பிக்கொண்டார்.

ஆனால் பொங்குதமிழுக்குரிய ஏற்பாடுகள் துரிதமாக இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது யாழ்.பல்கலைக்கழக வளாகத்தை சூழ படையினர் இடையிடையே பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டதுடன் படைப் புலனாய்வுத் துறையினரும் சிவில் உடையில் ஆங்காங்கே நடமாடிக்கொண்டிருந்தனர்.

படைப் புலனாய்வுத் துறையினரின் இத்தகைய செயற்பாட்டைக் கண்டு அச்சமடைந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் படையினரை வைத்து பொங்குதமிழுக்கு விளம்பரம் தேட முற்பட்டதுடன் இவர்களை வைத்து பொங்குதமிழ் நிகழ்வுக்குரிய அரசியலையும் செய்யலாம் என்று முடிவெடுத்து எழுந்தமானமாக பொங்கு தமிழ் நிகழ்வை குழப்பும்நோக்கில் பல்கலைக்கழக வளாகத்தைச் சூழ படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், படையினருடன் புலனாய்வுத் துறை யினரும், புலனாய்வுத் துறையினரும், புலனாய்வுத் துறையினருடன் ஈ.பி.டி.பி யினரும் இணைந்து பொங்குதமிழ் நிகழ்வை குழப்பும்நோக்கில் மாணவர்களை அச்சுறுத்தும் நோக்கில் பல்கலைக்கழக வளாகத்தைச் சூழ நடமாடுவதாகவும், இது பொங்குதமிழ் நிகழ்விற்கு படையினரும் ஈ.பி.டி.பி யினரும் போடும் முட்டுக்கட்டை என்றும் எழுந்தமானமாக மாணவர் ஒன்றியத்தினரால் ஒரு பொய்யான அறிக்கை பரப்புரை நோக்குடன் வெளியிடப்படுகிறது.

இவ் அறிக்கை வெளியிடப்பட்டு சில மணித்தியாலங்களிலேயே தமிழ் நெற் என்ற இணையத்தளத்தில் முதல் முதலாக இவ் அறிக்கை வெளியிடப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து ஏனைய வெளிநாட்டு தமிழ் ஊடகங்களிலும் பி.பி.சி - ஐ.பி.சி. போன்ற வானொலி களிலும் இச்செய்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டது. இதைவிட யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வந்த பத்திரிகைகள் கொழும்பைத் தளமாகக் கொண்ட பத்திரிகைகள் உள்ளிட்ட அனைத்துப் பத்திரிகைகளிலும் இந்தப் பொய்யான பரப்புரை உண்மைச் செய்தி போன்று பெரியளவில் முக்கியத்துவப்படுத்தி வெளி யிடப்பட்டது.

ஆனால் உண்மையில் படையினர் பாதுகாப்புக்காக சில இடங்களில் நடமாடிய போதிலும் ஈ.பி.டி.பி.யினர் ஒருவர்கூட அப்பகுதியில் நடமாடவில்லை.

இதை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும், ஊடகங்களும் நன்றாக அறிந்திருந்தபோதிலும் ஈ.பி.டி.பி க்கு களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்ற சதி நோக்கிலேயே இப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் பொங்குதமிழ் நிகழ்வை படையினரும் தமிழ்க் கட்சி ஒன்றும், ஆயுதமுனையில் குழப்புவதாக அமைச்சர் மகேஸ்வரன் பாராளுமன்றத்தில் பொழிந்துதள்ளியதுடன் லண்டன் பி.பி.சி உள்ளிட்ட ஊடகங்களிலும் தனது கண்டனக் கணைகளை எழுந்தமானமாக பொழிந்து தள்ளினார்.

அத்துடன் மட்டும் நிற்காமல் உள்ளூர் ஊடகங்களிலும் இந்த விடயம் தொடர்பில் தனது கண்டன அறிக்கைகளை வெளியிட்டு தன்னை ஒரு தமிழர்களின் தன்னிகரில்லா தலைவன் போன்று மகேஸ்வரன் காட்ட முற்பட்டபோதும் மகேஸ்வரனை தனிப்பட்ட ரீதியில் பல்கலைக்கழக மாணவர்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கவில்லை.

இதற்குப் பிரதான காரணம் மகேஸ்வரனிற்கு போதிய அரசியல் அறிவு இருக்கவில்லை என்பது ஒருபுறமிருக்க மகேஸ்வரனை ஒரு வியாபாரி போன்றே மாணவர்கள் பார்த்தார்கள்.

பல்கலைக்கழகத்திற்குள் மகேஸ்வரனது பெயரைப் பயன்படுத்தாமல் மண்ணெண்ணெய் என்று கோட்டில் மட்டும் மகேஸ்வரனது பெயரை பயன்படுத்தினார்கள். அத்துடன் மகேஸ்வரன் ஒரு பேரினவாத அரசியல் கட்சியுடன் இணைந்திருக்கிறார் என்ற குற்றச்சாட்டையும் மாணவர்கள் முன்வைத்தார்கள். தொடர்ந்து மகேஸ்வரனை எவ்வாறு கையாண்டார்கள்? பொங்குதமிழ் நிகழ்வை எவ்வாறு நடத்தினார்கள்? இதன்பின்னர் முள்ளிவாய்க் கால் வரை எமது மக்களை எவ்வாறு இழுத்துச்சென்றார்கள் என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

உலகின் ஒற்றைத் துருவ அமெரிக்க வல்லரசு, நாளைய வல்லரசு கனவில் மிதக்கும் மோடியின் இந்திய அரசை துரத்தி துரத்தி தனது அன்புவலையை வீசிக்கொண்டிருக்கிறது. மோடி அரசு பதவியேற்ற பிறகான கடந்த இரண்டரை மாதங்களில் அமெரிக்க அரசின் மூத்த அதிகாரிகள் 13 பேர் புதுடில்லிக்கு வந்து புதிய அரசை சீராட்டிவிட்டு சென்றிருக்கின்றனர்.

அதுவும் ஜூலை 31 முதலான 8 நாட்களில் பாதுகாப்பு, வர்த்தகம், வெளியுறவு என ஒபாமாவின் மூன்று மூத்த அமைச்சர்கள் இந்தியாவுக்கு அணிவகுத்து வந்திருக்கின்றனர். இவர்களில் கடைசியாக வந்தவர் அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் சக் ஹேகல் தலைமையிலான அதிகாரிகள் குழு என்பது தற்செயலானது இல்லை.


ஹேகலுக்கு முன்பு ஜூலை 31 முதல் மூன்று நாட்கள் பயணமாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரியும் வர்த்தகத் துறை அமைச்சர் பென்னி பிரிட்ஸ்கரும் பெருவாரியான அதிகாரிகள் பட்டாளத்துடன் டில்லி வந்திருந்தார்கள். கடந்த 10 ஆண்டுகளில், பல மடங்கு அதிகரித்திருக்கும் இந்திய-அமெரிக்க வர்த்தகத்தை மேலும் முடுக்கிவிடுவது, சுங்க நடைமுறைகளை தளர்த்துவதற்கான உலக வர்த்தகக் கழகத்தின் சமீபத்திய ஒப்பந்தத்தை இந்தியா ஏற்கவேண்டியதன் அவசியம் பற்றி பேசிவிட்டு போனார்கள்.

மோடி பிரதமராவது உறுதியானதும், மோடிக்கு விசா மறுத்து எரிச்சலூட்டிய இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் நான்சி பாவெலை உடனடியாக மூட்டை கட்டி அனுப்பினார்கள். 10 ஆண்டுகளாக அமெரிக்க விசா மறுக்கப்பட்டிருந்த மோடி இந்திய பிரதமரானதும், அதிபர் ஒபாமா அவருக்கு தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தார்.

மோடி அரசு பதவி ஏற்ற 10 நாட்களுக்குள் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் இந்தியா வந்தார். ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த அவரது தஜகிஸ்தான், சீனா பயணங்களுக்கு மத்தியில், வரலாறு காணாத வகையில் இந்துத்துவ பிரதமராக பதவியேற்றிருந்த மோடியின் புத்தம் புதிய அரசை எடைபோட்டு பார்க்க டில்லிக்கும் ஒரு நடை வந்து இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் விக்ரம் தொரைசாமியுடன் பேச்சுவார்த்தை நடத்திச் சென்றார்.

அமெரிக்க வெளியுறவுத் துறையில் நிஷா பிஸ்வாலுக்கு மூத்தவரான துணை அமைச்சர் வில்லியம் பர்ன்ஸ் ஜூலை 2ஆவது வாரம் டில்லிக்கு நேரில் வந்தார். மோடியை செப்டெம்பர் மாதம் அமெரிக்கா வருமாறு அதிபர் ஒபாமாவின் அழைப்பை தனிப்பட்ட முறையில் கையளித்தார். இதன்மூலம் ஜூலை இறுதியில் வரவிருந்த ஜோன் கெர்ரியின் இராணுவ நட்புறவு பேச்சுவார்த்தைக்கு அடித்தளம் ஏற்படுத்தினார். பெரும் விலைக்கு விற்கப்படும் தனது இராணுவ நட்புறவை இந்தியாமீது மேலும் சுமத்துவதற்காக அமெரிக்காவின் இந்திய படையெடுப்பு தொடர்ந்தது.

**இந்தியாவுக்கு அமெரிக்கா தற்காப்பு ஆயுதங்களை மட்டுமே விற்கிறது, முன்பு ரஷ்யாவிடம் வாங்கியதுபோல தாக்குதல் ஆயுதங்களை விற்பதில்லை என்கிறார் பாதுகாப்புத் துறை வல்லுனர் பிரம்மா செல்லானி. மேலும், இந்தியாவுடன் 2009 முதல் பாதுகாப்பு நட்புறவு உரையாடல் நடத்திவரும் அமெரிக்கா, பாகிஸ்தானுடன் 2004 முதல் பாதுகாப்பு உடன்பாடும், 2006 முதல் இராணுவ நட்புறவு உரையாடலும் நடத்திவருகிறது. சீனாவுடன் 1997 முதல் ஆக்கபூர்வமான நட்புறவு உரையாடலை பராமரித்துவருகிறது. இப்படி அனைத்து தரப்புகளுக்கும் ஆயுதம் விற்பது தான் அமெரிக்க இராணுவ தந்திரம்.**



●தொகுப்பு: வேணு கிருஸ்ணா●

# இந்தியக் கனவும் அமெரிக்க உறவும்

ஜூலை மாத இறுதியில் இந்தியா வந்து சேர்ந்த ஜோன் கெர்ரி, பென்னி பிரிட்ஸ்கர் குழுவினர் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜை சந்தித்து அமெரிக்க - இந்திய பாதுகாப்பு நட்புறவு உரையாடல் கூட்டத்தை நடத்தினர். அந்த பேச்சுவார்த்தையின் முடிவில், "இந்தியர்களை அமெரிக்கா ஒட்டுக்கேட்பது ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று சுஸ்மா சுவராஜ் கூறியதாக தலைப்புச் செய்திகள் வெளியாகின. அதைக்கூட பெருந்தன்மையாக சகித்துக்கொண்டு அனுமதித்தது அமெரிக்கத் தரப்பு. பல பில்லியன் டொலர் ஆயுத விற்பனை பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது இந்த 'முசுப்பாத்திச்' செய்திகள்தானா பிரச்சினை?

ஜோன் கெர்ரி நிதி மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் அருண் ஜெட்லியுடனும் பிரிட்ஸ்கர் வர்த்தகத் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமனுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவாலை சந்தித்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் திரும்பப் பெறப்படுவது குறித்து விளக்கினார் கெர்ரி. இறுதியாக பிரதமர் மோடியை சந்தித்தார். தன்னை சந்திக்க மோடி கடைசி நேரத்தில்தான் ஒத்துக்கொண்டது கெர்ரியை வருத்தமடைய செய்தது என்று பெரியண்ணனையே நம்ம அண்ணன் காக்க வைத்துவிட்டார் என்று பூரித்தன இந்திய ஊடகங்கள்.

மேலும், உலக வர்த்தகக் கழகத்தின் புதிய ஒப்பந்தமான, சுங்க விதிகளை தளர்த்தும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாது என்று மறுத்து, இந்திய மக்களின் நலன்களை பாதுகாப்பது தன்னைப் போன்ற உறுதியான தலைவரால்தான் முடியுமென மோடி நிருபித்ததாக அவரது அடிப்பொடிகள் போற்றி மகிழ்ந்தனர்.

காசா முதல் உக்ரேன் வரை, சீனா முதல் ஆஸ்திரேலியா வரை அமெரிக்க அரசுக்கு உலகை பரிபாலிக்கும் ஆயிரம் பொறுப்புகள் இருக்கும்போது அமெரிக்கா இப்படி முக்கியத்துவம் கொடுத்து இந்தியாவை பாராட்ட வைத்த உறுதியான தலைவர் மோடி, இந்தியா உறுதியாக இருந்தால்தான் உலகம் நம்மை மதிக்கும் என்பதற்கு எடுத்துக்காட்டு இதுவென மோடி பக்தர்கள் உள்ளம் பூரித்துப்போகின்றனர். ஆனால், போதுமான தேவைகள் இல்லாமல் அமெரிக்க அங்கிளின் தொப்பி ஒரு பக்கமாக சரிவதில்லை.

அமெரிக்க நிறுவனங்கள் மலிவு விலையில் உற்பத்தித் தளம் அமைத்துக் கொள்ளவும், மூலதனமிட்டு இலாபம், வட்டி, உரிமத்தொகை என்று அள்ளிச் செல்லவும் இருக்கும் பல ஆயிரம் கோடி ரூபாய் காரணங்களோடு, 2006ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளிலேயே அதிகளவு இராணுவ தளவாடங்களை இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா மாறியிருக்கிறது என்பதுதான் அமெரிக்கக் காதல் சீராட்டலின் அடிப்படை.

ஒவ்வொரு ஆண்டும் உலகின் மொத்த ஆயுத ஏற்றுமதியில் 10வீதம் இந்தியாவுக்கு வந்து சேருகிறது. இவ்வளவு ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதன்மூலம் இந்தியா இராணுவ வல்லரசாகப் போகிறது என்று இந்துத்துவவாதிகள் கதை கட்டலாம். ஆனால், இந்தியாவின் ஆயுத ஒப்பந்தங்கள் இடைத்தரகர்கள் பல நூறு கோடி ரூபாய் சம்பாதிப்பதற்கும், ஆயுத விற்பனை செய்யும் நாடுகளின் விருப்பத்திற்கும் ஏற்றபடிதான் போடப்படுகின்றன. அப்படி வாங்கப்பட்ட ஆயுதங்களுக்கான உதிரி பாகங்கள் வாங்குவதற்கு எதிர்காலத்தில் ஆயுதங்களை விற்ற நாட்டை சார்ந்தே இந்திய ஆளும் வர்க்கங்கள் இருக்க வேண்டியிருக்கிறது. அடுக்கிவைத்து ஆளும் வர்க்கங்கள் அழகு பார்க்கவும், டெல்லியில் பேரணி நடத்தவும் மட்டுமே இந்த ஆயுதங்கள் பயன்படும். இது இன்னொரு கோணத்திலும் உண்மையாக உள்ளது.

"இந்தியாவுக்கு அமெரிக்கா தற்காப்பு ஆயுதங்களை மட்டுமே விற்கிறது, முன்பு ரசியாவிடம் வாங்கியது போல தாக்குதல் ஆயுதங்களை விற்பதில்லை" என்கிறார் பாதுகாப்புத் துறை வல்லுனர் பிரம்மா செல்லானி. "மேலும், இந்தியாவுடன் 2009 முதல் பாதுகாப்பு நட்புறவு உரையாடல் நடத்திவரும் அமெரிக்கா, பாகிஸ்தானுடன் 2004 முதல் பாதுகாப்பு உடன்பாடும், 2006 முதல் இராணுவ நட்புறவு உரையாடலும் நடத்தி வருகிறது. சீனாவுடன் 1997 முதல் ஆக்கபூர்வமான நட்புறவு உரையாடலை பராமரித்து வருகிறது." இப்படி அனைத்து தரப்புகளுக்கும் ஆயுதம் விற்பதுதான் அமெரிக்க இராணுவ தந்திரம்.

ரஷ்யாவிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை வாங்கிக்கொண்டிருந்த இந்தியா - அமெரிக்கா பக்கம் திரும்பியது அமெரிக்க ஆயுதத்துறைக்கு புதிய போனஸ் ஆக இருந்தது. 1970-களில் எகிப்திய அரசு, ரஷ்ய வாடிக்கையாளராக இருந்ததை மாற்றி அமெரிக்காவிடம் ஆயுதங்கள் வாங்க ஆரம்பித்ததற்கு இணையான முக்கியத்துவம் வாய்ந்தது இது என்கிறார் பிரம்மா செல்லானி. எகிப்து அமெரிக்க ஆயுதங்களை வாங்குவதற்குகூட அமெரிக்க அரசு தானே நிதி உதவியளிக்க வேண்டியிருந்தது. ஆனால், "உப்பு போட்டு தின்னும்" இந்திய ஆளும் வர்க்கமோ, இந்திய மக்களின் பணத்தை ரொக்கமாகவே கொடுத்து அமெரிக்க ஆயுதங்களை வாங்கிக் குவிக்கின்றன. எனவே, இந்தியாவுக்கு விற்பது அமெரிக்காவுக்கு வணிகரீதியில் மேலும் விருப்பமானதாக இருக்கிறது.

இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்தியாவுக்கு ஆயுத விற்பனையாளர்களில் ரஷ்யாவையும் இஸ்ரேலையும் முந்தி அமெரிக்கா முதலிடத்தை பிடித்திருக்கிறது. அணு உலைகளை விற்பது குறிப்பிடத்தக்க அளவு நடக்கவிட்டாலும் 2005-ம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தத்தில் குறிப்பான வாக்குறுதியாக சேர்க்கப்பட்டிருந்த ஆயுத விற்பனை கொடிகட்டி பறக்கிறது.

10 ஆண்டுகளுக்கு $10 கோடியாக (ரூ 6,00 கோடி) இருந்த அமெரிக்காவின் ஆயுத விற்பனை இப்போது பல நூறு கோடி டொலர்கள் மதிப்பை தாண்டியிருக்கிறது.

சென்ற ஆண்டு செப்டம்பரில் இந்திய-அமெரிக்க உறவை கடும் நெருக்கடிக்கு உள்ளாக்கியதாக சித்தரிக்கப்பட்ட தேவயானி கோப்ரகடே விவகாரம் சூடு பறந்து கொண்டிருந்தபோது, அமெரிக்க அரசை எதிர்த்து இந்திய தேசமே வீரச்சவடால்கள் அடித்துக்கொண்டிருந்த போது மன்மோகன் அரசு $101 கோடி (சுமார் ரூ 6,000 கோடி) சி-130ஜே இராணுவ போக்குவரத்து விமானங்களை வாங்க ஒப்பந்தத்தை ஒபாமா அரசுக்கு பரிசாக வழங்கியது. முன்னதாக, செப்டம்பர் மாதம் பிரதமர் மன்மோகன் சிங் வெள்ளை மாளிகையில் பராக் ஒபாமாவை சந்தித்தபோது கொண்டுபோன பரிசுப் பொருட்களில் $500 கோடி (சுமார் ரூ 30,000 கோடி) மதிப்பிலான அமெரிக்க ஆயுதங்களை வாங்கும் ஒப்பந்தமும் இருந்தது.

சென்ற ஆண்டு இந்திய அரசின் இணைய பாதுகாப்புத் துறை அமெரிக்காவிலிருந்து $190 கோடி மதிப்பிலான தளவாடங்களை இறக்குமதி செய்து அமெரிக்க ஆயுதங்களை வாங்கிய மிகப்பெரிய வெளிநாட்டு வாடிக்கையாளர் என்ற பெருமையை சாதித்திருந்தது.

தேவயானி விவகாரம், மோடியின் உரசப்பட்ட தன்மானம், மன்மோகன் போன்று ஒரு தொலைபேசி அழைப்பில் அமெரிக்க தேவைகளை சாதிக்க முடியாத மோடியின் இந்துத்துவ உறுதி, மன்மோகன் அரசைவிட பல மடங்கு மதிப்பிலான வர்த்தக ஒப்பந்தங்களை வாரி வழங்கத் தயாராக இருக்கும் மோடி பாணி 'வளர்ச்சி' இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டும் அமெரிக்க அரசு தனது கவரும் தாக்குதல்களை தொடுத்துவருகிறது.

(17 ஆம் பக்கம் பார்க்க)

▌நன்றி - தேனீ

யோகி பேச்சுக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதை கேட்டு யோகேஸ்வரன் மகிழ்ச்சியடைந்தார். அவர் உடனடியாகவே பாதுகாப்பு உதவி கண்காணிப்பாளர் தம்பிராஜா கந்தசாமியிடம் திட்டமிட்டபடி மாலை வரவிருக்கும் எல்.ரீ.ரீ.ஈ குழுவினரை சோதனை யிட வேண்டாம், அதனால் அவர்கள் சங்கடப்படுவார்கள் என அறிவுறுத்தல் வழங்கினார். கந்தசாமி இந்த ஆட்களை நம்ப முடியாது ஐயா என மறுப்பு தெரிவித்தார். எதுவும் நடக்காது என யோகேஸ்வரன் அவருக்கு உத்தரவாதம் வழங்கினார்.



# தமிழர்களின் தேசியத்தலைவர் சுடப்பட்டு 25 ஆண்டுகள்

ஒருமுறை அமிர்தலிங்கம் மற்றும் அவரது மனைவி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகிய இருவரும் வீட்டுக்கு வெளியே ஒரு மாலைநேர நடை பயின்று கொண்டிருந்த சமயத்தில் புலிகளைச் சேர்ந்த இருவர் வந்தார்கள். அவர்கள் வேண்டுமென்றே அமிர்தலிங்கத்தை பார்த்து முறைத்தார்கள்.

இதை பல வருடங்களுக்கப் பிறகு திருமதி. அமிர்தலிங்கம் கனடாவில் வைத்து என்னிடம் சொன்னார், அவர்களது அச்சுறுத்தும் பார்வையால் கலக்கமடைந்த அவர் தனது கணவரிடம் தனக்குப் பயமாக இருக்கிறது, ஏனெனில் அவர்கள் உங்களைப் பார்த்த விதம் குழப்பம் தருவதாக உள்ளது எனக் கூறினாராம். அதற்கு அமிர் "தவம் (தனது மனைவியை அமிர் செல்லமாக அப்படித்தான் அழைப்பதுண்டாம்) நீ எப்போதும் தேவையில்லாமல் கவலைப் படுகிறாய். அவர்கள் போராளிகள், அதனால் அவர்களது தோற்றம் கடினமானதாகத்தான் இருக்கும். அவர்களை அப்படியே இருக்க விடுவோம்" என மனைவியை கடிந்து கொண்டாராம்.

இதற்கிடையில் சிவசிதம்பரம் சென்னையில் இருந்து கொழும்பு திரும்பினார். தொடர்ந்தும் அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோர் வவுனியாவுக்கு வந்து பாண்டிக் குளத்தில் வைத்து எல்.ரீ.ரீ.ஈ தலைவரை சந்திக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கொண்டே இருந்தது. இடைவிடாத புலிகளின் அழுத்தத்தை தாங்க முடியாத யோகேஸ் வரன், அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோரை சமாதானப்படுத்தி புலிகளை குறைந்தது கொழும்பிலாவது சந்திக்க வேண்டும் எனக் கேட்டு அதற்கு சம்மதிக்க வைத்தார். யோகேஸ்வரன், நியாயப்படி நினைத்தது, முழுத் தமிழர்களிடையேயும் ஒற்றுமையை எற்படுத்துவதில் எல்.ரீ.ரீ.ஈ ஆர்வமாக உள்ளது, மற்றும் புலிகளு டன் ஒரு புரிந்துணர்வுக்கு வருவது ரி.யு.எல். எப் புக்கும் நன்மை பயக்கும் என்று. யதேச்சையாக எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரன் சென்னையில் வைத்து கால்பந்து விளையாட்டு பரிபாஷையில், யோகேஸ்வரன் தன் பக்கமே பந்தை உதைத்து கோலைப் போடும் ஒரு மனிதர் எனக் குறிப்பிட்டாராம்.

அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியவர்கள் எல்.ரீ.ரீ.ஈ யினை கொழும்பில் வைத்துச் சந்திக்கத் தயார் என்று யோகேஸ்வரன் சிவகுமாருக்கு அறிவித்தார். ஒரு சந்திப்பை அவர்கள் வீட்டில் வைத்தே நடாத்த ஏற்பாடு செய்யலாம் எனவும் அவர் சொன்னார். புலிகள் இந்த விடயத்தை ஆராய்ந்து அவர்களின் முடிவை அவருக்கு அறிவிப்பார்கள் என சிவகுமார் யோகேஸ்வரனிடம் சொன்னாராம். 1989 ஜூலை 13 ந்திகதி வியாழக்கிழமை, காலை சுமார் 10 மணியளவில் அலோசியஸ் யோகேஸ்வரனை தொலைபேசியில் அழைத்து அவரது ஆலோசனை எல்.ரீ.ரீ.ஈக்கு சம்மதமாக உள்ளது. கூட்டம் அதேதினம் மாலை 6 மணிக்கு நடத்த திட்டமிடப் பட்டுள்ளதாகத் தெரிவிததார்.

இதை அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரத்திடம் யோகேஸ்வரன் அறிவித்தார். அதில் ஒரு சிக்கல் இருந்தது, அவர்கள் இருவரும் அப்போது இந்திய உயர் ஸ்தானிகராக கொழும்பில் இருந்த லேக்கான் லால் மெஹ்ரோத்ரா, தாஜ சமுத்ரா ஹோட்டலில் அன்றிரவு அளிக்கவிருக்கும் இராப்போசன விருந்தொன்றில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது. அந்த விருந்து இந்திய அமைச்சரவை செயலாளராக கடமையாற்றி பின்னர் பிரதம மந்திரியின் முதன்மைச் செயலாளராக ராஜீவ் காந்தியின் கீழ் கடமையாற்றும், பிஜி.தேஷ்முக் அவர்களை கௌரவிக்கும் விதத்தில் நடாத்தப்படும் ஒன்று. தேஷ்முக் இந்திய பிரதமரின் விசேட தூதுவராக அவரது கடிதமொன்றை ஜனாதிபதி பிரேமதாஸவிடம் கையளிப்பதற்காக அப்போது கொழும்புக்கு வந்திருந்தார். இரண்டு ரி.யு.எல்.எப் தலைவர்களிடமும் மாலை 6 மணியளவில் புலிகளைச் சந்தித்து விட்டு நேரத்தோடு தூதுவரின் விருந்துக்கு செல்லும்படி யோகேஸ்வரன் கேட்டுக் கொண்டார். அவர்களும் அதற்குச் சம்மதித்தார்கள்.

## நரேந்திரன் என்கிற யோகி

கிட்டத்தட்ட பி.ப 4 மணியளவில் அலோசியசிடம் இருந்து ஒரு இரண்டாவது தொலைபேசி அழைப்பு யோகேஸ்வரனுக்கு வந்தது. அதில் அலோசியஸ், எல்.ரீ.ரீ.ஈயின் அரசியல் பிரிவு தலைவர் நரேந்திரன் என்கிற யோகி அந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளும் சாத்தியம் இருப்பதாக யோகேஸ்வரனிடம் தெரிவித்தார்.யோகி, அன்ரன் பாலசிங்கம் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ தூதுக் குழுவை சேர்ந்த இதர அங்கத்தவர்கள் யாவரும் கலதாரி மெரிடி யன் ஹோட்டலில் தங்கியிருந்தார்கள். எல்.ரீ.ரீ.ஈ அங்கு பி.ப 6.30 இற்கும் மற்றும் 7 மணிக்கும் இடையில் வருவார்கள் முன்பு அறிவித்ததை போல 6 மணிக்கு அல்ல எனவும் அலோசியஸ் தெரிவித்தார். மேலும் அவருக்கு யோகேஸ்வரனிடம் தெரிவிக்க ஒரு வேண்டுகோளும் இருந்தது. பாதுகாப்பு கடமையில் இருப்பவர்களிடம் எல்.ரீ.ரீ.ஈ குழு வந்ததும் அவர்களை மறைவாக உள்ள ஆயுதங்களை தேட நடத்தும் உடற் சோதனையோ அல்லது வேறு சோதனையோ நடத்த வேண்டாம் என்று சொல்லும்படி யோகேஸ்வரனிடம் கேட்கப்பட்டது. ஏனென்றால் யோகியை போன்ற ஒரு தலைவரின் அந்தஸ்துக்கு அந்தச் செய்கை அவரை அவமதிப்பது போல உணரச் செய்துவிடும் என்றும் சொல்லப்பட்டது.

யோகி பேச்சுக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதை கேட்டு யோகேஸ்வரன் மகிழ்ச்சியடைந்தார். அவர் உடனடியாகவே பாதுகாப்பு உதவி கண்காணிப்பாளர் தம்பிராஜா கந்தசாமியிடம் திட்டமிட்டபடி மாலை வரவிருக்கும் எல்.ரீ.ரீ.ஈ குழுவினரை சோதனையிட வேண்டாம், அதனால் அவர்கள் சங்கடப்படுவார்கள் என அறிவுறுத்தல் வழங்கினார். கந்தசாமி இந்த ஆட்களை நம்ப முடியாது ஐயா என மறுப்புத் தெரிவித்தார். எதுவும் நடக்காது என யோகேஸ்வரன் அவருக்கு உத்தரவாதம் வழங்கினார். ஒரு மூத்த எல்.ரீ.ரீ.ஈ தலைவரை எதிர்பார்க்கிறோம்,மற்றும் தான் அவமானப்பட்டு விட்டதாக அவர் நினைக்கக் கூடாது." அவர்கள் எங்கள் விருந்தாளிகள் ஆனபடியால் நாங்கள் அவர்களை மரியாதையாக நடாத்த வேண்டும், அவர்கள் அவமானப் படுத்தப்பட்டதாக உணர்ந்தால் எதிர்காலத்தில் அவர்கள் வரமாட்டார்கள் மற்றும் எங்கள் கலந்துரையாடல் தோற்றுவிடும்" என யோகேஸ் அவரிடம் தெரிவித்தார். ஒருவித தயக்கத்துடன் அதற்கு சம்மதித்த கந்தசாமி தனது உதவியாளர்களுக்கும் அதை அறிவித்தார்.

யோகேஸ்வரனும் அவரது மனைவியும் அவர்களுடன் கூட சிவசிதம்பரமும் வீட்டின் மேல்தளத்தில் குடியிருந்தவேளை, அமிர்தலிங்கம் தம்பதியினரும் மற்றும் மாவை சேனாதிராஜாவும் கீழ் தளத்தில் வசித்துவந்தார்கள். தற்சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு மூத்த பாராளுமன்ற உறுப்பினராக உள்ள சேனாதிராஜா அப்போது ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவில்லை. அமிர்தலிங்கத்தின் இளைய மகனான ரவி என்றழைக்கப்படும் பகீரதன் மற்றும் அவரது மனைவி மலர்விழி ஆகியோர் புதிதாகப் பிறந்துள்ள அவர்களது மூத்த மகனுடன் ஐக்கிய இராச்சியத்திலிருந்து வருகை தந்திருந்தார்கள். அவர்களது புதிய பேரனை அமிர்தலிங்கம் தம்பதியினர் இப்போதுதான் முதல் முறையாகப் பார்க்கிறார்கள். அவர்கள் 12ஆம் திகதி திரும்பவும் பிரித்தானியாவுக்கு திரும்பி விட்டார்கள். அமிர்தலிங்கம் அவரது மகன் லண்டனுக்கு போய்ச் சேர்ந்ததும் அழைக்கவிருக்கும் தொலைபேசி அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தார்.

## பீற்றர் லீயொன் அலோசியஸ்

நேரம் பி.ப 6.40 ஆன பொழுது எல்.ரீ.ரீ.ஈ மூவர் குழு ஒரு மஞ்சள் நிற சீருந்துவில் வந்தார்கள். எதிர்பார்ப்புக்கு முரணாக யோகி பிரசன்னமாகி இருக்க வில்லை. மூன்று புலிகளும் விசு என்கிற இராசையா அரவிந்தராஜா, விக்னா என்கிற பீற்றர் லீயொன் அலோசியஸ் மற்றும் சிவகுமார் என்கிற அறிவு ஆகியோர்

முன் கதவில் காவலிருந்த காவல் துறை உத்தியோகத்தரான சத்தியமூர்த்தி அந்த மூவரையும் சோதனை செய்யாமல் உள்ளே அனுமதித்தார். அவர்களின் வரவைப் பற்றி கந்தசாமிக்கு சத்தியமூர்த்தி அறிவித்ததும் அவர்களை யோகேஸ்வரனைச் சந்திக்க மேலே அனுப்பும்படி அவர் சொன்னார். விசு மற்றும் அலோசியஸ் மேலே சென்றபோது கீழ் படிக்கட்டின் அருகே அறிவு நிலையுறுத்திக் கொண்டார். யோகேஸ்வரன் மேலே தனது மனைவியுடன் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார். புலிகள் வந்துவிட்டார்கள் என அறிவித்தல் வந்ததும் அவர் படிகளில் இறங்கிச் சென்று பாதி வழியாலேயே விசுவை யும் அலோசியசையும் சந்தித்தார். யோகி வராததையிட்டு யோகேஸ்வரன் ஏமாற்றமடைந்தாலும் விசுவை யும் அலோசியசையும் வாழ்த்தி வரவேற்றார். அவர்கள் அமர்ந்து பேசத் தொடங்கினார்கள். சரோஜினி அவர்களுக்கு சாப்பிட ஏதாவது தயாரிக்கச் சென்றார். யோகேஸ்வரன் அங்கிருந்த வேலைக்காரப் பையன் ராஜூ மூலமாக கீழே, தனது மனைவி, சேனாதிராஜா மற்றும் சிவசிதம்பரம் ஆகியோருடன் சேர்ந்து தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்த அமிர்தலிங்கத்துக்கு ஒரு குறிப்பு அனுப்பினார். இந்திய தூதரின் விருந்துக்குச் செல்வதற்காக ஆடையணிந்து கொண்டிருந்த சிவாவும் அமிரும் மேல் தட்டுக்குச் சென்றபோது, மங்கையர்க் கரசியும் சேனாதிராஜாவும் தொடர்ந்து தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அமிர்தலிங்கம் தனது மனைவியிடம் அவர்களது மகன் ரவி லண்டனில் இருந்து தொலைபேசி அழைப்பு விடுத்தால் தனக்கு சொல்லியனுப்புமாறு சொல்லிச் சென்றார். அமிரும் சிவாவும் உள்நுழைந்த போது இரண்டு புலிகளும் எழுந்து நின்றார்கள். அமிர்தலிங்கம் அவர்களின் தோள்களில் தட்டிவிட்டு அவர்களுக்கு இடையில் இருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தார். சிவசிதம்பரம் சற்றுத் தள்ளி அமர்ந்து கொண்டார். யோகேஸ்வரன் எழுந்து சென்று தனது மனைவி தயாரிக்கும் தீன்பண்டங்களுக்கு உதவி செய்யச் சென்று விட்டார். சரோஜினி தக்காளி சான்ட்விச்சுகளும் மற்றும் பிஸ்கெட்டுகளும் கொண்டுவந்தார். அவர்களுக்கு குடிப்பதற்கு என்ன வேண்டும் என்று அவர் கேட்டார். இரண்டு புலிகளும் தங்களுக்கு ஏதாவது மென்பானம் வேண்டுமென்றார்கள். அமிர்தலிங்கம் தனக்கு தேனீர் வேண்டுமென்றார். சிவாவும் மற்றும் யோகேசும் தங்களுக்கு எதுவும் வேண்டாமென்றார்கள். சரோஜினி இரண்டு செம்பழப் பானங்களும் மற்றும் ஒரு கோப்பையில் தேனீரும் தயாரித்து வைத்துவிட்டு தனது அறைக்குப் போய்விட்டார்.


யோகேஸ்வரன் அறிமுகம் செய்து வைத்த பின்னர், தாங்கள் ரி.யு.எல்.எப் தலைவர்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைவதாக புலிகள் தெரிவித்தார்கள். அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரம் ஆகியோரும் பிரதி உபகாரமாக அதே உணர்வுகளை பிரதிபலிக்கும் சொற்களை தெரிவித்தனர். **(தொடரும்...)**




# வீரன்

பாப்பா முரசு சிறுகதை

ஒரு பெரிய ஆலமரம் பல பல கிளைகளை பரப்பிக்கொண்டு பலருக்கும் நிழல் தந்து வந்தது. அது தரும் நிழலுக்கும், குளிர்ச்சிக்கும் மட்டுமல்லாமல் பலரையும் சந்தித்து, நட்புறவுடன் பழக இருந்த அமைதியான சூழலுக்கும் அம்மரத்தை நாடி வந்தனர்.



அவர்களுள் ஒரு வீரனும் சில வருடங்களாக அவனுக்கு இருந்த பல பொறுப்புக்களிடையே அம்மரம் தரும் மன நிம்மதிக்காக முடிந்தபோதெல்லாம் அங்கு வந்து கொண்டிருந்தான். தன்னை போல் மரத்தினை நாடி வந்த பல நல்ல உள்ளங்களுடன் நட்புறவு கொண்டு அளவளாவி விட்டு செல்வான். அப்படி ஒரு நாள் அவன் அங்கு வந்தபோது பழைய நண்பர்கள் யாரும் கண்ணில் தென்படுகிறார்களா என்று துழாவிக் கொண்டே மரத்தடியில் ஆவலுடன் அமர்ந்தான்.

கிளைகளின் மேலே ஒரு பறவை தனியாக கரைந்துகொண்டிருப்பதாக தோன்றியது. மற்றவர்களை போல சாதாரண பிரஜையாக பாவித்து அதனுடன் பேச்சுக்கொடுத்தான். இளரத்த பேச்சுக்கள் என்று அந்த புதிய பறவையின் பேச்சுக்களை முதலில் ரசிக்க தொடங்கினான். போக போக அந்த பறவைக்கு என்ன தோன்றியது என்று வீரனுக்கு புரியவில்லை.

அவ்வீரனை பல பெயர் சொல்லி அழைத்து கடுமையான பேச்சுக்களால் தாக்கியது. வீரனுக்கு தான் என்ன சொன்னோம், பறவையின் போக்கு ஏன் இப்படி ஆனது என்று ஒன்றும் புரியவில்லை. அவன் சிந்தித்துக் கொண்டிருந்த நேரத்தில் பறவை இன்னும் பல பேச்சுக்களை பேசி வீரனுக்கு மனவருத்தத்தை உண்டு பண்ணியது. தன் அதிருப்தியை தெரியப்படுத்திவிட்டு வீரன் கௌரவமாக ஒதுங்கிவிட்டான்.

பலரும் அங்கே வர தொடங்கினர்.

நடப்பவற்றை பார்த்துக் கொண்டிருந்தாலும் ஒருவருக்கும் என்ன செய்வது என்று புரியவில்லையா. தலையிட்டுக் கொள்ள விருப்பமில்லையா என்று வீரனுக்கு தெரியவில்லை. சரியான மேற்பார்வை இருப்பின் தேவையற்ற பேச்சுக்களையும் பொன்னான நேரம் வீணாவதையும் தடுக்கலாம் என்று ஒருவர் மட்டும் சொன்னார். வீரனுக்கு பறவையை வீழ்த்தி வாயை அடைக்க "முடியுமா" என்ற எண்ணம் தோன்றவே இல்லை, "வேண்டுமா" என்ற கேள்வி தான் அவன் மனது முழுவதும் நிரம்பியிருந்தது. அப்படி அடிப்பதன் மூலம் அவனுக்கு நிம்மதியும் கிடைக்காது, மனமும் இடம் தராது. அது தான் வீரனின் சுபாவம். பறவையின் தரத்திற்கு தான் ஏன் செல்லவேண்டும்? பொதுவான இடத்தில் பேசுவதற்கென்ற ஒரு அளவும் தரமும் எழுதப்படாத விதிமுறையாக இருக்கிறது.

அதனால் அதை வலியுறுத்த வேண்டியது வீரனின் வேலையும் இல்லை, கவலையும் இல்லை. வீரனின் இந்த அமைதியை தவறாக புரிந்து கொண்ட பறவை, தன்னால் வீரன் பயந்து ஓடிவிட்டான் என்று வருவோர் போவோரிடமெல்லாம் கொக்கரித்தது. பாவம் அந்த பறவைக்கு தெரியாது. கேவலம் அந்த சிறு பறவைக்காக வீரன் அம்மரத்தை விட்டுவிடமாட்டான். அது தரும் நிழலும், அங்கு வரும் நல்ல உள்ளங்களின் நட்பும் அவனுக்கு என்றும் தேவை. மற்ற பொறுப்புக்கள் அழைப்பு விட, வீரன் அவ்விடத்தை விட்டு கிளம்பிவிட்டான். இனி அடுத்து நேரம் கிடைக்கும் போது அம்மரத்தினை நாடி திரும்பி வருவான்!

இது எதுவும் அறியாத பறவை இன்னும் கத்திக்கொண்டு தான் இருந்தது. வீரனுக்கு ஒன்று புரிந்தது, பறவைக்கு உடல் ரீதியாகவோ, மனரீதியாகவோ எங்கேயோ அடி விழுந்திருக்கிறது. அந்த வலியை அடுத்தவர் மேல் சேர்வாரி பூசி தீர்த்துக்கொள்கிறது. பரிதாப உணர்ச்சியே மனம் முழுவதும் நிரம்பியிருக்க வீரன் பெருமூச்சுடன் நடக்க தொடங்கினான்.




ஒரு தலைமுறையில் பெறும் கல்வி அறிவானது, ஏழேழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமையும்.

## விடுகதைகள்

1. வம்புச்சண்டைக்கே இழுத்தாலும் வாசல் தாண்டி வர மாட்டான் அவன் யார்?
2. உலகமே உறங்கினாலும் அவர்கள் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் யார்?
3. இரவும் பகலும் ஓய்வில்லை. அவன் உறங்கிவிட்டால் எழுப்ப ஆளே இல்லை. அவன் யார்?
4. கூடவே வருவான் உளவாளி அல்ல, விழுந்தே கிடப்பான் சோம்பேறி அல்ல. அவன் யார்?
5. கருப்பன்தான் ஆனால் பலரின் உயிர் கொடுப்பான். அவன் யார்?
6. பெரிய சிக்கலான நூல். பிரித்தெடுக்க முடியாவிட்டாலும் சுவையானவன். அவன் யார்
7. அந்தரத்தில் தான் தொங்குவான் அவனுக்கு ஆயிரம் பேர் காவல்.
8. உலர்ந்த காம்பில் மலர்ந்த கருப்பு பூ, அவன் யார்
9. கறுப்பர்கள் ஆண்டு பல காலம் ஆனதும் வெள்ளையர் ஆதிக்கம் ஆரம்பம். அது என்ன?
10. காலையில் வருவான், மாலையில் போவான். இரவு தங்க மாட்டான் அவன் யார்?

**விடைகள்**

1. நாக்கு, 2. கடிகார முட்கள், 3. இதயம், 4. நிழல், 5. மழை மேகம், 6. இடியாப்பம், 7. தேன் கூடு, 8. குடை, 9. நரை முடி, 10. சூரியன்

## விலங்குகள் பற்றிய சில சுவாரஸ்யம்,



- எறும்புகள் தூங்குவதே இல்லை.
- மரங்கொத்தி பறவையால் மரத்தை ஒரு நொடியில் 20 முறை தொடர்ந்து கொத்த முடியும்.
- கரப்பான்பூச்சியால் ஒன்பது நாட்கள் வரை தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வாழ இயலும்.



- பச்சோந்தியின் நாக்கு அதன் உடலைவிட இருமடங்கு நீளமாக இருக்கும்.
- ஒரு நத்தையால் மூன்று ஆண்டுகள் வரை தூங்க முடியும்.
- பட்டாம்பூச்சிகள் அதன் கால்களை கொண்டுதான் உணவை ருசிக்கின்றது.
- உலகளவில் பெரும்பான்மையாக விலங்குகளால் ஏற்படும் மரணங்களை ஏற்படுத்துவது கொசு.
- பூச்சிகளின் இரத்தம் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.
- பனிக்கரடிகள் அனைத்தும் இடது கை வழக்கம் உடையவை.



## புத்தகம்



நிமிர்ந்த வாழ்க்கை கைக்கூடும்.
நூலகம் நிறைய நானிருப்பேன்
நுட்ப அறிவைச் சுமந்திருப்பேன்
ஆளுடன் அறிவும் வளரத்தான்
ஆன வரைக்கும் துணையாவேன்
துறைகள் தோறும் எனைப்படைத்து
தொட்டு விட்டார் சிகரத்தை
முறையாய் நீயும் முன்னேற
முயல்வாயாம் தம்பி எனைக்கொண்டு
புத்தகச் செலவு என்பதை நீ
புத்தி கொள்முதல் செலவாய்க்கொள்
வித்தைகள் கற்க வேண்டுமானால்
விதவித மான நூல்கற்பாய்
மெத்தையில் உறக்கம் தவிர்த்துவிடு
மேதினி போற்றப் படித்துவிடு
பத்தை நூறால் பெருக்கவரும்
பயனை நீபெற நூல்படிப்பாய்.

## கிரிக்கெட்டில் பந்து வேகம்

கிரிக்கெட்டில் பந்து வீச்சாளரின் பந்து வேகம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்று தெரியுமா? பந்து வீச்சாளரின் கையைவிட்டுப் பந்து வெளிப்படும்போது ஒரு லேசர் கதிர் பாய்ச்சப்படுகிறது. அதன் பின்பு பந்து கிரிக்கெட் மட்டையைத் தொடப் போகும்போது இன்னொரு லேசர் கதிர் வீச்சு பாய்ச்சப்படுகிறது.

பந்துவீச்சாளரின் கைக்கும், மட்டைக்கும் இடையே பந்து பயணம் செய்த வேகம், இரண்டு கதிர்வீச்சுக்கு இடைப்பட்ட நேரத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது. இந்த இரண்டு லேசர் கதிர் வீச்சின் சராசரி பந்து வேக நேரமே, பந்து வீச்சாளரின் வேகமாகக் கணக்கிடப்படுகிறது.

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.
சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 01.09.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1058**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1056**


க. துஷ்யந்தி,
முறிப்பு, கிளிநொச்சி.

பரிசுக்குரியவர்: 1056


பாராட்டுக்குரியவர்கள்

01. பி.முருகன், சிங்கபுர, சிலாபம்.
02. மி. கபிசன், ஏழாலை கிழக்கு, ஏழாலை.
03. கு. நிஷாந்தினி, குருநகர், யாழ்ப்பாணம்.
04. கி.தர்சன், அறிவுநகர், கிளிநொச்சி.
05. த. மதுஷாயினி, 2குருக்குத்தெரு, மாத்தளை.
07. அ.இர்பான் பர்ஷாத், அஸ்ரப் நகர், கிண்ணியா.
08. து. டீன், கண்டிவீதி, இரத்தினபுரி.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



அவள் உடைகளை பிடித்து இழுத்தான். தடுக்க முயன்றபோது கன்னத்தில் அறைந்தான். அவள் பயத்தாலும் அறையாலும் மயக்கமானாள்.
அதன்பின்னர் நடந்தது ஜீரணிக்க முடியாத கோரம் அமீனின் காவலர்கள்கூட உள்ளூர வெறுத்துப் போயினர். தங்கள் அருவெறுப்பை மறைக்க முடியாமல் திண்டாடினார்கள்.



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

அந்தப் பெண்ணுக்கு புரியவில்லை ஐயோ நான் மத்வானியின் மகள் அல்ல என்னை விடுங்கள் என்று கதறினாள்.

அடுத்த நொடியே அமீனின் பலமான கரங்கள் அவளை தூக்கி கட்டிலில் பொம்மையை ஏறிவதுபோல எறிந்தான்.

அவள் உடைகளை பிடித்து இழுத்தான். தடுக்க முயன்றபோது கன்னத்தில் அறைந்தான். அவள் பயத்தாலும் அறையாலும் மயக்கமானாள்.

அதன்பின்னர் நடந்தது ஜீரணிக்க முடியாத கோரம். அமீனின் காவலர்கள்கூட உள்ளூர வெறுத்துப் போயினர். தங்கள் அருவெறுப்பை மறைக்க முடியாமல் திண்டாடினார்கள்.

வெறிதீரும்வரை அவளை ஆக்கிரமித்த அமீன். அதன் பின்னரும் கொடூரத்தைக் காட்டினான்.

சிறிய கத்தி ஒன்றால் அவளது குரல்வளை நரம்பை துண்டித்தான். குபுக்கென்று கொட்டிய இரத்தத்தை ஒரு குவளையில் சேகரித்தான்.

உடையற்ற உடல். உயிரற்ற உடலாகவும் மாறியது.

இரத்தம் நிறைந்த குவளையுடன் கதவைத் திறந்து வந்து தன் காவலர்களை அழைத்தான்.

மாளிகை எங்கும் ஒரே உச்குரல் சத்தம். அமீன் தம்மிடம் தந்த பெண்களை காவலர்கள் மேய்ந்து கொண்டிருந்தார்கள்.

அமீன் குரல்கேட்டு அப்படியே விட்டுவிட்டு அவசர அவசரமாக யூனிபோர்மை மாட்டிக் கொண்டு ஓடிவந்தார்கள்.

``இது இரத்தம் அவள் உடல் மட்டுமல்ல இரத்தமும் சுவைதான்`` என்றுவிட்டு இடியாக நகைத்து. குவளையின் விளிம்பில் தன் தடித்த உதடுகளை வைத்து ருசித்தான்.

காவலர்களுக்கு அமீன் மனித மாமிசம் சாப்பிடும் விஷயம் ஜாடைமாடையாகத் தெரிந்தாலும். இப்படி பச்சை இரத்தத்தை தம் கண்முன்பாகவே குடித்ததைக் காண வயிற்றைக் குமட்டியது.

அமீனோ ருசித்து ருசித்து குடித்தான். அக்காட்சியைக் கண்ட பின்னர் தங்களுக்கு தரப்பட்ட அழகிகளை கொடுமைப்படுத்த எவருக்கும் மனம் வரவில்லை. சுகம் காணும் மனநிலையிலும் எவருமில்லை.

இச்சம்பவம் அமீன் காவலர்கள் சிலர்மூலமாக வெளியே பரவி நாடெங்கும் காட்டுத்தீயாகப் பரவியது.

அப்படியும் இருக்குமா? ஒரு மனிதனால் இப்படி நடக்கமுடியுமா? என்று பலர் சந்தேகப்பட்டனர். சிலர்தான் நம்பினார்கள்.

அமீனின் எதிரிகள்தான் கதை கட்டிவிடுகிறார்கள் என்று அமீனின் ஆட்கள் கூறினார்கள்.

தன் காவலர்கள் மூலம்தான் தகவல் வெளியே போகிறது என்று சந்தேகித்த அமீன் அத்தனை பேரையும் தடுப்பு முகாமில் போடுமாறு உத்தரவிட்டான்.

புதிய காவலர்கள் இராணுவத்தில் இருந்து தேர்வுசெய்து நியமிக்கப்பட்டனர். தனது சொந்தக்காரர்களையும் மெய்க்காப்பாளர்களாக நியமித்தான்.

1973 ஆம் ஆண்டு மார்ச்சில் உகண்டாவின் ஜெர்மனுக்கான தூதராக இருந்த ஜோன் பாரிஜ்யே அனுப்பிய இராஜினாமாக் கடிதம் அமீனின் கையில் கிடைத்தது.

``காட்டுமிராண்டித்தனமாக மக்களை வதைக்கும் ஆட்சிக்கு உடந்தைகயாக இருக்க விரும்பவில்லை`` என்று எழுதியிருந்தார்.

``வெளிநாட்டமைச்சர் வான்யும் கிபேடி உடனே வரவேண்டும்!`` அமீன் அழைத்தான்.

வெளிநாட்டு அமைச்சர் பதினைந்து நிமிடத்துக்குள் அமீன்முன் ஆஜரானார்.

``வெளிநாட்டு தூதர் ஒருவருக்கு எனக்கே கண்டனக் கடிதம் அனுப்பும் துணிச்சல் எப்படி வந்தது? நீர் அமைச்சு நடத்தும் அழகு இதுதானா? என்று சீறியபடி கடிதத்தை அவர்முன் விட்டெறிந்தான்.

``கடிதத்தை படித்த அமைச்சர் நான் பார்த்துக் கொள்கிறேன்`` என்றார். எதை. என்னை மிரட்டுவதையா?` என்று எரிந்து விழுந்தான்.

``நாளையே ஒரு திட்டத்தோடு தங்களைப் பார்க்கிறேன்` என்று பவ்வியமாக கூறினார் அமைச்சர்.

மறுநாள் காலையில் குறிப்பிட்ட நேரத்திற்கு வெளிநாட்டமைச்சர் வராமல்போக போனில் தேடினான் அமீன் பதிலில்லை.

பின்னர் போன் ஒலித்தது. அமீன் எடுத்தான். நான்தான் வெளிநாட்டு அமைச்சர் பேசுகிறேன் என்றார்.

``ஓ நீரா சொன்ன நேரத்திற்கு ஏன் வரவில்லை?`` என்றான் அமீன் கோபமாக.

இனி எப்போதும் வரமாட்டேன் நீ அதிபரே அல்ல மிருகம்! என்றார்.

டேய்! நாயே! உன்னை என்ன செய்கிறேன் பார் என்று அமீன் கத்தினான். மறுமுனையில் சிரித்த அமைச்சர். துள்ளாதே முட்டாள். முடிந்தால் பிடித்துப் பார். முட்டாளே! முட்டாள்! முட்டாள்! முட்டாள்! என்று ஆசைதீர திட்டி விட்டு போனை வைத்துவிட்டார்.



அப்போது அவர் கென்யா நாட்டுக்குள் இருந்தார் என்பது அமீனுக்கு பின்னர்தான் தெரிந்தது.

வெளிநாட்டமைச்சர் நாட்டை விட்டு ஓடியதுமல்லாமல் தன்னை முட்டாள் என்று போனில் திட்டியது இடிஅமீனுக்கு இரத்தக் கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது.

கென்யா நாட்டு அரசுமீது கடும் கோபத்தில் இருந்த அமீன் தனது உளவுத்துறை பொறுப்பதிகாரிகளை அழைத்தான்.

கென்யா எங்கள் எதிரிகளுக்கு கொம்பு சீவிவிடும் வேலை செய்கிறது. அதனால் கென்யாவுக்குள் நாமும் பூசல்களை ஊதி வளர்க்கவேண்டும் என்று கட்டளையிட்டான். அதோடு இன்னொரு வேலையையும் ஒப்படைத்தான்.

``கென்யாவுக்குள் எங்கள் ஓடுகாலி வெளிநாட்டமைச்சர் எங்கு தங்கிருக்கிறான் என்றும் கண்டுபிடிக்கவேண்டும். அவனை கண்டதுண்டமாக வெட்டிப்போட்டால்தான் என் கோபம் தீரும்!`` என்றான்.

ஆனால் கடைசிவரை அக்காரியத்தை உளவுத்துறையால் செய்துமுடிக்க இயலவில்லை.

கென்யாவில் புகலிடம் தேடிய வெளிநாட்டமைச்சர் இடி அமீன் ஆட்சிகொடூர ஆட்சி என்று செய்தி நிறுவனங்களுக்கு தெரிவித்தார்.

(தொடரும்)

---

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 587

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | | | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 585 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ஆ | 2 கா | 3 ச | 4 ப | 5 ட் | 6 சி |
| 7 ட | 8 வி | 9 மி | | | |
| 13 ம் | | | | | 18 ம |
| 19 கி | 20 பா | | | 23 சா | 24 ண் |
| 25 ர் | 26 ல | 27 பி | 28 க | | 30 டே |
| 31 பி | 32 கி | | 34 பி | 35 ல் | 36 லா |

### இடமிருந்து வலம்

01. அண்மையில் காலமான இவர் அதி சிறந்த ஆய்வாளரும், பிரபல எழுத்தாளருமாவார்.
07. விதர்ப்ப நாட்டரசன் மகள்.
15. அவா. சோர்வு. (குழம்பியுள்ளது)
19. உண்மை. ஊழ்.
25. ஆதிசங்கரின் பரமசீடர். (குழம்பியுள்ளது)
31. உலோகம். பலம்.
35. இகழ்ச்சிச் சொல். குற்றம் (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. பயின்று கைவந்த செய்கை.
02. உள் வயிரமுள்ள தாவரம். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (திரும்பியுள்ளது)
03. ஒரு மீனினம். (திரும்பியுள்ளது)
04. ஒருவனைப் புகழ்ந்து பாடிய கவி.
05. உறுதி (குழம்பியுள்ளது)
18. தலைமுறை (குழம்பியுள்ளது)
20. யுத்தம். போர். (திரும்பியுள்ளது)
27. சமையல் எண்ணெய் தயாரிக்கக்கூடிய ஒரு மரம்.
29. ஊன்.

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 01.09.2014 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 587
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 585 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

கே. இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. எம்.நாதன். கோவில் வீதி, வவுனியா.
02. து.மாலினி, புலோலி தெற்கு, புலோலி.
03. தெ.சாமந்தி, ரெட்பானா, விசுவமடு.
04. ய.அபிராமி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
05. எஸ்.நிரோஜா, கண்டி வீதி, கொடிகாமம்.
06. பி.தவராசா, வரணி இயற்றாலை, வரணி
07. அ.சாந்தினி, வாகரை, மட்டக்களப்பு.
08. எம்.ஷிகாமி, பிரதான வீதி, நுவரெலியா.
09. ச.மோகன்ராஜ், அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.

# சந்தியாவுடன் சூரி

வடிவேலு, சந்தானம் நாயகர்கள் ஆகிவிட்டதால் அவர்கள் இடத்தை பிடித்துக்கொண்டவர் சூரி. தற்போது இரண்டாவது கதாநாயகன் போல பல படங்களில் நண்பராக வலம் வர ஆரம்பித்து விட்டார். இவர் தற்போது நரேனுடன் நடித்துவரும் படம் 'கத்துக்குட்டி'. புதுமுக இயக்குனர் இரா.சரவணன் இயக்கும் இப்படத்தில் பாரதிராஜாவின் தம்பி ஜெயராஜ் நரேன் தந்தையாக நடித்துள்ளார். இதில் சூரிக்கு ஜோடியாக காதல் சந்தியா நடித்துள்ளார். இதற்கு முன் 'யா யா' படத்தில் சந்தானம் ஜோடியாக நடித்தார். மேலும், இப்படத்தில் ஒரு குத்துப் பாடலுக்கும் சூரியுடன் டான்ஸ் ஆடியுள்ளார். முதலில் தயங்கிய சூரி, நான் உங்கள் ரசிகை என்று சந்தியா சொன்னதும் உற்சாகமாக ஆடினாராம்.




# சார்மி...

## அடையப்போவது யாரு?

டி.ராஜேந்தர் இயக்கிய காதல் அழிவதில்லை என்ற திரைப்படத்தின் மூலம் அறிமுகமான நடிகை சார்மி, அதன் பின்னர் சில தமிழ்ப்படங்களிலும், ஏராளமான தெலுங்கு படங்களிலும் நடித்தவர். நல்ல நடிப்பும், கவர்ச்சியும் ஒருங்கே அமைந்த சார்மிக்கு தெலுங்கு படவுலகம் நன்றாக கைகொடுத்தது. ஆனால் இலியானா, காஜல் அகர்வால், ஹன்சிகா, ஸ்ருதிஹாசன் ஆகியோர்களின் அதிரடி கவர்ச்சியால் ஓரம்கட்டப்பட்டு தற்போது வாய்ப்பு இன்றி வீட்டில் இருக்கின்றார்.

இந்நிலையில் அவருக்கு திருமணம் செய்து வைக்க அவரது பெற்றோர்கள் முடிவு செய்துள்ளனர். பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்த சார்மிக்கு மாப்பிள்ளை தேடுவது தெரிந்ததும் பஞ்சாபில் உள்ள அவரது உறவினர்கள் சார்மியை திருமணம் செய்ய போட்டி போடுவதாக தெரிகிறது.

இதற்கிடையில்
இளையதலைமு...
பேர்களும் சார்மி...
தெரிவித்துள்ளன...
சார்மி சேர்ந்து ...
கெமிஸ்ட்ரி ஒர்க்...
போட்டியில் குதி...
சார்மிக்கு இப்பே...
செய்து கொள்ளு...
இல்லையாம். எ...
திருமணத்தை த...
மீண்டும் சினிமா...
முயன்று வருகிற...



# சம்மதத்தின் இரகசியம் என்ன?

அஜீத், ஆர்யா, நயன்தாரா, நஸ்ரியா நடித்து கடந்த வருடம் வெளியான திரைப்படம் ஆரம்பம். இந்த படத்தில் வில்லன் வேடத்தில் நடிக்க முதலில் அரவிந்த்சாமியிடம்தான் கேட்கப்பட்டது. ஆனால் வில்லனாக நடிக்க அவர் ஒப்புக்கொள்ளவில்லை. கடல் படத்தில் கூட அர்ஜுன் நடித்த வில்லன் வேடத்தில் நடிக்கத்தான் மணிரத்னம் அரவிந்தசாமியை அணுகினார். ஆனால் அவர் மறுத்ததால் அவருக்கு கேரக்டர் மாறியது.

தன்னை அறிமுகப்படுத்திய குருவின் படத்திலேயே வில்லனாக நடிக்க மறுத்த அரவிந்த்சாமி, தற்போது ஜெயம் ராஜா நடிக்கும் 'தனி ஒருவன்' என்ற திரைப்படத்தில் ஜெயம் ரவிக்கு வில்லனாக நடிக்க சம்மதித்துள்ளார். இந்த கேரக்டர் வில்லன் போன்றே தெரியாது. நல்லவர் போன்ற ஒரு நெகட்டிவ் வேடம். இந்த வேடத்தில் வில்லன் நடிகர் நடிப்பதை விட இதுவரை ஹீரோவாக இருந்த ஒருவர் நடித்தால்தான் நன்றாக இருக்கும் என நினைத்து அரவிந்த்சாமியை அணுகினேன். படத்தின் கதையை கேட்டதும் மறுப்பு சொல்லாமல் அரவிந்த்சாமி ஒப்புக்கொண்டார் என ஜெயம் ராஜா கூறியுள்ளார்.

அரவிந்த்சாமி ஒப்புக்கொண்டதற்கு கேரக்டர் மட்டும் காரணமில்லை. மிகப்பெரிய வெயிட்டான சம்பளம்தான் என்று கோலிவுட்டில் கிசுகிசுத்து வருகின்றனர். இந்த படத்தில் அரைமணி நேரம் மட்டுமே வரும் வில்லன் கேரக்டரில் நடிக்க அரவிந்த்சாமிக்கு கொடுக்கப்பட சம்பளம் அரை கோடியை தாண்டியதாக கூறப்படுகிறது.

# கணவன் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்ஸ்!

கும்கி,
வெற்றி படங்களை
பிரபு நடித்த சிகரம் தொடு திரைப்ப...
விக்ரம் பிரபு புதிய படம் ஒன்றில் ந...
ஏ.எல்.விஜய் இயக்கவுள்ளார்.

திருமணத்திற்குப் பின்னர் ஏ.எ...
படத்தில் விக்ரம் பிரபுவுக்கு ஜோடி...
இவர் ஏற்கனவே மலையாளத்தில்...
நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்க...

ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கு...
பணிபுரிகிறார். அடுத்த மாதம் ...
வேடத்தில் அமலாபால் நடிக்க...
வேடம் கிடைத்தால் திருமணத்...
அமலாபால், தனது கணவரின்...
இரண்டாவது இன்னிங்ஸை
கூறப்படுகிறது.





# குஷ்புவுக்கு வேண்டாத வேலை

குஷ்புவால் கொஞ்சம் நேரம் கூட சும்மா இருக்க முடியாது. ஏற்கனவே சில வருடங்களுக்கு முன்பு வாயை வைத்து சும்மா இல்லாமல் கற்பை பற்றி தப்பாக பேசி பல பேரிடம் திட்டுகளையும், அவமரியாதையும் பெற்று கொண்டவர். அதன் பிறகு சினிமாவுக்கு முழுக்கு போட்டு அரசியலில் கலைஞருக்கு வலது கை போல் செயற்பட்டார். பின்பு ஆட்சி மாறிய பிறகு சினிமா தயாரிப்பில் அதிகம் கவனம் செலுத்தி வந்தார். சினிமாவை பற்றியும் அரசியல் பற்றியும் தனது ட்விட்டர் பக்கத்தில் உளறி ரசிகர்களிடம் மொக்க வாங்கவது இவரின் வழக்கம். தற்போது மறுபடியும் ஒரு அனல் பறக்கும் விடயத்தை பற்றி அவதூறாக பேசியுள்ளார் குஷ்பு.

அதாவது திரைப்படங்களில் நடிகர்கள் சிகரெட் பிடிப்பது போன்ற காட்சிகள் இடம்பெறுவதில் தவறில்லை எனும் தொனியில் நடிகை குஷ்பு குறிப்பிட்டுள்ளார். வேலையில்லா பட்டதாரி, படத்தில் தனுஷ் சிகரெட் பிடிப்பது போன்ற போஸ்டர் மற்றும் ஷஜிகர்தண்டா படத்தில் வன்முறை காட்சிகள், சிகரெட் மற்றும் மது அருந்தும் காட்சிகள் இருப்பது போன்றவற்றுக்கு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் எதிர்ப்பு தெரிவித்தார். வேலையில்லா பட்டதாரி படத்திற்கு பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டன. அப்படத்தை தயாரித்த நிறுவனத்துக்கு எதிராக நடவடிக்கை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவையும் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. ஒரு நடிகர் நல்லது செய்யும்போது, அதனை யாருமே பின்பற்றுவது இல்லை. ஒரு நடிகர், ஏழைகளுக்கு உதவுவது, நன்கொடைகளை வழங்குவது, சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்பது உள்ளிட்டவற்றை செய்கிறார். அதையெல்லாம் யாரும் பின்பற்றாதபோது, சிகரெட் பிடிக்கும் விடயத்தை மட்டும் கருத்தில்கொள்வது எந்த வகையில் சரி? என்று கருத்துகளை பதிந்துள்ளார். இது பற்றி ரசிகர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் குஷபுக்கு ட்விட்டர் பக்கத்தில் பதிலடி கொடுத்த வந்த வண்ணம் உள்ளனர்.

லுங்கு படவுலகில்
3 நடிகர்கள் இரண்டு
ய மணக்க விருப்பம்
இருவருடனும்
ம் நடித்துள்ளதால்,
அவுட் ஆகி அவர்களும்
துள்ளனர். ஆனால்
தைக்கு திருமணம்
எண்ணம்
டியாவது இந்த
டிக்கழித்துவிட்டு,
சான்ஸ் பிடிக்க
ாம்.



# நஸ்ரியாவுக்குப் பதில் சமந்தா

அஞ்சலி மேனன் இயக்கத்தில் துல்கர் சல்மான், ஃபஹத் பாசில், நிவின் பாலி, நஸ்ரியா நசீம், இஷா தல்வார், பார்வதி மேனன், நித்யா மேனன் ஆகியோர் நடித்து மலையாளத்தில் வெளியான படம் "பெங்களூர் டேஸ்".

இப்படம் வெளியாகி மலையாள ரசிகர்கள் மட்டுமல்லாது எல்லா தரப்பு ரசிகர்களையும் கவர்ந்து நல்ல வரவேற்பைப் பெற்றது. இதனால் இப்படம் தெலுங்கில் ரீமேக் செய்யப்படுகிறது. ரீமேக் செய்யும் இப்படத்துக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. பெயரிப்படாத இப்படத்தை பிவிபி நிறுவனத்துடன் இணைந்து தில் ராஜு தயாரிக்கிறார். இப்படத்தில் நஸ்ரியா நடித்த கதாபாத்திரத்தில் சமந்தா நடிப்பார் எனக் கூறப்படுகிறது.இதைப் பற்றிய அதிகாரப் பூர்வதகவல்கள் விரைவில் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.



சாகஸம்

இவன் வேற மாதிரி, அரிமா நம்பி ஆகிய
கொடுத்த சிவாஜி கணேசனின் பேரன் விக்ரம்
விரைவில் வெளியாக உள்ளது. இந்நிலையில்
க ஒப்பந்தம் ஆகியுள்ளார். இந்தப் படத்தை

விஜய் இயக்கும் முதல் படம் இது. இந்த
க கீர்த்தி சுரேஷ் என்ற நடிகை நடிக்கவுள்ளார்.
வெளியான ரிங் மாஸ்டர் என்ற வெற்றிப்படத்தில்

இந்த படத்தின் ஒளிப்பதிவாளராக நீரவ் ஷா
பிடிப்பு ஆரம்பமாகும் இந்த படத்தில் கௌரவ
ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நல்ல
கு பின்னர் நடிப்பதாக கூறிய
படத்தில் இருந்து
தொடங்கவுள்ளதாக

# 2 நிமிடத்தில் சமந்தா உழைத்தார் 10 லட்சம்!

திரையுலகை சேர்ந்த பிரபலங்கள் தாங்கள் படங்களில் நடித்து வரும் வருமானத்தை விட மிக அதிகமாக, விளம்பரங்கள், மற்றும் ஃபேஷன் ஷோவில் இருந்து பெற்று வருகின்றனர். அந்த வரிசையில் தற்போது நடிகை சமந்தாவும் சேர்ந்துள்ளார்.

சமீபத்தில் ஐதராபாத் நகரில் நடந்த ஃபேஷன் ஷோ ஒன்றில் பங்குபற்ற சமந்தா சம்மதித்துள்ளார். அதற்காக அவர் வாங்கிய சம்பளம் ரூ.10 லட்சம் என்று கூறப்படுகிறது. இங்கு சமந்தா வெறும் இரண்டு நிமிடங்களே நடப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. தென்னிந்திய நடிகை இவ்வளவு பெரிய சம்பளம் வாங்குவது இதுவே முதல்முறை என்று கூறப்படுகிறது. இதற்கு வெறும் 20 நிமிடங்கள் மட்டுமே ரிகர்சல் பார்த்ததாகவும், அதன்பின்னர் மறுநாள் நேரடியாக ஃபேஷன் ஷோவில் கலந்து கொண்டதாக சமந்தா கூறியுள்ளதாக தெலுங்கு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# விஜயுடன் இணைகிறார் வெங்கட்

மங்காத்தா வெற்றிக்கு பிறகு மீண்டும் ஒரு மெகா ஹிட்டுக்காக மாஸ் படத்தில் சூர்யாவுடன் இணைந்துள்ளார் வெங்கட்பிரபு. ஆனால் அவரை பார்க்கும் ரசிகர்கள் அனைவரும் எப்போது எங்க தளபதிய வச்சு படம் பண்ணுவிங்க? என்று கேட்க, அவரும் நான் ரெடி என்று கூறியிருந்தார். தற்போது விஜய்யும், வெங்கட்பிரபுவும் சமீபத்தில் சந்தித்து மனம் விட்டு பேசியுள்ளனர், ஆனால் படம் குறித்தா? என்பதை சொல்ல மறுத்துவிட்டார்கள். மேலும் மங்காத்தா படத்தின் படப்பிடிப்பில் யதார்த்தமாக விஜய்யை சந்தித்தது, போன்று மாஸ் படத்திலும் சந்தித்து உள்ளார், வேறு ஏதும் விஷயம் இல்லை என்று கொலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

# ரஜினிக்கு மறுத்தாராம் த்ரிஷா?!

ரஜினி நடித்த சிவாஜி படத்தில் நயன்தாரா ஒரு பாடலுக்கு ஆடியது போன்று லிங்கா படத்தில் ஒரு பாட்டுக்கு நடனம் ஆடும்படி இயக்குனர் கே.எஸ்.ரவிகுமார் த்ரிஷாவிடம் அணுகிய போது த்ரிஷா அதற்கு மறுத்துவிட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. இதனால் கொலிவுட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ரஜினி படத்தில் ஒரு காட்சியிலாவது நடிக்க வாய்ப்பு கிடைக்காதா என்று பல நடிகைகள் ஏங்கிக்கொண்டிருக்கும் நிலையில் ரஜினியுடன் ஒரு பாட்டுக்கு நடனம் த்ரிஷா மறுத்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மன்மதன் அம்பு படத்தின் போது ஏற்பட்ட நட்பின் அடிப்பையில் லிங்கா இயக்குனர் கே.எஸ்.ரவிகுமார், த்ரிஷாவிடம் லிங்கா படத்தில் ஒரு பாடலுக்கு நடனம் ஆடுமாறு கே.எஸ்.ரவிகுமார் கேட்டதாகவும், அவர் கேட்ட திகதிகளில் ஜெயம் ரவியுடன் நடிக்க ஏற்கனவே கமிட் ஆகியிருந்ததால், தன்னால் அந்த பாடலுக்கு நடனம் ஆட முடியாது என்று த்ரிஷா மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது.

ஆனால் த்ரிஷா இதுகுறித்து அளித்த விளக்கத்தில், லிங்கா படத்தில் நடனம் ஆடுமாறு கே.எஸ்.ரவிகுமார் உட்பட யாரும் தன்னை அணுகவில்லை என்று தெரிவித்துள்ளார்.



# மீண்டும் நடிக்கும் ஜோதிகா

"ஹெவ் ஓல்டு ஆர் யூ" என்ற மலையாள படத்தின் தமிழ் ரீமேக்கின் மூலம் மீண்டும் நடிக்க தொடங்க இருக்கிறார் ஜோதிகா.அவ்வப்போது மீண்டும் ஜோதிகா நடிக்கவிருக்கிறார் என்று செய்திகள் வலம் வந்த வண்ணம் இருந்தன. இந்நிலையில் தனது கணவர் தொடங்கியுள்ள "2டி என்டர்டெயின்மென்ட்" நிறுவனம் தயாரிக்கவிருக்கும் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார் ஜோதிகா.

# தேன் கிண்ணம்

## அன்னை என் தெய்வம்

கல்லை வைத்து கடவுளென்று
வணங்குபவர் பலருண்டு
அன்னை உன்னை
வணங்கிவிட
பாரினிலே எவருண்டு
பெற்ற தாய்க்கு பட்டகடன்
தீர்த்த பிள்ளை யாருண்டு
அம்மா ஒரு சும்மா என்று
நினைப்பவரும் சிலருண்டு
உயிருள்ள என் தெய்வம்
அம்மா என்றும் நீதானே.

ரவி நிஷாந்தினி, மண்கும்பான்



## அம்மா...



அம்மா என்றால்
அனைத்திலும் அவளே
அகத்திலும் அமர்வாள்
அன்பின் அகல்விளக்காய்

அன்பினை சொரிந்தே
அகத்தினில் நிறைவாள்
ஆத்ம ஞானத்திலும்
ஜோதியாய் தெரிவாள்

உதிரமீந்த உத்தமியவளே
உயிரில் கலந்த உறவுமவளே
உருவம் தந்த உயிர்ப்புமவளே
உருளும் உலகின் ஈர்ப்புமவளே

நம் நலம் காப்பாள் தன்
நலம் வேண்டாள்
நன்னெறி புகட்டியே
நல்வாழ்வு தருவாள்

அனுவிலும் அவளே....
அண்டத்திலும் அவளே....
அனைத்திலும் உறைவாள்
மனத்தால் அன்னையே....

காவியம் போற்றும்
கருணையின் கடலே...
இன்னொரு பிறப்பாய்...
வரவேண்டும் உன்னிடமே.

க. நாகேஸ்வரா, சண்டிலிப்பாய்.

## என்(னை) காதலி

கன்னியவளைக் கண்டவுடன் காதல்
கணக்கின்றி கலங்கடிக்க
கவிழ்ந்து விழுந்தேன்
கை கொடுக்க வந்தவளோ - கடைசி
நொடியில் யோசித்துவிட்டாள்!

காதல் சொல்லி
கடந்த நாட்கள் என்னோடு!
ஒவ்வொரு நாழிகையும்
என்னுடலில் வெந்நீரு!

கதைத்து பேசி மன்றாடினேன்
கண்மணியவள் - கண்ணீரால்
பதில் சொன்னாள்!
புரிந்துகொண்டது - புதிர்தான்
புண்பட்டது நெஞ்சம்தான்!
போகப்போக - நீண்டது மனதில்
சோகத்தின் முட்பதித்த
செரிக்கும் சாலை!
மௌனக்கடலில் மூழ்கிக் கொண்டு
கொஞ்சம் கொஞ்சமாய்க் - கொல்லுகிறாள்!

அவள் மனதில் அரங்கேறும்
உணர்வுகளின் தோறணைகள்
மன்றாட்டங்களின் - ஏற்பாடா???
சொல்ல வரும் - அவள்
எண்ணங்களின்
வார்த்தை வடிவங்களை - வாட்கள்
கொண்டு வதைக்கும்
வடிவமற்ற மர்மம்தான் - என்ன...?
துடிக்கிறது உயிர்...!
தெரிந்துகொண்டு தெளிந்துவிட!

எழில் ஒளிரும் - நெஞ்சத்தில்
எண்ணற்ற கவலைகளோ?!
என்மேலுள்ள வஞ்சத்தில்
ஏற்படும் சிந்தனைகளோ?!
இல்லை!
இவ்வையெல்லாம் வெந்தழல்
மனதில் நிந்தனைகளோ?!

உருவமற்ற உயிரொன்று
உள்ளமதை ஊசியின்றிக்
குத்துகிறது!! குடைகிறது!!!

அவள் வண்ண வதனம்
என் உயிர் நாடியின்
உட்புற வாசலில்
மரணம் ஜனனம் வரை
மறைவின்றி - ஜொலிக்கும்!
உன்னதமான உறவுடன்!

என்றென்றும் நீ - மட்டுமே
என் காதலி...!
என்றென்றும் நீ மட்டுமே
என்னைக் காதலி...!

எஸ்.சிபானி முஹம்மட்,
ஒலுவில்



## என் தங்கை!!



தன்னை வருத்தி
தன் பாசத்தை
ஊதியமாக தந்தவள்!!!

கள்ளமில்லா
வெள்ளை மனம்
கொண்ட குழவியவள்!!

என்னை காணாத
நொடி தோறும் சிந்தை
கலங்கி துயர் கொண்டிடும்
தாயவள்!!

இரகசியத்தையும்
ஒழிவுமறைவின்றி
ஒப்புவிக்கும் தோழியவள்!!

அகவையில் மூத்தவள்
என்றாலும் அவள்தன்
பாசத்தில் அடிமையாகி
கட்டுண்டு கிடப்பவன் நான்!
என் உயிரின் மறுபாதி
அவள்!!

எம்.யூ.அல்சாத், ஒட்டமாவடி.

PUBLIC LIBRARY JAFFNA

மஹேல ஜயவர்த்தன டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். கடந்த ஏப்ரலில் இருபதுக்கு இருபது வெற்றிக் கிண்ணத்துடன், இருபதுக்கு இருபது போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்த மஹேல தற்போது டெஸ்ட் போட்டிகளில் இருந்தும், முறையாக அறிவித்து ஓய்வு பெற்றுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் 11000 ரண்கள் எடுப்பது இமாலயச் சாதனை இதனை மஹேல செய்ததுடன் அந்த வரிசைக்குள் வரும் மிகக் குறைவானவர்கன சச்சின் டென்டுல்கர் றிக்கி பொன்ரிங், ஜக்கஸ் கலிஸ், குமார் சங்கக்கார ஆகியோருடன் பெருமையுடன் இணைந்து கொள்கிறார். பதினேழு வருட கிரிக்கெட் வாழ்க்கையில் 148 டெஸ்ட் போட்டிகள் கண்டு 34 சதம் கடந்து சராசரியை ஐம்பதுக்கு மேல்பேணிக்கொண்ட அதிசய வீரர் இவர்.

எஸ். எஸ். சி மைதானத்தில் தென் ஆபிரிக்காவிற்கு எதிரான டெஸ்ட்போட்டியில் டேல்ஸ்ரெய்ன், மக்காயா என்ரினி போன்ற விரைவுப் பந்து இயந்திரங்களை எதிர்கொண்டு 624 இணையாட்டம் ஒன்றை சங்காவுடன் பகிர்ந்தவர். சங்கா பெற்றது 287 மஹேல பெற்றது 374.

# சிறு உதாரணம் மட்டும்

மஹேல முதலாவது டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகிய போதே இலங்கை அணி 1997இல் 6 விக்கெட் இழப்பிற்கு 972 ஓட்டங்களை இந்தியாவிற்கு எதிராகக் குவித்தது. இதில் ஜயசூரிய குவித்தது 340 றொஷான் மஹநாம குவித்தது 225. மஹேல எடுத்தது 66 ஓட்டங்கள் மட்டுமே என்றாலும் அவரது புதிய வரவு அவருக்கு பல சாதனைகளை உருவாக்கும் சிந்தனையைச் தோற்றுவித்திருக் கும் என்பதில் சந்தேகம் இல்லை.




மஹேலவின் சொந்த மைதானம் எஸ்.எஸ்.சி.முன்னதாக பாகிஸ் தானுக்க எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டி பி.சாரா ஓவல் மைதானத்தில் நடைபெறுவதாக இருந்தது.

ஆனால் மஹேலவின் ஓய்வு அறிவிப்பைத் தொடர்ந்து அவரது சொந்த மைதானத்துக்கு ஆட்டம் மாற்றப்பட்டது.

இந்த மைதானத்தில் மஹேல குவித்த ஓட்டங்கள் 2863. விளையாடிய டெஸ்ட்போட்டிகள் 26. சராசரி 77.37 சதங்கள் 11 அரைச்சதங்கள் 8 மஹேல உண்மையில் இலங்கை அணிக்கும், அவரது ரசிகர்களுக்கும் பெரும் ஏக்கத்தைத் தந்து விட்டே விடைபெறுகிறார் என்பதே உண்மை.

# பெரும் பொறுப்பு




**உலகக்** கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முடிவடைந்ததும் எல்லா மட்டங்களிலும் பல்வேறு மாற்றங்கள் அதிரடியாகவும், நிதானமாகவம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் ஐரோப்பியக் கழகங்களின் முதன்மையானவற்றுள் ஒன்றான மென்செஸ்ரர் யுனைட்டட் அணியிலும் சில மாற்றங் கள் ஏற்பட்டுள்ளன. அதிலும் சுமூகமான முறையில் அணித்தலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

மென்செஸ்ரர் யுனைட்டட் அணியின் முகாமையாளர் லூயிஸ் வேன்கால் இவர் எப்போதும் அணித் தலைமை என்பது மிகவும் முக்கியமானதொன்று என்று கருதுபவர் இந்த நிலையில் மென்செஸ்ர் யுனைட்டட் அணியின் தலைவராக இருந்த சேர்பியரான நிமென்ஜா் விடிச் புதிய கழகம் ஒன்றைத் தேடி, இன்ரர் மிலான் கழகத்துடன் இணைந்து கொண்டுள்ளார். இந்த நிலையில் தான் மென்செஸ்ரர் அணியின் பல சிறந்த வீரர்களுள் இருந்து, அணித் தலைமைக்கு வெயின் ரூணி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ரூணி அணித்தலைவரானதும், அவர் விளையாடிய முதல் ஆட்டம் வலென்சியாக அணிக்கு எதிரான சினேக பூர்வமான ஆட்டமாகும் இந்த ஆட்டத்தில் மென்செஸ்ரர் யுனைட்டட் 2-1 என்று வெற்றிவாகை சூடியது ரூணியின் திறமை அர்ப்பணிப்பு, நுட்பங்கள் என்று எல்லாமே மிக உயர்ந்த நிலையில் காணப்படுகின்றன.

மேலும் இவர் எப்போதுமே இளந் தலைமுறை யினருக்கு ஆதர்சமாகவும், முன்மாதிரியாகவும் இருப்பவர் தனது அணித்தலைமைப் பொறுப்பை இவர் மிகவும் சிறப்பாகச் செய்பவர் என்பதில் எனக்கு நிறைய நம்பிக்கை உண்டு என்று கூறியுள்ளார் அணி முகாமையாளர்.




# நடந்ததும் நடவாததும்



நடுவர்களின் பணி மிகவும் கடினமானது கிரிக்கெட் ஆட்டங்களைப் பொறுத்தவரை இது இன்னும் கடினமா தென்றே எண்ண வேண்டியுள்ளது. அதுவும் குறிப்பா எல்.பி.டபிள்யூ விடயம் இன்னும் மிகுந்த சிக்கலானது பக்க சார்பாகவே. எனினும் நடுவர்கள் நடுநிலை தவறியோ நடப்ப தில்லை என்பது உண்மையென்றாலும் தவிர்க்க முடியாதபடி சில தவறுகள் நேர்ந்து விடுவதைத் தவிர்க்க முடியுமல்தான் இருக்கிறது இருந்தும் நடுவர்களின் தீர்ப்பில் திருத்தியுறாத பட்சத்தில் களத்தடுப்பாளர்களோ, துடுப்பாட்ட வீரரோ D.R.S. முறை மூலம் முறையிட முடியும். இதன் போது பல தட வைகள் நடுவரின் முடிவுக்கு மாறான முடிவே DRS முறை மூலம்கிடைக்கப்பெற்றுள்ளன. பாகிஸ்தான் இலங்கை போட்டியில் ஏற்பட்ட இத்தகைய சில சம்பவங்கள் பட்டிய லிடப்பட்டுள்ளன.

✸ பாகிஸ்தானின் யூனுஸ்கான் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டம் இழந்ததாக நடுவரால் அறிவிக்கப் பட்டார். ஆனால் யூனுஸ்கான் முறை யீடு செய்யவே அது ஆட்டம் இழப் பில்லை என்று அறிவிக்கப்பட்டது.

✸ மீண்டும் ஆட்டத்தின் 45 ஆவது ஓவரில் யூனுஸ்கான் அவுட் என்று அறிவிக்கப்பட்டது. இவர் முறையீடு செய்யவே அவுட் இல்லை என்று DRS முறை மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

✸ இலங்கை துடுப்பெடுத் தாடும்போது 53 ஓவரில் மஹேல அவுட் என்று அறிவிக்கப் பட்டார். அது முறையீட்டின் பின் அவுட் இல்லை என்று தீர்ப்பு மாற்றப்பட்டது.

✸ 145 ஆவது ஓவரில் டில்ருவான் பெரேரா எல்.பி.டபிள்யூ முறையில் அவுட் என்று தீர்மானிக் கப்பட்ட மீண்டும் மேல் முறை யீட்டின் மூலம் அவுட் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டார்.

✸ 150 ஆவது ஓவரில் தம்மிக்க, பிரசாத், விக்கெட் கீப்பரால் பிடி எடுக்கப் பட்டு ஆட்டம் இழந்ததாக அறிவிக்கப் பட்டார். மீண்டும் மேல்முறையிடு மூலம் அவுட் இல்லை எற்று அறிவிக்கப்பட்டார்.

✸ பாகிஸ்தானின் இரண்டாவது இனிங்ஸில் மிஸ்பா உல் ஹக் எல். பி.டள்யூ முறையில் ஆட்டம் இழந்ததாக அறிவிக்கப்பட்டார். ஆனால் மேன் முறையீட்டில் அவுட் இல்லைஎன்று அறிவிக்கப்பட்டார்.

✸ 59 ஆவது ஓவரில் மிஸ்பா அவுட் இல்லை என்று நடுவர்கூற, இலங்கை அணி மேன்முறையீடு செய்யவே, அவர் அவுட் என்று தீர்மானிக் கப்பட்டது.

✸ 64 ஆவது ஓவரில் அஸாட் ஷபீக் அவுட் இல்லை என்று நடுவர் கூற மீண்டும் இலங்கை அணி மேன் முறையீடு செய்யவே, அவர் அவுட் என்று தீரப்பு அளிக்கப்பட்டது.

இவை ஒருபுறம் இருக்க DRS முறையைப் பாவிக்காமல் இழப்பை எதிர்கொண்ட சில சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

✸ யூனுஸ்கான் 20 ஓட்டங்களுடன் இருந்தபோது அவுட்கொடுக்கப்படவில்லை. ஆனால் மேன்முறையீடு செய்திருந்தால் அவுட் ஆகி இருப்பார் (இவர் எடுத்த ஓட்டங்கள் 177)

✸ குமார் சங்கக்காரா 13 ஓட்டங் களுடன அவுட்ஆகிச்சென்றிருக்கவேண்டும். ஆனால் DRS முறைமையைப் பின் பற்றியமையால் தப்பிக் கொண்டு, இரட்டைச்சதம் அடித்துக் கலக்கினார்.

✸ அஹமட் செஷாட்அவுட்என்று அறிவிக்கப்பட்டதும் எதுவும் பேசமாமல் வெளியேறிவிட்டார். மேன்முறையீடு செய்திருந்தால் அவர் தொடர்ந்தும் விளையாடும் சந்தர்ப்பம் பெற்றிருப்பார்.

உலகின் முன்னணி சுழல் பந்து வீச்சாளரென்றால் இன்று பாகிஸ்தான் அணியின் சயீட் அஜ்மல் தான். இப்போது அவர் மீதும் குற்றப் பத்திரிகை வாசிக்கப் பட்டிருக்கிறது. இலங்கைக்கு எதிரான பாகிஸ்தான் முதலாவது டெஸ்ட் போட்டியின் பின்பே நடுவர்களால் முறையற்ற பந்துவீச்சு என்ற குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டுள்ளது. மைதான நடுவர்களாக இருந்த இயன் கோல்ட், புரூஸ் ஒக்சண்போட், மூன்றாவது நடுவர் றிச்சட் இலிங்வேத் ஆட்ட நடுவர் அன்டி பைகிறொவ்ட் எல்லோரும் இணைந்து அளித்த் அறிக்கையில் அஜ்மரின் சில பந்து வீச்சுக்கள் சந்தேகத்துக்க இடமான முறையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

அஜ்மலின் சந்தேகத்துக்குரிய பந்து வீச்சு வீடியோ கிளிப்புக்கள் பாகிஸ்தான் அணி முகாமை யார் மொய்ன்கான் பயிற்றுனர் வக்கார் யூனுஸ் சுழற்பந்து வீச்சுப் பயிற்றுனர் முஷ்டாக் அஹமட் ஆகியோரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் இது பற்றி கலந்தாய்வு செய்ய இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அஜ்மல், முன்னதாக 2009 இல் ஒருமுறை இத்தகைய குற்றச்சாட்டொன்றுக்க உட்பட்டிருந் தாலும் பின்னர் சந்தேகம் களையப்பட்டு தொடர்ந்தும் விளையாட அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அஜ்மல் இதுவரை வெற்றிகரமான சுழல் பந்து வீச்சாளராகவே காணப்பட்டு வந்துள்ளார். 174 டெஸ்ட் விக்கெட்டுக்கள் 182 ஒருநாள் விக்கெட்டுக்கள் 85 இருபதுக்கு இருபது விக்கெட்டுக்கள் என்று மூன்று வகைக் கிரிக்கெட் போட்டிகளிலும் சிறப்பாகவே பந்துவீசி வருகின்றார். ஆனால் தற்போது உருவாகியுள்ள புதிய சர்ச்சை என்ன நிலையில் செல்லும் என்பதைச் சொல்லத் தெரியிவல்லை. எதற்கும் விசாரணைகளும் தேவைப்பட்டால் மேற்கொள்ளப்படவேண்டிய பரிசோதனைகளும்தான் முடிவு சொல்ல வேண்டும்.

# கண்டம் தாண்டட்டும்






# நீங்களும் அழகியாகலாம்



அழகு விஷயத்தில் பிரச்சினை இல்லாதவர்களே இல்லை. அதற்காக விலை உயர்ந்த அழகு சாதனங்களை முகத்தில்... உடலில் பூச வேண்டிய அவசியமில்லை. முதலில் அழகு என்பது மனசை பொறுத்ததுதான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மனசு நன்றாக இருந்தால் புன்னகை முகமாக... எல்லோரையும் வசீகரிக்கும் முகமாக... அழகாக மாறிவிடும். அழகுக்கு எதிராக இருப்பது மன அழுத்தம் மட்டுமே... மன அழுத்தம் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும். எப்போதுமே மனதும், உடலும் குளிர்ச்சியாகும் விதத்தில் நன்றாக குளிப்பது நல்லது.

உடம்பில் எண்ணை தேய்த்து குளித்தாலும் உடலும், மனதும் குளிர்ச்சியடையும். தினமும் எண்ணை தேய்த்து குளிப்பது இள நரையை தடுக்கும். மேலும் வாத நோய்களை போக்கும். உடம்புக்கும் புத்துணர்வு கிடைக்கும். சருமத்துக்கும் மெருகு கூடும். உடலுக்கு ஆரோக்கியமும் ஏற்படும்.

அதுமட்டுமின்றி நமது உடம்பில் சேரும் விஷத் தன்மைகளையும் நீக்கும். ஒவ்வொருவரின் உடல்வாகுக்கு தகுந்தாற்போல் எந்த எண்ணையை தேய்த்து குளிக்கலாம் என்பதை ஆயுர்வேதம் கூறுகிறது. அதை அறிந்து உங்களுக்கேற்ற எண்ணையை தேய்த்துக் குளிக்கலாம்.

இன்றைக்கு சோப்பு போட்டு குளிக்காத மனிதர்களே இல்லை என்று சொல்லலாம். சோப்பு இல்லை என்றாலும் அந்த தன்மை உடைய ஷாம்புவோ அல்லது பவுடரோ தேய்த்தும் குளிக்கின்றனர். அதற்கு பதிலாக தேன், பால், கற்றாழைச்சாறு கலந்த கலவையை உடலில் தேய்த்துக் குளிக்கலாம்.

டை அடிப்பதற்கு பதிலாக 100 கிராம் மருதாணி தூள், 20 கிராம் நெல்லிக்காய் தூள் ஆகியவற்றுடன் சிறிதளவு தண்ணீர சேர்த்து ஊற வைக்கவும். காலையில் முடியில் தேய்த்து அரை மணி நேரம் கழித்து கழுவினால் அல்லது குளித்தால் நரையை போக்க இது உதவும்.

நிறைய காய்கறிகள் சாப்பிடுவோருக்கு சருமம் பளபளப்பாக இருக்கும். இதனால் அவர்கள் எப்போதும் அழகாக இருப்பார்கள். கேரட், கருணைக்கிழங்கு, வெங்காயம், கீரை, புடலங்காய் இதெல்லாம் சாப்பிட்டால் உடல் வனப்பு கூடும்.

உடல் மெலிந்தவர்கள் குண்டாக மாறுவதற்கு பல முயற்சிகளை எடுப்பதற்கு பதில்... 101 நாளில் எளிதாக குண்டாகலாம்.

50 கிராம் வெந்தயத்தை வேக வைத்து... அதனுடன் ஒரு மேசைக்கரண்டி நெய், வெல்லம் சேர்த்து....

101 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடலில் ஈஸ்ட்ரோஜென் அதிகரித்து உடம்பு குண்டாகிவிடும். ஈஸ்ட்ரோஜென்னை அதிகரிக்கும் சக்தி வெந்தயத்துக்கு உண்டு.

குண்டான உடம்புடன் கஷ்டப்படுபவர்கள், உடல் மெலிய... 50 கிராம் கொள்ளை வறுத்து... பொடியாக்கி தினமும் சாப்பிடவும். இது உடலில் உள்ள தண்ணீரை நீக்கி உடல் எடையை குறைத்துவிடும். உங்களுடைய உடல் சரியான நிலைக்கு வந்தவுடன் கொள்ளு சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ளலாம். அல்லது தொடர்ந்து சாப்பிட்டாலும் உடலுக்கு நல்லதே.

## வாழைக்காய் மிளகு வறுவல்

**தேவையான பொருட்கள்:**

வாழைக்காய் - 1
மஞ்சள் தூள் - 1
சிட்டிகை மிளகாய் தூள்-1/2 டீஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்
பெருங்காயத் தூள் - 1
சிட்டிகை கடுகு - 1 டீஸ்பூன்
அரைப்பதற்கு. தேங்காய் - 2
டேபிள் ஸ்பூன் இஞ்சி - 1/2 இன்ச்
பூண்டு - 4-5 மிளகு - 2-3 டீஸ்பூன்

**செய்முறை:**

முதலில் வாழைக்காயின் தோலை நீக்கிவிட்டு, சற்று நீளமாக வெட்டிக் கொள்ள வேண்டும. பின்னர் அதனை நீரில் போட்டு பாதியாக வேக வைத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பின்பு அதனை ஒரு பௌலில் போட்டு, அதில் உப்பு, மிளகாய் தூள், மஞ்சள் தூள் ஆகியவற்றை சேர்த்து பிரட்டி 15 நிமிடம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு அரைப்பதற்கு கொடுத்துள்ள பொருட்களை மிக்ஸியில் போட்டு, தண்ணீர் சேர்த்து பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். அடுத்து ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும், கடுகு, பெருங்காயத் தூள் சேர்த்து தாளித்து, ஊற வைத்துள்ள வாழைக்காயை சேர்த்து 3 நிமிடம் கிளறி, பின் அரைத்து வைத்துள்ள மசாலா மற்றும் உப்பு சேர்த்து நன்கு பிரட்டி விட வேண்டும். பின் அதில் லேசாக தண்ணீர் தெளித்து, மூடி வைத்து 2 நிமிடம் வாழைக்காயை வேக வைத்து இறக்கினால், வாழைக்காய் மிளகு வறுவல் ரெடி!!!



## தலைமுடி செழித்து வளர



தலை முடி நன்கு வளர...தினமும் முருங்கைக்கீரையை சூப் செய்து சாப்பிட்டால் தலை முடி நன்கு செழித்து வளர ஆரம்பிக்கும். நல்ல பலன் கிடைக்கும்(தொடர்ந்து 3 மாதங்கள்)இது அனுபவத்தில் கண்டது.

**முருங்கைகீரை சூப் செய்யும் முறை:**

முருங்கைகீரை - 2 கப், வெண்ணெய் 1 - டீ ஸ்பூன்,, உப்புத்தூள், மிளகுத்தூள் - சிறிதளவு

முதலில் 2 டம்ளர் தண்ணீர் சேர்த்து சுத்தம் செய்து வைத்த கீரையை போட்டு 7 நிமிடங்கள் வேகவைத்துக்கொள்ள வேண்டும். கீரையில் உள்ள சத்து தண்ணீரில் இறங்கி விட்டிருக்கும்.

அதை உடனே எடுத்து வடிகட்டி (இல்லையெனில் சத்துக்கள் திரும்பவும் கீரைக்கே சென்றுவிடும்), தேவைப்பட்டால் வெண்ணை சேர்க்கலாம் சூட்டிலேயே உருகிவிடும். திக்காக வேண்டும் என்று நினைப்பவர்கள் கார்ன் ஃப்ளோரை சிறிது தண்ணீரில் கரைத்து சேர்த்துக்கொள்ளலாம்.(வடிகட்டியபின் இதை சேர்த்து இரண்டு கொதி விட்டு இறக்கவும்) பின்பு மிளகுத்தூள், உப்புத்தூள் சேர்த்து பருக வேண்டும்.

# கேள்விக் குறியாகும் பெண்களின் வாழ்வு ?



**ஒரு பெண்ணால் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும் என்பது உண்மையான ஒன்றாகவே காணப்படுகின்றது. பல குடும்பங்களில் பெண்களின் அடாவடித்தனத்தினால், அவள் கணவன் மீது கொள்ளும் சந்தேகம் மற்றும் விட்டுக்கொடுப்பில்லாத் தன்மை, என்பனவும், இல்லாமை மாமியாரை மதியாமை போன்ற காரணங்களினால் ஆண்களின் வாழ்வு சின்னாபின்னமாகியிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மன நிம்மதி தேடி மதுவுக்கு அடிமையாகி பிறர் மாதிடம் அன்பினைத் தேடிச் செல்லும் ஆண்களும் இல்லாமல் இல்லை.**

அளவெட்டி. ப.உதயகுமார்

பெண்களில் ஒரு சாராரின் வாழ்வு சிதைந்து போக சீதனமும், சாதிக் கொடுமையும் காரணங்களாகி கண்ணீரே சொந்தமென்று கதி கலங்கி வாழ வேண்டிய நிர்ப்பந்தம் பெண்கள் பக்கத்திலே உள்ளது!

ஆக கூட்டிக் கழித்துப் பார்த்தால் பெண்களின் வாழ்வுக்கு விடுதலை வேண்டும். ஒரு ஆணுக்குப் பெண் சமம் என்கின்ற சமத்துவ நிலை உருவாக வேண்டும். என் தாயும் பெண்ணே தாரமும் பெண்ணே. என்னுடன் கூடப் பிறந்தவளும் பெண்ணே. என்கின்ற எண்ணம் எல்லோர் மனங்களிலும் உதயமாகவேண்டும். இதனை ஆண்களே கருத்திலே கொள்ளவும் வேண்டும்.

இதேவேளை இக்கட்டுரையை வாசிக்கும் ஆண்கள் என்னத் திட்டவும் கூடும். அல்லது கண்டனம் தெரிவிக்கவும் கூடும். ஏனென்றால் நான் முன்பு எதிய விடயங்கள் யாவும் ஆண்களுடைய தவறினாலும் செயலினாலும், உண்டாவதாகவே காட்டியிருக்கின்றேன். உண்மையும் அதுதான்.

ஆனாலும் எல்லாத் தவறுகளையும் ஆண்களின் மீது அடுக்கிச் செல்ல முடியாது. பெண்களின் பக்கத்திலும் தவறுகள் இல்லாமல் இல்லை. ஆவதும் பெண்ணாலே மனிதன் அழிவதும் பெண்ணாலே என்று ஒரு கவிஞன் எழுதிய பாடல் வரிகள் இந்த இடத்துக்கு பொருந்தும் என்று எண்ணுகின்றேன்.

ஒரு பெண்ணால் ஆக்கவும் முடியும். அழிக்கவும் முடியும் என்பது உண்மையான ஒன்றாகவே காணப்படுகின்றன. பல குடும்பங்களில் பெண்களின் அடாவடித்தனத்தினால். அவள் கணவன் மீது கொள்ளும் சந்தேகம் மற்றும் விட்டுக்கொடுப்பில்லாத் தன்மை, என்பனவும். இல்லாமை மாமியாரை மதியாமை போன்ற காரணங்களினால் ஆண்களின் வாழ்வு சின்னாபின்னமாகியிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மன நிம்மதி தேடி மதுவுக்கு அடிமையாகி பிறர் மாதிடம் அன்பினைத தேடிச் செல்லும் ஆண்களும் இல்லாமல் இல்லை.

ஆகவே பெண்தான் குடும்பத்துக்கு குல்விளக்கு. அவள் சீரில்லை என்றால் நங்கூரமின்றி தத்தளிக்கும் படகினைப் போன்று குடும்பம் பாழாகி விடும். குடும்பத்தினை நிர்வகிக்க வேண்டிய பெரும் பொறுப்பு பெண்களிடமே உள்ளது. எனவே பெண்களும் பொறுப்புடன் நடந்து மானம், மரியாதையைக் காத்துக்கொள்ளப் பழக வேண்டும்.

இக்கட்டுரையின் நோக்கம் ஆணையோ. பெண்ணையோ குற்றம் சாட்டுவது இல்லை. சமூகத்திலே புரையோடியிருக்கும் சம்பவங்களைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் அடுத்தவர்களுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என்பதாகும். ஆனாலும் இன்றைய நவீன யுகத்திலே கட்டுப்பாடற்ற, கட்டுப்படுத்த யாருமில்லாத நிலையினை வைத்துக் கொண்டு யாரும் யாரையும் கொடுமைப்படுத்தவோ, கொடுமைக்கு உள்ளாக்கவோ முடியாது. வேலியில்லாத பயிரைப் போல வேலியே பயிரை மேயும் கதையினைப் போல இன்றைய வட புலத்துப் பெண்களின் வாழ்வு துயரம் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகின்றது! வன்முறைகள் நிறைந்ததாகவே காணப்படுகின்றன. கொலைக்களமாகக் காணப்படுகின்றது.

சட்டத்திலே உள்ள ஓட்டையினைப் பயன்படுத்தி, குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ளபாதிக்கப்பட்ட, பாதிப்புக்கு உள்ளான பெண்களின் வாழ்வுக்குப் பதில் கூறுவது யார்? இந்த நிலை தொடருமானால் நாளைய பெண்களின் வாழ்வு கேள்விக்குறியாகும் என்பதில் சந்தேகமே இல்லை.

(முற்றும்)

**250/= பரிசு — வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**

**பரிசுப் போட்டி இல :-433**

**கேள்வி: சர்வதேச மகளிர்தின கொண்டாட்டம் எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 01. 09. 2014

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 432
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 431இற்கான விடை :- பரம்பரை வாகு, தூக்கமின்மை,சரிவிகித உணவு உண்ணாது, கணினி, டி.வி முன் அதிக நேரம் இருப்பது.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :-
ராணி அரசரத்தினம்,
புகையிரத நிலைய வீதி, மன்னார்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

433

பெயர் : ..................
முகவரி : ..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
கையொப்பம் : ..................

கிழக்கான்





# கொக்கட்டிச்சோலை பனையறுப்பான் திட்டமிடப்பட்ட வன்முறையா?

**கிழக்கில்** மாத்திரமல்ல நாட்டின் அனேக பிரதேசங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்திய சம்பவம் ஒன்று மட்டக்களப்பில் மதுபான விற்பனையாளர்களால் ஏற்பட்டிருந்தது. கடந்த வாரம் உருவான இந்தப் பிரச்சினையால் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதுடன், 10பேர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள காஞ்சிரங்குடா, பனையறுப்பான் கிராமத்தில் 12ஆம் திகதி இரவு பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 11 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதே அந்தச் செய்தியாக இருந்தது.

ஆனால் அதன்பின்னர் இச்சம்பவம் தொடர்பில் ஆராயும்போது, இக்கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் கசிப்பு எனப்படும் (கள்ளச்சாராயம்) விற்பனை செய்யப்படுவதாக கொக்கட்டிச்சோலை பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸார் வீட்டைச் சோதனைசெய்து, அந்த வீட்டு உரிமையாளரை கைதுசெய்ய முற்பட்டனர். இந்த நிலையில், அங்கு பதற்ற நிலைமை தோன்றியது. அதனையடுத்து பெண் பொலிசாருடன் பொலிஸ் நிலையத்திலிருந்து, ஜீப் வண்டியில் பொலிஸார் வந்துள்ளனர்.

அதற்கிடையில் பதற்றநிலை மோசமடைந்து அடிதடியும் உருவாகி துப்பாக்கிச் சூடும் இடம்பெற்றுவிட்டது. ஆனால் பல சந்தேகங்கள் இதற்குள் இருப்பதனால் ஜீப் எப்போது தீ வைக்கப்பட்டது என்பது குறித்தும் சந்தேகம் இருக்கிறது.

இதில் பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் உட்பட 07 பொலிஸார் காயமடைந்துள்ளனர். பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் பெண்கள் இருவர் காயமடைந்துள்ளதுடன், இளைஞர்கள் இருவரும் இந்த மோதலில் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து குறித்த பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மறுநாள் மோதல் தொடர்பில் மூன்று பெண்கள் உட்பட 13ஆம் திகதி ஏழு பேரும் 14ஆம் திகதி ஆறுபேருமாக 13 பேரை சந்தேகத்தின்பேரில் கைது செய்தனர். இதில் புதன்கிழமை பாலிப்போடி குணசீலன் மற்றும் தேவநாயகம் கோவிந்தராசா, மாணிக்கம் தவமலர், வேல்முருகு ஜெகரன், வேல்முருகு டிலக்ஜன், வேல்முருகு வல்லியம்மை, வேல்முருகு சுகர்சினி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அதேபோன்று வியாழக்கிழமை சகாநாதன் ஜம்போகரன், தர்மலிங்கம் தங்கவடிவேல், சகாதேவன் ஜெயகரன், வெள்ளத்தம்பி சதாசிவம் பாக்கியராசா யோகரசா உட்பட ஆறு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், நீதவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டு எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள காஞ்சிரங்குடா பனைஅறுப்பான் கிராமத்தில் செவ்வாய்க்கிழமை(12) இரவு கள்ளச்சாரயம் விற்பனை செய்வதாக கூறப்படும் வீடொன்றை பொலிஸார் சோதனையிட சென்றபோது அங்கு பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் ஏற்பட்டது என்று வெளிப்படையாகச் சொன்னாலும் இதில் ஏதோ உள்ளே ஒழிந்திருப்பதாக சந்தேகங்கள் வெளியிடப்பட்ட வண்ணம் இருக்கிறது.

சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நாலுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த வீட்டார் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்டுவந்தவர்கள் என்றும், ஏற்கனவே இவர்கள் பல தடவைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் தெரிகிறது.

அதேநேரம், கடந்த 3 மாதங்களுக்கு முன்னரும் ஒரு தடவை சிறு சச்சரவு ஒன்று ஏற்பட்டிருந்தன என்றும் தகவலகள் தெரிவிக்கின்றன.

குறித்த பிரதேசங்கள் பின்தங்கிய பிரதேசம் என்ற அடிப்படையில் பல வீடுகளில் மதுபான விற்பனைகள் இடம்பெறுவது வழக்கமாக இருக்கிறது. அதேநேரம் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக கைது நடவடிக்கைகளுக்காக வருகின்ற பொலிஸாருடன் பலவிதமான உறவுகளைப் பேணுகின்றவர்களும் உள்ளனர். இதில் விஷேடம் என்னவென்றால் அதிகமாக இவ்வாறான சட்டவிரோத மதுபான விற்பனைகளில் ஈடுபடுபவர்கள் பெண்களாகவே இருக்கிறார்கள்.

குறித்த தினத்தில் தகவல் கொடுக்கப்பட்டதா அல்லது வழமையான நடவடிக்கைக்காக பொலிசார் வந்தனரா என்ற சந்தேகம் இருந்தாலும் பொலிஸ் வாகனம் எப்போது வந்தது என்ற சந்தேகம் இருக்கிறது.

பொலிஸ் நிலையத்தில் ஒரு சில பொலிஸாருடன் நல்ல உறவு இருப்பதனால் சமாளிப்பு வேலைகளில் ஈடுபட்டு வந்தமை கிராமத்திலுள்ளவர்களுக்கும் தெரிந்திருந்த நிலையில் வந்திருந்த பொலிஸாருக்கு கிராமத்து மக்கள் கட்டாயங்கள் எதையாவது கொடுத்திருக்கக்கூடும் என்று ஒரு சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் சிவில் உடையில் வந்த பொலிஸார் வீட்டில் இருந்தவர்களைக் கைது செய்ய முற்பட்டபோது குழப்பம் ஏற்பட பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்து வாகனத்தையும், கைதுசெய்யப்பட வேண்டியவர்கள் பெண்கள் என்ற வகையில் பெண் பொலிஸாரையும் அழைத்திருக்கலாம் என்ற சந்தேகம் இருக்கிறது.

வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சர் காரியாலயத்தில் பொலிஸ் அத்தியட்சரை சந்தித்து கொக்கட்டிச்சோலை பனையறுப்பான் பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அத்தியட்சர், குறித்த பெண்களால் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் தலை பலமாக தாக்கப்பட்ட நிலையில் எதுவும் செய்யமுடியாத நிலையிலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

அந்த வீட்டில் இருந்து மதுபானம் மீட்கப்பட்டது உண்மையெனவும் சம்பவம் தொடர்பில் 12பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் நான்கு பேரை தேடிவருவதாகவும் கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அத்தியட்சர் தெரிவித்தார்.

அதன் முடிவில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று சாதாரணமாக சொல்லிவிட முடியும்.

ஆனாலும் ஒரு குறிப்பிட்ட காலமாக ஆயுத அடக்கு முறைக்குள்ளேயே இருந்து பழகிப்போன தமிழ் மக்கள் அச்ச மனப்பான்மையுடனேயே காணப்படுகின்றனர். அவர்கள் எதுவிதமான உந்துதலும் இன்றி பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினார்களா என்பதுதான் இதில் முக்கிய கேள்வியாக இருக்கிறது.

இருந்தாலும், இது பொதுமக்களால் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டதா, பொலிஸாரால் திட்டமிடப்பட்டதா, அல்லது குறித்த மதுபான விற்பனையில் ஈடுபடும் குடும்பம் ஏதாவது செய்ததா என்பதும் சந்தேகமானதே!

மதுபான விற்பனையில் ஈடுபடுகின்றவர்கள், அதிகாரங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள அதனையே பாவிப்பதும் உண்டு. இருந்தாலும் கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் சொல்லப்படுகின்ற எந்தக் கருத்து உண்மை என்பதும் குற்றவாளிகள் யார் என்பதும் நீதிமன்றத்தின் விசாரணைகளிலேயே தெரியப்போகிறது அதுவரையில் எல்லோரும் அமைதி காப்போம்.

---

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## இந்திய கனவும் அமெரிக்க...

இருதரப்பு உறவுகளில் இருந்த இத்தகைய முணுமுணுப்புகளை வர்த்தகத் துறை, வெளியுறவுத் துறை அதிகாரிகள் வந்து சீர்செய்த பிறகு, வந்து இறங்கியது பீரங்கி வண்டி. மூன்று நாள் பயணமாக இந்தியா வந்த அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் சக் ஹேகல், "இந்தியா - அமெரிக்கா இடையேயான இராணுவ உறவை வலுப்படுத்துவதில் சட்ட, நிர்வாக நடைமுறைகள் தடையாக இருக்கக் கூடாது" என்று தெளிவுபடுத்தியிருக்கிறார். அவர் கூறுவதுவரை காத்திருக்காமல், பாதுகாப்புத் துறையில் 49வீதம் வரை அந்நிய முதலீட்டை அனுமதிக்கும் முடிவை மோடி அமைச்சரவை ஏற்கனவே எடுத்திருந்தது. "அந்த முடிவு இந்திய - அமெரிக்க இராணுவ உறவு முழு பரிமாணத்தை எட்ட உதவும்" என்று சக் ஹேகல் மோடி அரசின் முதுகில் தட்டிக் கொடுத்திருக்கிறார்.

ஈராக் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசும் நெருக்கடியான சூழலில் இந்தியாவில் இருந்த சக் ஹேகல், நடுவில் அமெரிக்க உயர் மட்ட குழு கூட்டத்தில் தொலை தொடர்புமூலம் கலந்துகொண்டிருக்கிறார். அந்த அளவுக்கு இந்தியப் பயணம் அமெரிக்க ஆயுதத் துறைக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

இவ்வளவு சிரமத்துக்கிடையே இந்தியா வந்திருந்த அவர், "இந்திய அமெரிக்கக் கூட்டுறவின் அடுத்தடுத்த நடவடிக்கைகள், தொட்டறியத்தக்க பலன்களை தருவதாகவும், குறிப்பிடத்தக்க சாதனைகளை நோக்கியும் இருக்கவேண்டும்" என்று கூறியிருந்தார். அதாவது, இந்தியா அப்பச்சே மற்றும் சினூக் ஹெலிகொப்டர்கள் வாங்கும் ஒப்பந்தம் அமெரிக்க நிறுவனங்களுக்கு $140 கோடி (சுமார் ரூ 8,400 கோடி) வருமானத்தை ஈட்டித் தரும் தொட்டறியத்தக்க பலனாக இருக்கும்.

இந்திய பயணத்தை முடித்துக்கொண்டு, தெற்காசியாவில் இந்தியாவை அமெரிக்க அடியாளாக உறுதி செய்துவிட்டு, பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை மட்டுப்படுத்த ஆஸ்திரேலியாவுடன் பாதுகாப்பு நட்புறவு உரையாடல் நடத்த போயிருக்கிறார் சக் ஹேகல்.

மேலும் மேலும் தாகத்துடன் புதுப்புது ஆயுதச் சந்தைகளை தேடிக் கொண்டிருக்கும் அமெரிக்கா, இந்திய ஆளும் அதிகார தரகர்கள் தலையில் மேலும் மேலும் அதிக விலையிலான பளபளப்பான ஆயுதங்களை திணித்து இந்திய மக்கள் பணத்தை கொள்ளையடித்துச் செல்ல ஆர்வமாக உள்ளது. இதை சாதிப்பதற்கு மற்ற எந்த நாட்டையும்விட இந்தியாவுடன் அதிக எண்ணிக்கையிலான கூட்டு இராணுவ பயிற்சிகளை அமெரிக்கா நடத்துகிறது. அதன்மூலம் அமெரிக்க இராணுவ நிறுவனங்கள் இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு சாதகமான அரசியல் மற்றும் தொழில்நுட்ப சூழலை உருவாக்கித் தருகிறது.

இந்தியா அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தங்கள் பெருமளவுக்கு போட்டியில்லாமல் அரசுகளுக்கிடையேயான ஒப்பந்தத்தின்மூலம் முடிக்கப்படுகின்றன என்கிறார் செல்லானி. 126 போர் விமானங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தம் போட்டி விற்பனை முறையில் அழைக்கப்பட்டபோது அமெரிக்க நிறுவனங்கள் ஒன்றுகூட தகுதி பெறவில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறார் அவர். இதிலிருந்தே அமெரிக்க நிறுவனங்கள் இந்திய அரசை எவ்வளவு மொட்டை அடிக்கின்றன என்பதை புரிந்துகொள்ளலாம்.

இந்தியா ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவிடமிருந்து வாங்கும் ஆயுதங்களின் மதிப்பு, அமெரிக்கா இஸ்ரேலைத் தவிர்த்த எந்த ஒரு நாட்டுக்கும் வழங்கும் மானிய உதவியைவிட அதிகமானதாகும். அமெரிக்கா பாகிஸ்தானுக்கு மானியமாக ஆயுதங்களை தருகிறது. அதன்மூலம் இந்தியாவை கூடுதல் ஆயுதங்களை வாங்கத் தூண்டுவதோடு, பாகிஸ்தான் போன்ற சர்வ மானிய ஆயுத வழங்கல்களுக்கான செலவுகளையும் இந்தியா போன்ற போலி வல்லரசு கனவு நாடுகளிடம் வசூலித்துக் கொள்கிறது.

இந்திய ஆளும் வர்க்கங்களோ தேச வேறி, போர் வெறி என்று சவடால் அடித்து மக்கள் பணத்தை ஆயுத பேரங்களில் அள்ளிவிடுகின்றனர்.

இந்தியாவில் கூட்டு உற்பத்தி தொழிற்சாலைகளை அமைப்பதன்மூலம் ஆயுத உற்பத்தியில் தற்சார்பை எட்டுவோம் என்று மோடி சவடால் அடிக்கிறார். ஆனால், கொடுப்பவன் மனம்வைத்தால் தானே எடுப்பவன் பெற்றுக்கொள்ள முடியும். அமெரிக்காவோ, ஜாவ்லின் டாங்கி எதிர்ப்பு ஏவுகணை போன்ற சாதாரண ரகங்களுக்கான கூட்டு உற்பத்தியை கரட்டாக தொங்கவிட்டு, இன்னும் பெரிய தொகையிலான ஆயுத தளவாடங்களை இந்தியாவின் தலையில் கட்டத் திட்டம் தீட்டிவருகிறது.

அடுத்த மாதம் மோடி அமெரிக்கா போகும்போது, இந்திய நலன்களை அமெரிக்காவிடம் மேலும் விற்பதற்கான உச்சகட்ட உடன்பாடுகளுக்கான தயாரிப்புகள் அமெரிக்க அதிகாரிகளால் கடந்த சில வாரங்களில் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்திய தேசம் விலை போய்க் கொண்டிருக்கிறது.

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)



1953ஆம் ஆண்டு ஹர்த்தாலை நினைவுகூர்ந்து கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஞானசார குழுவையும் மற்றுமுள்ள இனவாத மதவாத குழுக்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பங்களிப்பு செய்யவேண்டும்.

மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாடு தழுவியரீதியில் பாரியளவில் போராட்டமொன்றை முன்னெடுக்கவேண்டும்.

இடதுசாரி கட்சிகளின் போராட்டமாக அமையாது மக்களின் போராட்டமாக அது அமையவேண்டும். மக்கள் செயற்பாடுகளின் மூலம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என அவர் அந்நிகழ்வில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்யுமாறு இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் காணப்படும் இந்த அரசாங்கத்தின் ஆட்சியின்போதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ரத்து செய்ய முடியுமென வலியுறுத்தியுள்ளனர்.

இடதுசாரிக் கட்சிகளின் சிரேஷ்ட தலைவர்களான டி.யூ.குணசேகர, வாசுதேவ நாணயக்கார மற்றும் திஸ்ஸ விதாரண ஆகியோர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஞானசாரரால் பௌத்த மானம் போகிறது – அமைச்சர் மேர்வின் சீற்றம்**

பௌத்த பிக்குகளின் மரியாதையை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் நடந்து கொள்ளவேண்டுமென அமைச்சர் மேர்வின் சில்வா பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரருக்கு புத்திமதி கூறியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கௌதம புத்தரின் வாழ்க்கை நெறியைப் பின்பற்றும் பௌத்த பிக்குகளின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் தூய அர்த்தமுடையதாகவும் பண்பானவையாகவும் இருக்க வேண்மென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

“அடேய், நீ, வா, போ” போன்ற வார்த்தைகள் பௌத்த பிக்குகளின் வாய்களிலிருந்து வெளிவரக் கூடாது என அவர் வலியுறுத்தினார்.

பௌத்த பிக்குகள் இழிவான சொற்களைப் பயன்படுத்தினால் அது பௌத்த மதத்தின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைந்துவிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கடும் சொற்களை பௌத்த மததேரர்கள் பயன்படுத்துவதன்மூலம் உலக சமூகம், பௌத்த மத பிக்குகள் இவ்வாறுதான் பேசுவார்கள் என பிழையாக விளங்கிக்கொள்ளக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என அவர் எச்சரித்துள்ளார்.

ஞானசார தேரரின் கெட்ட நடவடிக்கைகள், தீயவார்த்தைகள் இழிகுணங்கள் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியவை என்று அவர் சினந்துகொண்டார்.

கௌதம புத்தர் வாழ்ந்த காலத்தில், இழிவான சொற்களைப் பேசிய பௌத்த பிக்கு ஒருவரின் வாயிலிருந்து புழுக்கள் விழுந்ததாகவும், ஞானசார தேரரின் நடவடிக்கைகளும் அவ்வாறு அமைந்துள்ளதாவும் அவர் தெரிவித்துள்ளர்.

ஞானசார தேரர் யாரிடமிருந்தோ பாரியளவில் பணத்தைப் பெற்றுக் கொண்டு மதத்தை அழிக்கும் சூழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்துவருவதாக அமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்கமாக குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இதேவேளை அமைச்சர் மேர்வின் சில்வாவின் கன்னத்தில் அறைவேன் என அண்மையில் ஞானசார தேரர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

**தொடர் - 19**

**முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறும் அசம்பாவிதங்கள் – ஆங்கிலத்தில் நூல் வெளியீடு**

நாட்டில் அண்மைக் காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்ற மதவிரோத சம்பவங்கள் பற்றிய தொகுப்பொன்று ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. எம்.ஐ.எம் மொஹிடீன் என்பவரே இதன் நூலாசிரியராகும்.

இந்த நூல்கள் ஏற்கனவே முஸ்லிம் சமூக சிவில் அமைப்புக்களுக்கும் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் வடகிழக்கு பிரச்சினைகள், முஸ்லிம்கள் வடக்கில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப் பட்டமை பற்றி பல நூல்களை எழுதியுள்ள எம்.ஐ.எம் மொஹிடீன் வடக்கு, கிழக்கிற்கு வெளியே அண்மைக் காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் சம்பவங்கள் பற்றி தற்போது இந்த இரு நூல்களையும் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளார்.

பல நூல்களை எழுதியும் முஸ்லிம் சமூகத்திற்கு ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை என்று அவர் கூறினார்.

எதிர்காலத்தில் வாழப்போகும் முஸ்லிம் சமூகம் எவ்வாறு தமது இருப்பை இந்த நாட்டில் பாதுகாத்துக் கொள்ளப்போகின்றது? என மொஹிடீன் கவலைப்பட்டுக் கொண்டார்.

Anti-muslim riots in Aluthgama and Beruwela என்ற நூலில் அளுத்கம, பேருவளையில் நடந்த சம்பவங்கள், 50க்கும் மேற்பட்ட அழிவுகள் மக்களின் அவல நிலை பற்றிய புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அத்துடன் தம்புள்ள மஸ்ஜித் தாக்குதல் தொடக்கம் பொதுபலசேனாவின் ஹலால் பற்றிய கூட்டங்கள் தேரரினால் இழைக்கப்படும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் முஸ்லிம் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள், ஜனாதிபதிக்கு கலிபா பட்டம் வழங்கியமை மற்றும் 20 வருடத்தில் 3 முஸ்லிம் நாடுகள் 90 பில்லியன் டொலர்களை இலங்கை அரசுக்கு அபிவிருத்திக்காக வழங்கியமை எனப் பல தகவல்கள் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

The road map to resolve Anti-muslim activities என்ற நூல் 100 ப்க்கங்களைக் கொண்டுள்ளது. பொதுபலசேனா, சிஹல உறுமய முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்ட சம்பவங்கள் ஏற்கனவே நவநீதம்பிள்ளையிடம் கையளித்த அறிக்கையும் இந்நூலில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

மேலும் முஸ்லிம்களின் சனத்தொகை, பள்ளிவாசல்கள், மத்ரசாக்கள். நிலத் தொடர்புகள் அடங்கிய தகவல்களும் இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

**ஞானசார தேரரின் செயற்பாடுகள் எல்லை கடந்துள்ளன –அமைச்சர் குழுவினர்**

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் 13.08.2014 அன்று மல்வத்த மஹாநாயக்க தேரரை சந்தித்தனர்.

பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரரின் செயற்பாடுகள் தொடர்பில் அதிருப்தி வெளியிடுவதற்காகவே இந்த அமைச்சர்கள் குழுவினர் மல்வத்த மஹாநாயக்க தேரரை சந்தித்திருந்தனர்.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, ஜானக பண்டார தென்னகோன், மேர்வின் சில்வா பாராளுமன்ற உறுப்பினர் சுமதிபால ஆகியோர் அடங்கிய குழுவினர் மல்வத்த மஹாநாயக்க தேரரை சந்தித்தனர்.

ஒரு பௌத்த மதகுரு என்ற வகையில் இல்லாமல் ஞானசார தேரரின் செயற்பாடுகள் எல்லை கடந்துள்ளதாகவும் அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சந்திப்பின்போது சட்டத்தை மீறும் பிக்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மல்வத்த மஹாநாயக்க தேரர் அரசாங்கத்துக்கு ஆசி வழங்கியதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

**புத்தசாசன பிரதி அமைச்சருக்கும் – இராவண பலயவிற்கும் இடையே சந்திப்பு**

முன்னர் வழங்கிய 5 கோரிக்கைகள் தொடர்பில் கடும்போக்கு அமைப்பான இராவண பலய அமைப்பின் இணைப்பாளர் ஹித்தாகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட குழுவினருக்கும், பிரதி புத்த சாசன அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தன ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று 13.08.2014 அன்று இடம்பெற்றுள்ளது.

சுமார் 2 மணி நேரம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ஹித்தாகந்தே சத்தாதிஸ்ஸ தேரர், பௌத்த மதத்திற்கு அடிப்படையில் பாதிப்பை ஏற்படும் விடயங்களை பாதுகாப்பது தொடர்பான சட்டமூலத்தை கொண்டுவருவது குறித்து இதன்போது பேசப்பட்டதாக குறிப்பிட்டார்.

அதன்மூலம் அனைத்து மதங்களுக்கும் நன்மை இருக்கின்றது. அதனூடாக தத்தமது மதங்களை பதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் அவ்வர் கூறினார் என்று ஹிரு வானொலி கூறியுள்ளது.

**இனவாத அமைப்புக்களை இல்லாதொழிக்க வேண்டும் – அமைச்சர் வாசுதேவ மீண்டும் வலியுறுத்து**

இனவாதத்தை தூண்டும் பொதுபலபல-சேனா அமைப்பைச் சேர்ந்த ஞானசார தேரரின் குழுக்களை இலலாதொழிக்க வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

**Anti-muslim riots in Aluthgama and Beruwela என்ற நூலில் அளுத்கம, பேருவளையில் நடந்த சம்பவங்கள், 50க்கும் மேற்பட்ட அழிவுகள் மக்களின் அவல நிலை பற்றிய புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**அத்துடன் தம்புள்ள மஸ்ஜித் தாக்குதல் தொடக்கம் பொது பலசேனாவின் ஹலால் பற்றிய கூட்டங்கள் தேரரினால் இழைக்கப்படும் முஸ்லிம்களுக்கு எதிரான நடவழிக்கைகள் முஸ்லிம் அரசியல்வாதிகளின் நடவழிக்கைகள், ஜனாதிபதிக்கு கலிபா பட்டம் வழங்கியமை மற்றும் 20 வருடத்தில் 3 முஸ்லிம் நாடுகள் 90 பில்லியன் டொலர்களை இலங்கை அரசுக்கு அபிவிருத்திக்காக வழங்கியமை எனப் பல தகவல்கள் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.**




**திருகோணமலையில் 400 வருடப் பழைமையான பள்ளிவாசல் தகர்ப்பு!**

திருகோணமலை-வெள்ளைமணல், கரிமலையூற்று பள்ளிவாயல், 16.08.2014 அன்று இரவு முற்றாக உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

அதனை பார்வையிடுவதற்காக பொது மக்கள் சென்றபோது இராணுவத்தினர் தம்மை செல்லவிடாது தடுத்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இது அதியுயர் பாதுகாப்பு வலயமாகும்.

கடும் மழை பெய்துகொண்டிருந்த நேரத்தில் பள்ளிவாயல் இரகசியமாக உடைக்கப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் கூறுகின்றனர்.

கடலுக்கு செல்லும் மீனவர்களுக்கு குறித்த பள்ளிவாயலின் கோபுரம் வழமையாக தென்படும் நிலையில், 16ஆம் திக்தி கோபுரம் தெரியவில்லை என பொதுமக்களிடம் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதனையடுத்து குறித்த இடத்திற்கு பொதுமக்களும் பிரதேச முக்கியஸ்தர்களும் பள்ளிவாயல் நிர்வாகத்தினரும் சென்றுள்ளனர். எனினும் அதனை பார்வையிட இராணுவத்தினர் அனுமதி மறுத்துள்ளனர்.

2007ஆம் ஆண்டு முதல் குறித்த பிரதேசம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதுடன் 2009ஆம் ஆண்டு, இந்தப் பகுதியில் வசித்த மக்கள் படையினரால் வெளியேற்றப்பட்டுமிருந்தனர்.

இந்த பள்ளிவாயல் 1733ஆம் ஆண்டு கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள கருமலையூற்று பள்ளிவாசல் பாதுகாப்பு தரப்பினரால் உடைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரான மஹ்ரூப் இம்ரான் கூறுகிறார்.

2007ஆம் ஆண்டு, தான் மத்திய அரசில் அமைச்சராக பதவி வகித்த வேளை, திருகோணமலை மாவட்ட மீலாத் விழாவின்போது தனது முன்மொழிவின் அடிப்படையில், அரசாங்கத்தினால் 4 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டு இந்த பள்ளிவாசல் புனரமைக்கப்பட்டதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் கூறுகின்றார்.

அந்தப் பகுதியில் இராணுவ முகாம் அமைந்திருந்ததால், 2009ஆம் ஆண்டு முதல் வெளியார் அந்த பகுதிக்குள் செல்வதற்கு அனுமதிமறுக்கப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

இறுதியாக 2012ம் ஆண்டு கிழக்கு மாகாண சபை தேர்தல் காலத்தில் ஐ.ம.சு. முன்னணி வேட்பாளராக போட்டியிட்ட முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. எச். எம்.அஸ்வர் ஆகியோர் அந்தப் பகுதிக்கு சென்று பார்வையிட்டிருந்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

# ஆஸ்துமாவை துரத்தும் கற்பூரவள்ளி...!

கற்பூரவள்ளி ஒரு கிருமிநாசினியாகும். இதனை பல்வேறு நோய்கள் தீர்க்க பயன்படுத்தலாம். கற்பூரவள்ளியின் இலையைச் சாறெடுத்து அதனுடன் பனங்கற்கண்டு கலந்து குழந்தைகளுக்கு கொடுத்துவந்தால் இருமல் நீங்கும்.

இன்று குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அனைவரையும் பாதிப்புக்குள்ளாக்கும் நோய்களில் ஆஸ்துமாவும் ஒன்று. ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக மூச்சிரைப்பு ஏற்படும். இளைப்பு நோய் உருவாகும். மேலும் இருமலும் ஏற்படும்.

இவர்கள் தினமும் காலையில் கற்பூரவள்ளி இலையின் சாறெடுத்து அதனுடன் பனங்கற்கண்டு அல்லது தேன் கலந்து அருந்திவந்தால் ஆஸ்துமாவினால் உண்டான பாதிப்புக்களிலிருந்து படிப்படியாகக் குணமடையலாம்.

புகைப்பிடிப்பவர்கள் அதிகம் நுரையீரல் நோயினால் பாதிக்கப் படுகின்றனர். இதே நாளடைவில் புற்றுநோயாக மாறுகின்றது. இவர்கள் கற்பூரவள்ளி இலையினை சாறெடுத்து அதை நன்கு சுண்டக் காய்ச்சி பாதியான அளவு எடுத்து வடிகட்டி அருந்தி வந்தால் புகையினால் உணடான பாதிப்புகளிலிருந்து விடுபடலாம்.

காசநோயால் உண்டான பாதிப்புகள் குறைய கற்பூரவள்ளி சிறந்த மருந்தாகும். கற்பூரவள்ளி இலையை சாறு எடுத்து அதனுடன் தேன்கலந்து அருந்திவந்தால் காசநோயால் ஏற்பட்ட பாதிப்புகள் குறையும்.



# வாழ்வை குலைக்கும் தைராய்ட்!



பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது கால் வீக்கமடைதல், குமட்டல், மயக்கம், சோர்வு போன்ற சில பிரச்சினைகளை சந்திப்பார்கள். கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு ஏற்படும் ஒரு முக்கியமான பிரச்சினைதான் தைரொய்ட். தைரொய்ட் ஹோர்மோனானது ஏற்றதாழ்வுடன் இருந்தால், அவை நிச்சயம் வயிற்றில் வளரும் குழந்தைக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும்.

அதிலும் கர்ப்பமாவதற்கு முன்பே தைரொய்ட் பிரச்சினை இருந்தால், பின் கர்ப்படைந்த பின் அவை தீவிரமடைவதற்கு வாய்ப்பு அதிகம் உள்ளது. அதுவும் தைரொய்ட் சுரப்பி சுரக்கும் ஹோர்மோனானது அதிகம் இருந்தாலும் சரி அல்லது குறைவாக இருந்தாலும் சரி, அவை குழந்தையை நிச்சயம் பாதிக்கும்.

கர்ப்ப காலத்தில் தைரொய்ட் இருந்தால், அவை குழந்தையை எப்படியெல்லாம் தாக்கும் வாய்ப்பு உள்ளது என்பதை பார்க்கலாம். பெண்கள் கர்ப்பமாக இருக்கும்போது முதல் மூன்று மாதத்தில் இரத்தத்தில் உள்ள தைரொய்ட் ஹோர்மோனானது அளவுக்கு அதிகமாக இருந்தால், கருச்சிதைவு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளது.

அப்போது மருத்துவரின் ஆலோசனைப்படி தவறாமல் போதிய மருத்துவத்தை மேற்கொண்டு தைரொய்ட் ஹோர்மோனை கட்டுப்பாட்டுடன் வைத்துக்கொள்ளுங்கள். தைரொய்ட் ஹோர்மோனானது போதிய அளவில் சுரக்காமல் இருந்தால், அவை குழந்தையின் மனநல வளர்ச்சியானது பாதிக்கப்படும்.

ஆகவே தைரொய்ட் இருப்பவர்கள் கர்ப்ப காலத்தில் போதிய சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும். கர்ப்ப காலத்தில் தைரொய்ட் பிரச்சினைக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டிருக்கும் போது, தைரொய்ட்டுக்கு எடுத்துவரும் மருந்துகளில் உள்ள ரேடியோ அக்டிவ் அயோடின், சில நேரங்களில் குழந்தையின் தைரொய்ட் சுரப்பிக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே கர்ப்பமான பின்னர் மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்துகளை மட்டும் எடுத்து வாருங்கள். வீட்டில் உள்ள பெரியவர்கள் கைமருத்தும் என்றுகூறும் எதையும் எடுத்துக் கொள்ளாதீர்கள். பெண்களுக்கு ஆரம்பத்தில் தைரொய்ட் பிரச்சினை இருந்தால் அதற்கான உரிய மருந்துகளை எடுத்து கொள்ளவேண்டும்.

கர்ப்பமடைந்த பெண்கள் உங்களுக்கு தைரொய்ட் பிரச்சினை இருந்தால் ஆரம்பத்திலேயே மருந்துவரிடம் அந்த தகவலை தெரிவித்துவிட வேண்டும். அப்போதுதான் அவர் அதற்கான உரிய மருந்துகளை உங்களுக்கு பரிந்துரைப்பார். மருத்துவரின் ஆலோசனைகளையும், சரியான மருந்துக்களையும் எடுக்காவிட்டால் வயிற்றில் வளரும் சிசுவையை பாதிக்கும்.




# கண்ணின் ஒளி நீ!






**வ.குணபாலசிங்கம், நல்லூர்.**

மே மாதம்... 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை!

சுபமுகூர்த்த தினம்! கலண்டரில்... திகதியைப் பார்த்து மனம் கனத்தது. எல்லாம் நல்லபடியாக நடந்திருந்தால் இன்றைக்கு சங்கீதாவின் கழுத்தில் தாலி... இருந்திருக்கும்.

இல்லையே... விதியின் விளையாட்டு அனைத்தும் தலை கீழாகிப் போனது... பெருமூச்சு விட்ட பெற்றவர்களின் வயிற்றில் கனல்... முழுசாய் வளர்ந்து நின்ற மகனைப் பறி கொடுத்த தகிப்பு... செல்லமகளின்... மணக்கோலம் கனவாகிப்போன தகிப்பு....

யார் கண்பட்டது.. தெரியவில்லையே.. சங்கீதா இறுகிப்போனாள். மனம் மரவட்டையாய் சுருண்டுகொண்டது.

இந்தத் திருமணம் வேண்டாம் என்று நிறுத்தினதே அவள்தான் ஏன்...? ஏன்...? காரணம் தெரியாது பெற்றவர்கள் தவித்தார்கள்.

சங்கீதாவுக்கு கிரண். கிரணுக்கு சங்கீதா என்று இளம்பிராயத்திலேயே போட்டுவைத்த முடிச்சு. விதியால் அவிழ்க்கப்பட்டுவிட்டது.

உடன்பிறந்த சகோரதனை இழந்த வேதனையோ என்று நினைத்த பெற்றவர்கள் திருமணத்தை ஆறு மாதம் தள்ளிப் போடலாம் என்றதும் வேண்டவே வேண்டாம் என்று மகள் ஒரேடியாய் மறுக்க இருவரும் திகைத்துப் போனார்கள்... தெய்வமே.... இது என்ன சோதனை.. வம்ச விளக்கு அணைந்துபோனதே என்று வருந்துவதா?, ஒளிவிட்டுபிரகாசிக்க வேண்டிய குடும்ப விளக்கு இருட்டறையில் முடங்கிக் கிடக்கிறதே.. என்று வேதனைப்படுவதா.... அண்ணனை இழந்து பரிதவிக்கும் மகளைப் பார்த்து தாய் அழுதாள்... தந்தை பெருமூச்சு விட்டார். இனி தன் மகளின் வாழ்க்கை இப்படியே... பசுமைகாணாத பாலைவனாக இருந்துவிடப்போகிறதா? தந்தை தன் கூண்டுக்குள் சுருண்டு கிடப்பதுபோல இவளும் ஒடுங்கிவிடுவாளா.. மனசுக்குள் அங்கலாய்ப்பு...

இந்த மட்டும் கிரண் பிழைத்ததே பெரும் புண்ணியம்... சங்கீதாவின் அதிர்ஷ்டம்தான் என்று எண்ணி மகிழ்ந்தது வீண்... சே!

பாவம் கிரணுக்கு உடை வாங்க வேண்டும் என்று குஷியுடன் புறப்பட்ட பாபு உயிரில்லா கட்டையாய் திரும்புவான் என்று யார் கண்டார்கள்? மச்சான்... இன்னிக்கு றைவர் நான்தான் "கம்"ன்னு மாப்பிள்ளையா லட்சணமா பக்கத்தில உட்கார்ந்துக்கோ. திருமணம் வரைக்குமாவது கொஞ்சம் பந்தா பண்ணுப்பா... நானும் கொஞ்சம் "பாவ்லா" மரியாதை காட்டறேன். இல்லாட்டா சப்புன்னு இருக்கும் என்றெல்லாம் கிண்டல் செய்து... காரை ஓட்டியவன் நாலு சந்தியில்... காலன் கைவிரித்து... காத்துக் கொண்டிருக்கிறான் என்று அறியவில்லை...

எதிரே வந்த இராணுவ ட்ரக் வண்டி காரைக் கொஞ்சி முத்தமிட... விளைவு அந்த இடத்திலேயே நெஞ்சில் அடி வாங்கி மடங்கிவிட்டான் பாபு.

கிரண்.. தெய்வாதீனமாய் உயிர் தப்பினான் தான்... இருந்தும் சிதறித் தெறிந்த கண்ணாடித் துகள்களின் ஊடுருவலைத் தாங்காத கண்மலர்கள் பழுதுபட்டு முகம் முழுவதும்... கீறல்கள் ரணம் ஆறியும்... மாறாத வடுக்கள்...

டாக்டரின்... ஆலோசனையின் பேரில் பாபுவின் கண்கள் கிரணுக்கு பார்வை தந்தன... பாவுவின் இழப்பிற்காக, அழுவதா இல்லை கிரணின் அதிர்ஷ்டத்தை நினைத்து மகிழ்வதா... அழுதபின் சிரித்து... சிரித்து பின்னர் அழுது சே...! அவஸ்தை... விரோதிக்கும் வரக்கூடாத நிலை! கிரணை அருகில் இருந்து கவனித்துக்கொண்ட சங்கீதா ஏன் தொட்டாற்சிணுங்கியாய் சுருங்கிப் போனாள்.. ஏன் தன் எதிர்காலத்தை குழி தோண்டிப் புதைத்து... விட்டாள்....

திருமணம் நடக்காது... சங்கீதாவின் பிடிவாதம் கிரணுக்கு அதிர்ச்சி! அவனுடைய பெற்றவர்களுக்கும்தான்.

"ஏம்மா.. திருமணத்தை வேணும்னா தள்ளிப்போடலாமே..."

"ப்ளீஸ் அத்தை இந்த திருமணமே வேண்டாம்... சங்கீதா பாபுபோன துக்கம் எங்களுக்கும் இருக்கும்மா... எனக்கு தெரியும். அந்த வேதனையும் அதிர்ச்சியும்தான் உன்னை இப்படி பேசச் சொல்கிறது. போகப் போக மனசு தேறிவிடும்மா. நீயும் கிரணும் மாலையும் கழுத்துமா நின்னாத்தான் பாபுவோட ஆத்மாவுக்கு சாந்தி கிடைக்கும் சங்கீதா" என் மனசு ஒப்பவில்லை அத்தை விட்டுடுங்க...

"ஓ! நடந்தது அபசகுனம்னு நினைச்சு தவிக்கிறியா சங்கீதா சேச்சே! நாங்களே அப்படி நினைக்கல்லேயேம்மா. நீ எதுக்கு மனசை அலட்டிக்கிறே. பெரியவங்க நாங்கள் சொல்றோம்மா எல்லாம் நல்ல படியா நடக்கும். பார் கிரணுக்கும் கனடாவில் வேலை கிடைச்சிருக்கு. உன்னை மனைவியா அழைச்சிட்டு போகணுமாம்... துடிக்கிறான்..."

"என்னை மன்னிச்சிடுங்க மாமா. இந்த பேச்சே வேணாம்.." அங்கிருந்து விலகினாள் சங்கீதா... அவ மனசில் ஏதோ... துக்கம்... தவிக்கிறாள்... எல்லாம் ஆறட்டும் அப்புறம் பார்க்கலாம்.." காலம்தான் எல்லாத்துக்கும் மருந்து.

பொங்கிவந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் லட்சுமி.

முடிந்தவரை கெஞ்சிய கிரண் சோர்ந்தவனாய் கனடாவுக்கு புறப்படத் தயாராகிவிட்டான். என்னவெல்லாம் கனவு கண்டேன் சங்கீதா... அது கனவாகவே நின்றுபோச்சு... பார் இந்த பயணம் நமக்கு தேனிலவாக இருக்கும்னு ஆனந்தப்பட்டேன்... ம்ம்.. நடக்கவில்லை. ஏன் ஏன் வேண்டாம்னே சங்கீதா... சே! விபத்தில் நானும் போயிருந்தா... நல்லா இருந்திருக்கும். சட்டென்று வாயைப் பொத்தினாள் அவள்.


"ப்ளீஸ் கிரண் இப்படிப் பேசி என்னை நோகடிக்காதீங்களேன்... அப்போ சொல்லு சங்கீதா எதுக்கு நம்ம கல்யாணத்தை நிறுத்தினே. ஏன் வேணாம்னு சொன்னே.. ஏன் எதுக்குன்னு எனக்குள்ளேயே பதில் கேட்டுகேட்டு தலை வெடிச்சிடும்போல் தவிக்கிறேன். ஒருவேளை என்முகம் தழும்புகளால் வசீகரம் கெட்டுப்போய் விட்டதுன்னா: பிளாஸ்டிக் சேர்ஜரி இருக்கவே இருக்கு. பழையபடி அழகாயிடும். என்னை எதுவும் கேட்காதீங்க கிரண். பதில் சொல்ற நிலையில் நான் இல்லை..." அவளையே ஒரு கனம் உற்றுப் பார்த்தவன் ஓ.கே... விடைகொடுக்க ஏர்போர்ட்டுக்கு வருவேதானே.. என்று கேட்க கண்டிப்பாய் என்றாள் அவள்.

விமானநிலையத்தில் கிரண் கையசைத்து விடைபெற்றுக் கொண்டபோது கண்கள் கலங்கின. கண்ணீர் திரையினூடே மங்கலாகிப்போன அவன் தூரதூர சென்று மறையும்வரை பார்த்துக் கொண்டு நின்றாள்.

மனம் புலம்பியது... சொரி கிரண். இந்த ஜென்மத்தில் நமக்கு திருமணம் இல்லை. உங்கள் கண்களில் காதலை மட்டுமே பார்த்த நான் விபத்துக்கு அப்புறம் பாசத்தைத்தான் உணரமுடிந்தது. பாபு உன் கண்களில் வாழ்கிறான் என்கிற நினைப்பு அந்த கண்களில் காதலைப் பார்க்க பிடிக்காமல் தவிக்கிற... வேதனை உங்களுக்குத் தெரியாது. வெறும் "கார்னியா டிரான்ஸ் பிளாண்ட்"டாக நினைக்க தோணவில்லை கிரண்... என் அண்ணனின் கண்ணொளி பெற்ற பாசமலர்களாய்தான் நினைக்கிறேன். எதை சொன்னாலும் நீங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று எனக்குத் தெரியும். உங்கள்... கண்கள் சொரி... என் அண்ணனின் கண்கள் என்னை மனைவியாய்ப் பார்க்கக்கூடாது. ஒரு சகோதரியாகவே இருந்துவிடுகிறேன். நிச்சயம் ஒரு நல்ல துணையை நீங்கள் சந்திப்பீர்கள். அதற்கு என் வாழ்த்துக்கள். குட்பை மை டியர்... ப்ரெண்ட்... வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு புன்னகைத்தவாறு கடைசி முறையாய் திரும்பிப் பார்த்த அவனுக்கு கையசைத்தாள். கண்களிலிருந்து மறைந்தான்... மனசிலிருந்தும்தான் [illegible]....

# பெற்றால்தான் பிள்ளையா?

**சசிகுமார் றசி, அச்சுவேலி**



வாழ்க்கையில் ஆயிரம் கனவுகளை சுமந்தவளாய் புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தாள் காவேரி. அவள் எண்ணம்போல் கணவன் ஆனந்தும் அவளை மிகவும் பாசமாகக் கவனித்தான். தாய்க்கு ஒரே மகனானதால் காவேரியை தன் மகள்போல் பார்த்தாள். காவேரியின் வாழ்க்கைச் சக்கரம் தென்றலாய் வீச ஆரம்பித்தது. காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை.

காவேரி ஆனந் - திருமணம் முடிந்தது. இரண்டு வருடங்கள் கழிந்தது. மகன் திருமணம் முடிந்து பத்து மாதத்திலே பேரக்குழந்தையை கொஞ்சவேனும் என்ற கமலத்தின் ஆசை இரண்டு வருடங்கள் கடந்தும் கிடைக்காததால் காவேரிமீது கொஞ்சம் கொஞ்சமாக கசப்பு வந்தது. இரண்டு பேருக்குள்ளும் சிறுசிறு பிரச்சினைகள் பெரும் சண்டைகளாகவும் சிலவேளைகளில் மாறியது. தாயின் அரவணைப்பில் வாழ்ந்த ஆனந்தும் தாயா?, தாரமா? என்ற நிலைக்குத் தள்ளப்பட்டான்.

தாயின் பேச்சுக்கு முன்னுரிமை கொடுத்தான். தென்றலாய் வீசிய காவேரியின் வாழ்வில் புயல் அடிக்கத் தொடங்கியது. ஆனந்தின் குத்தலும் குதறலும் அவளை நிலை குலைய வைத்தது. வேலை முடிந்துவந்த ஆனந்த் மிகவும் ரென்சனாகக் காணப்பட்டான். அவனின் நிலையை கண்ட காவேரி, என்னங்க என்னாச்சு? ஒரு மாதிரி இருக்கிறீங்க? ஒபீசில் ஏதும் பிரச்சினையா ஒபீசில் ஒரு பிரச்சினையும் இல்லை. உன்னால்தான் பிரச்சினையே. எங்களுக்கு குழந்தை இல்லாத குறையை எல்லாரும் கிண்டலாக கதைக்கிறார்கள். என்னோடை நண்பன் அரவிந்தின் பிள்ளைக்கு இண்டைக்கு பிறந்தநாள். அவனுக்கு எங்களுக்கு பிறகுதான் திருமணமானது. அந்தப் பிறந்த நாளுக்கு போய் வந்து எல்லோரும் என்னை கிண்டல் அடிக்கிறார்கள். உன்னால்தானே எனக்கு இந்த அவமானம். காலா காலத்தில ஒரு பிள்ளையை பெத்துப் போட வக்கில்லாத உனக்கு ஏன் கல்யாணம்.

அதுவரை பொறுமையாக இருந்த காவேரி ஏனுங்க என்னை மட்டும் குறை சொல்லுகிறீங்கள். அந்தக் குறை என்னில்தான் இருக்கு என்று உங்களுக்கு எப்படித் தெரியும். அது உங்களுக்கு இருக்காதா? என் அம்மா, அப்பா இதுவரை நாளில் சொல்லவில்லையே. குழந்தை பெத்துக்க வக்கில்லாதவனை எம் பொண்ணுக்கு கட்டிவைச்சு அவ மலடியாய் போனாள் என்று. நீங்களும் உங்க அம்மாவும்தானே என்னை குறை சொல்லிறீங்கள். இதிலை குறை சொல்லுறத்துக் என்ன இருக்கு? யார் யாருக்கு என்ன நடக்கும் என்று அந்த இறைவனுக்குத்தான் தெரியும். அவன்போட்ட தீர்ப்பின்படிதான் எல்லாம் நடக்கும். எனக்குத்தான் அந்த குறை இருக்கு என்று நீங்கள் நினைத்தால் டாக்டர்கிட்ட வாங்க செக் பண்ணி பார்ப்போம். அவர் என்கிட்ட குறை இருக்க என்றுசொன்னால் நானாகவே உங்களைவிட்டு விலகிப்போறேன். நீங்கள் வேறு பெண்ணை திருமணம்செய்து குழந்தைபெத்து சந்தோசமாக வாழுங்கள். தன்மனதில் இருந்த ஆதங்கத்தை எல்லாம் கொட்டித் தீர்த்தாள் காவேரி. ஆனந்தின் மண்டையில் யாரோ சம்மட்டியால் அடித்ததுபோல் இருந்தது. காவேரியின் வார்த்தைகள் அவனுக்கு நியாயமாகப்பட்டது.

அப்போதுதான் தான் செய்தது தவறு என அவன் உணர்ந்துகொண்டான். காவேரியிடம் மன்னிப்புக் கேட்டான். காவேரி என்னை மன்னித்துவிடு இனிமேல் எங்களுக்குள் எந்தப் பிரச்சினையும் இருக்கக்கூடாது. நான் தப்புப் பண்ணிவிட்டேன். இல்லைங்க உங்களுக்கு ஒரு குழந்தை இல்லை என்ற ஆதங்கத்திலதான் நீங்கள் இப்படி எல்லாம் கதைச்சனீங்க.

எனுங்க நாங்கள் பெற்றால்தான் பிள்ளையா, உலகத்தில் எத்தனையோ குழந்தைகள் தாய், தந்தை இல்லாமல் அநாதையா வாழுறாங்கள். அந்தக் குழந்தையில ஒன்றை எடுத்து நாங்கள் வளர்க்கக்கூடாதா?

கர்வேரியின் யோசனை ஆனந்துக்கு சரியாகவேபட்டது. இருவரும் சந்தோசமாக அநாதை இல்லம் நோக்கி சென்றார்கள்.








# வரட்சி 14 மாவட்டங்கள் பாதிப்பு

**14 மாவட்டங்களில் வறட்சி: 1,750,575 பேர் பாதிப்பு:**

வட மாகாணத்தில் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டில் நிலவுகின்ற வறட்சியால் 14 மாவட்டங்களில் 5 இலட்சத்து 2,574 குடும்பங்களைச் சேர்ந்த 17 இலட்சத்து 50 ஆயிரத்து 575 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

வட மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களும், கிழக்கு மாகாணத்தில் மூன்று மாவட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான குடிநீர் மற்றும் உலருணவு பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக அந்தந்த பிரதேச செயலகங்கள் அறிவித்துள்ளன.

வட மாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் 14,603 குடும்பங்களைச் சேர்ந்த 51,495 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 16,576 குடும்பங்களைச் சேர்ந்த 56,469 பேரும், மன்னார் மாவட்டத்தில் 20,928 குடும்பங்களைச் சேர்ந்த 76,870 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 21,294 குடும்பங்களைச் சேர்ந்த 74,844 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 31,284 குடும்பங்களைச் சேர்ந்த 1,20,051 குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மொனராகலை மாவட்டத்தின் 32,039 குடும்பங்களைச் சேர்ந்த 1,28,193 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வட மத்திய மாகாணத்தில் பொலநறுவை மாவட்டத்தில் 45,274 குடும்பங்களைச் சேர்ந்த 1,47,439 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அனுராதபுரம் மாவட்டத்தில் 26,889 குடும்பங்களைச் சேர்ந்த 53,323 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் 10,180 குடும்பங்களை சேர்ந்த 31,278 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 71,479 குடும்பங்களைச் சேர்ந்த 2,52,673 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் 20,368 குடும்பங்களைச் சேர்ந்த 90,264 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் 1,39,664 குடும்பங்களைச் சேர்ந்த 4,73,125 பேரும் புத்தளம் மாவட்டத்தில் 25,412 குடும்பங்களைச் சேர்ந்த 88,091 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 26,584 குடும்பங்களைச் சேர்ந்த 1,06,420 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குருணாகலை மாவட்டமே வறட்சியினால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

சீரற்ற காலநிலை காரணமாகவே நாடெங்கும் வறட்சி ஏற்பட்டிருப்பதாக பேரிடர் மேலாண்மைத்துறையின் ஊடக உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி' பி.பி.சி.யிடம் கூறினார்.

மொனராகலை, புத்தளம், மட்டக்கப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களும் இதனால் பாதிப்படைந்துள்ளன.

தென்னை, வாழை மரங்கள் காய்ந்து கருகுகின்றன வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. விவசாயச் செய்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது.

உடனடி நிவாரணமாக அரசாங்கம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குக் குடிநீர் விநியோகத்தை முதன்மைப்படுத்தி அதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றது என அதிகாரிகள் கூறுகிறார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வரலாறு காணாதவகையில் இம்முறை வறட்சி நிலவுவதனால், தென்னை மற்றும் வாழைமரங்கள் பெருமளவில் அழிந்துள்ளன.

ஆயினும், வறட்சி காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதிய இழப்பீடும், நிவாரணமும் வழங்கப்படவில்லை என்றும் மக்கள் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

**நன்றி : இணையம்**

# ஊழியர்களை ஊக்குவிப்பதில் செயற்றிறன் மதிப்பீட்டின் முக்கியத்துவம்!

**எம்.எம்.பாத்திமா நஸீலா**
*(இறுதியாண்டு மாணவி*
*கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம்)*

மனிதவளம் என்பது ஒரு நிறுவனத்தினதும் நாட்டினதும் உற்பத்தித் திறனுக்கு அதிகளவிலான பங்களிப்பினை வழங்குகின்றது.

எந்தவொரு நிறுவனத்திற்கும் மனிதவளம், பௌதீக வளம் நிதி மற்றும் தகவல்கள் என்பன மிகவும் முக்கியமான அம்சங்களாகக் காணப்படுகின்றன.

இதில் மனிதவளம் வினைத்திறனுடன் பயன்படுத்தப்படல் அவசியமாகும். இந்தவகையில் ஊழியரின் பெறுபேற்று மதிப்பீடு என்பது அவர்களை அளவிடவும் அபிவிருத்தி செய்யவும் கட்டுப்படுத்தவும் உதவுகின்றது.

செயற்றிறன் மதிப்பீடானது ஆரம்ப காலந்தொட்டு நிறுவன முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு செயன்முறையாகும்.

இதன்மூலம் நிறுவனத்தில் உள்ள ஊழியர்களின் ஆளுமைகள், உள்ளார்ந்த இயல்புகள் மற்றும் அவர்களது வேலை செய்யும் ஆற்றல்கள் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

மேலும், மனித முகாமைத்துவத்தின் பகுதியான வேலை மதிப்பீட்டு செயற்பாடுகளில் கவனம் செலுத்த வேலை வடிவமைப்பு உதவுகின்றது.

நிறுவன அபிவிருத்தி வேலைக் கட்டமைப்பில் கவனம் செலுத்த சம்பளமும் கூலியும், நிர்வாகம் அதன் நடைமுறைகளில் கவனம் செலுத்துவதற்கும் ஊழியர்களது குறைகளை அறிந்து அவர்களுக்கு பயிற்சி, அபிவிருத்தி போன்றவைகளை வழங்க ஊழியர் செயற்றிறன் மதிப்பீடானது பயன்படுகின்றது.

செயற்றிறன் மதிப்பீடு என்பது பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளது. நிறுவனக் கட்டமைப்பினை மீளமைப்பு செய்வதற்கு, ஊழியர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், உற்பத்தி திறனையும் வினைத் திறனையும் அதிகரிக்கச் செய்தல் போன்றவற்றுக்கென மனிதவள முகாமையின் ஊழியர் செயற்றிறன் மதிப்பீடானது பயன்படுத்தப்படுகின்றது.

செயற்றிறன் மதிப்பிடுதல், தகுதி மதிப்பீடு, ஊழியர் மதிப்பீடு, ஊழியர் மதிப்பாய்வு எனப் பல்வேறு பெயர்களைக் கொண்டு செயற்றிறன் மதிப்பீடு அழைக்கப்படுகின்றது.

செயற்றிறன் மதிப்பாய்வினை விளக்குவதற்கு இரண்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. முதலாவது வகையானது நிர்வாகம் சார்ந்தவையாகவும், மற்றையது செயற்பாடு சார்ந்ததாகும் உள்ளன.

ஆண்டறிக்கை மற்றும் தகுதி அறிக்கை ஆகியவற்றைக் கொண்ட நிர்வாகம் சார்ந்தவகையே இங்கு கவனத்தில் கொள்ளப்படுகிறது. இந்த இரண்டு முறைமையுமே தொழில் நடத்துனர்களினால் பயன்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக தொழில் நியமங்களை உருவாக்குதல், ஊழியர்களின் நிகழ்காலப் பெறுபேற்றை நியமங்களுடன் தொடர்புபடுத்தி மதிப்பிடுதல். அத்துடன் இதுதொடர்பான பின்னூட்டலை ஊழியருக்கு வெளிப்படுத்தல் என்பவற்றுடன் ஊழியர்களின் குறைந்த பெறுபேற்றினை அதிகரிக்கும்வகையில் அவர்களை ஊக்கப்படுத்தல் அல்லது இருக்கின்ற பெறுபேற்றினையே சமத்துவமாக பேணல் என்பவற்றினை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளபடும் எந்த செய்முறையும் பெறுபேற்று மதிப்பீடு எனப்படுகிறது.

மனிதவளத் திணைக்களத்தின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 'விரிவுபடுத்தப்படுகின்ற செய்முறை பெறுபேற்று மதிப்பீடு எனப்படுகின்றது.

இச்செய்முறையானது வேலை தொடர்பான அறிவு, மனிதவளத் தீர்மானங்கள் ஊழியர்கள் பெறுகின்ற அவர்களது தொழிற் பெறுபேற்றுப் பின்னூட்டல்கள் என்பவற்றினை அபிவிருத்தி செய்ய உதவுகின்றது.

பெரும்பாலான நிறுவனங்கள் இரண்டு வகையான மதிப்பீடு முறைகளை பின்பற்றுகின்றன.

1. முறையற்ற மதிப்பீடு.
2. முறைசார்ந்த மதிப்பீடு.

அதாவது ஊழியர்கள் தெளிவான திசைபற்றி கொண்டுள்ள குறைவான அறிவு குறித்து அவர்களுக்கு வெளிப்படுத்துவதுடன் அவர்களது தனிப்பட்ட அபிவிருத்திக்கும் மிகவும் துணைபுரிகின்றது.

திருப்திகரமான, பூரணமான பெறுபேற்று மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டுமெனின் அங்கு பின்வரும் 4 திட்டப்பிரமாணங்கள் அறியப்படல் வேண்டும்.

1)ஊழியர்கள் எவ்வளவு தூரம் மதிப்பீடு, அபிவிருத்தி என்பவற்றின் செய்முறையில் பங்குபற்றுகின்றார்கள் என்பதை அறிந்திருத்தல்.

2)ஊழியர்களின் முன்னேற்றத்திற்கும் உதவியான மனப்பாங்கிற்கும் வழிவகுக்கக் கூடியவகையில் முகாமையாளரின் பெறுபேற்று மதிப்பீடு இருத்தல்.

3)உண்மையான இலக்குகள் உருவாக்கப்படல்.

4)ஊழியர்களின் பெறுபேறு பற்றியும் வேலைபற்றியும் முகாமையாளர்கள் அறிவுடையவர்களாகவும் அவர்கள் கண்காணிப்பவர்களாகவும் இருத்தல்.

இத்தகைய திட்டப் பிரமாணங்கள் காணப்படும்போது ஊழியர் பெறுபேற்று மதிப்பீடு தொடர்பாடலுக்கான ஒரு சிறந்த ஊடகமாகக் காணப்படும்.

இவ்வாறு மதிப்பீட்டினை மேற்கொண்டு இருசாராரும் கலந்துரையாடுவதனூடாக ஊழியரின் பலம், பலவீனம் என்பவற்றினை அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறான மனப்பாங்கு எவ்வளவு தூரம் திட்டமிட்ட இலக்குகளை அடைய வழிவகுக்கின்றது என்பதனையும் அறியலாம்.

இந்நிலையில் கடந்தகால பெறுபேற்றினை அடையாளம் காணுவது மட்டுமில்லாமல் அதனை தொடர்ந்து அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் அடையாளம் கண்டுகொள்கின்றார்கள்

இவ்வாறு ஊழியர் பெறுபேற்று மதிப்பீட்டினை மேற்கொள்ள பல்வேறு நிறுவனங்கள் பல்வேறு காரணங்களை கூறுகின்றபோதிலும் ஊழியருக்கு தற்போதுள்ள தொழிலில் கவனத்தை ஈர்ப்பதே மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

ஏனெனில், முறையான ரீதியில் பெறுமானங்களை வழங்குவதையும் மாற்றங்களை ஏற்படுத்துவதையும் பெறுபேற்று மதிப்பீட்டின் ஊடாக ஏனைய ஊழியர்கள் அறியும்போது இதன்விளைவாக அவர்கள் அவர்களது தொழிலில் தூண்டுதல் அடைவர்.

**ஊழியர்கள் ஊக்கப்படுத்தல்:**

ஊக்கப்படுத்தல் என்பது பிரதானமாக உளவியல் தொடர்பானதாகும்.

தனியாக இயங்கும் சக்தியாகவும் இதைச் செய்யாமல்விடு என்பதனை செயற்படுத்தும் வழியாகவும் அது காணப்படுகின்றது.

மேலும், குறித்த நிலையில், குறித்தநேரத்தில் குறிப்பிட்ட வழியில் குறிப்பிட்டவர் நடத்தை கோலங்களை உள்ளடக்கியதாக சிலவேளைகளில் அது காணப்படும். ஊக்கப்படுத்தலானது குறித்த நடத்தைக் கோலத்தினை தொடர்தலாகும்.

ஒரு நிறுவனத்தின் வெற்றியும் பாரியளவாக ஊழியர் எந்தளவு ஊக்கப்படுத்தப்படுகின்றனர் என்பதிலேயே தங்கியுள்ளது. ஒவ்வொருவரினதும் ஊக்கப்படுத்தல் வித்தியாசமானதாகவும் தனிப்பட்டதாகவும் காணப்படலாம்.

சிலரை பண ஊக்குவிப்பு ஊக்குவிக்கும் அதே நேரத்தில் மற்றவர்கள் அங்கீகாரம்மூலம் ஊக்குவிக்கப்படலாம்.

மேலும் நிறுவனத்தின் உற்பத்தி திறன் அதிகரிப்பானது ஊழியர் ஊக்கப்படுத்தலின் அடிப்படையிலேயே அமைகின்றது. இந்த ஆய்வு செயற்றிறன் மதிப்பீட்டினையும் ஊழியர் ஊக்கப்படுத்தலையும் கொண்டு செய்யப்படுகின்றது. நிறுவனங்களின் செயற்றிறனை மதிப்பீடு செய்தல் என்பது ஊழியர்களின் ஊக்கப்படுத்தலின் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது, அது எவ்வாறு ஒரு கருவியாக செயற்படுகின்றது என்பது பற்றியதாகும்.

செயற்றிறன் மதிப்பீடானது ஊக்கப்படுத்துவதற்கு தேவையான அத்தியாவசியமான மூலக்கூறாகும்.

இது ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. இந்த செயற்றிறன் திட்டமானது பரந்தளவில் பிரயோகிக்கப்பட்டு வந்தால் ஒரு ஊழியரிடம் காணப்படும் நம்பிக்கை, முயற்சி போன்றன திருப்திகரமான செயற்பாட்டிற்கு இட்டுச்செல்லும்.

[தொடர்ச்சி 22ஆம் பக்கம்...]





# மறந்தால் மன்னிப்பில்லை

அழகுக்கு இவள்தான் அகராதி!
எழிலுக்கு இவள்தான்
உதாரணம்
கையிலொரு குடம்
நெஞ்சிலிரு குடம்
மெய்யில் இவள் ரதம்
பொய்யில்லை இவள் நிஜம்!

மோகத்தில் துஷ்யந்தன்
மூழ்கிப் போனான்! சகுந்தலை
சகுந்தலை பெயர் அறிந்து
உயிர் உருகினான்!

விடா முயற்சிக்கு
மறுபெயர் காதல்!
அடிமேல் அடி அடித்தால்
அம்மியும் நகரும்!
இதயமும் இடம்பெயரும்!
இடம்பெயர்ந்தது
அவள் இதயம் இடம்பெயர்ந்தது

"இவனே எனையாளும்
மன்னன்" என்று குதித்தாள்
ஆனால் அவன் நாடாளும்
மன்னன் என்பது தெரியாது

ஒரு நாள் சகுந்தலை
நீராடி முடித்து
வெளிவந்தபோது
துஷ்யந்தன் தோன்றினான்.

ஈரமான துகில்
எழில்களையெல்லாம்
எடுத்துக் காட்டியது!

துஷ்யந்தனுக்கு காலைக் குளிரிலும்
உடல் தணலானது!
அவன் விழிகள் தாவிய
இடமெல்லாம் சகுந்தலைக்கு
தீப்பிடித்துக் கொண்டது!

தவிப்பும் தவிப்பும் தகிப்பாகின!
வா என்றான் கைதொட்டு பிடித்து
அவன் கைகளை ஊர்ந்து பரவ
தேகம் கொடியாகி அவன்மீது
புரண்டுவிட்டது.

வரவேற்பு கொடுத்தது பெண்மை
வரவேற்றது ஆண்மை.

துஷ்யந்தன் நாடாளும் மன்னன்
என்பதையறிந்தாள்!
நூலாய் இளைத்தவள்
துஷ்யந்தன் சபைக்கு
தேடிப் போனாள்.

யார் நீ?
முதல் கேள்வியே
முகத்தில் அறைந்தது!

முத்தத்தில் தோய்ந்ததும்
மோகத்தில் நனைந்ததும்
ஓருடலாய் இணைந்ததும்
மறந்தா போனது?

சோகம் உள்ளத்தை துளைத்தது
உங்கள் காதலி சகுந்தலை
சொல்லும்போதே உதடு அழுதது!
துஷ்யந்தன் சலனமற்றிருந்தான்.

எந்தச் சகுந்தலை
எத்தனையாவது சகுந்தலை
காதலிக்கும் பெண்களுக்கு
கணையாழி
கொடுப்பேன் உன்னிடம்
தந்தேனா என்னிடம் காட்டு

சகுந்தலையிடம் கணையாழி
இருந்தது காட்டவில்லை
தொலைந்துவிட்டது என்றாள்.

திரும்பிப்பாராமல் நடையைக்
கட்டினாள் நடை காட்டிக்
கொடுத்தது நினைவை
மீட்டிக் கொடுத்தது!

ஓ அவளா இவள்? அன்று பெற்ற
சுகம் நினைவில் இனித்தது
சகுந்தலை நில் என் உயிர் நீ
என்று கூவினான் அவள்
நிற்கவில்லை போய்
கொண்டிருந்தாள்.

விரைந்து போய் வழிமறித்தான்
கணையாழி இல்லாவிட்டாலும்
பரவாயில்லை என்றான்!

இந்தாரும் கணையாழி
முகத்துக்கு நேராக எடுத்து
நீட்டினாள்.
துஷ்யந்தன் ஆச்சரியப்பட்டான்!
சகுந்தலை விளக்கம் உரைத்தாள்
காதலனை தேடி வந்தேன்!
காமுகனைச் சந்தித்தேன்.

உமது அந்தபுர நந்தவனத்தில்
எத்தனையோ ரோஜாக்கள்
முகர்ந்து வீசிய ரோஜாக்களை
மறந்து போவீர்தான்.

மறக்க முடியாததும்
மறைக்க முடியாததும் காதல்!
ஒழுக்கமே வாழ்க்கையின்
முதல் துணை ஒழுக்கத்தை
துறந்து வாழ்பவர் நீர்!

உம்மோடு துணையானால்
துன்பமே மிஞ்சும்
சகுந்தலை போய்விட்டாள்
கணையாழி சிரித்துக்
கொண்டிருந்தது.

ஒழுக்கமே உயர்வு
உயர் பதவியோ,
பெரும் புகழோ அல்ல!

ஒழுங்கமற்றவன்
மன்னனேயானாலும்
மரியாதைக்குரியவனல்ல
என்று சொல்லாமல்
சொல்லிவிட்டாளே!

துஷ்யந்தன் முதற்தடவையாக
ஒரு பெண்ணிடம்
தோற்றுப்போனான்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"** அதிகாரம்: 14 - குறள்: 131

---

## சிந்தியா பதில்

**சிந்தியா! அரசாங்கம் தடுத்தாலும் மங்கள சமரவீர ஐ.நா. விசாரணைக் குழுவிற்கு சாட்சியமளிக்கப் போவதாகக் கூறுகிறாரே?**

**சி.மேனன், நுவரெலியா.**

இந்தக் கேள்வியிலிருந்து ஒன்றை மட்டும் ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அதாவது, அரசாங்கத்தின்மீது நீங்கள் அதிருப்தியில் இருக்கிறீர்கள். அதனால் சர்வதேச விசாரணையை எதிர்பார்க்கிறீர்கள், அந்த விசாரணை ஊடாக ஏதாவது அழுத்தங்கள் ஏற்படும் என நினைக்கிறீர்கள்.

இவ்வாறான மனோநிலையில் இருக்கின்ற உங்களுக்கு மங்கள சமரவீர போன்றவர்களின் வாய்வீச்சுக்கள் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

ஆனால் ஒன்றை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். மங்கள சமரவீரவிற்கும் தற்போதைய ஆளும் தரப்பினருக்கும் தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிந்திருக்கிறார்களே ஒழிய கொள்கை ரீதியான வேறுபாடுகள் இல்லை. எல்லோருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

எனவே மங்கள சமரவீர சாட்சியம் அளித்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சொல்லிவருகின்ற விடயங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் திருவாய் மலர மாட்டார் என்பது மட்டும் உறுதி.

**சிந்தியா! இலங்கையில் நடைபெறும் கருத்தரங்கில் இந்தியா பங்கு கொள்ளக்கூடாதென நாம் தமிழர் கட்சி சீறுகிறதே...?**

**எஸ்.சாமிலி, கம்பஹா.**

இதில் ஒன்றும் புதினம் இல்லையே!

நாம் தமிழர் கட்சி என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதன்படி செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாம் தமிழர் கட்சியின் இருப்புக்கு தேவையானது புலம்பெயர் தமிழர்களின் நன்கொடைகள். அந்த நன்கொடைகள் கிடைக்கவேண்டுமாயிருந்தால் அவர்கள் தொடர்ச்சியாக இப்படி தமது இருப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கவேண்டும்.

இந்த ஆடுபுலி ஆட்டம் எல்லோருக்குமே தெரியும். எனவே எவரும் கண்டுகொள்ள மாட்டார்கள். நீங்களும் கண்டுகொள்ளாது உங்களின் நிகழ்ச்சி நிரலில் பயணியுங்கள்.

**சிந்தியா? யாழில் வறட்சியின் பாதிப்பு அதிகமாகிக்கொண்டே இருக்கிறதே?**

**ம.உசேனி, திருநெல்வேலி.**

ஆம். உசேனி! உங்களின் இக்கேள்விக்கு பதில் எழுதிக் கொண்டிருக்கும்வேளையில் யாழில் சில பகுதிகள் மழைவீழ்ச்சியை பெற்றிருக்கின்றன.

ஆங்காங்கே அவ்வப்போது மப்பும் மந்தாரமுமாகக் காட்சியளிக்கின்றது. இருந்தாலும் கடந்த சில மாதங்களாக நிலவிய கடும் வறட்சியான காலநிலைக்கு இதுபோதுமானதாக இல்லை.

விவசாயிகள் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கி இருக்கிறார்கள். சில பிரதேசங்களில் நிலத்தடி நீர் வற்றிப் போயிருக்கின்றது. குடிநீருக்குக்கூட நல்ல கிராக்கி நிலவுகின்றது. இவையெல்லாம் சிறந்த முகாமைத்துவமும் தலைமைத்துவமும் இல்லாததன் வெளிப்பாடாகவே நாம் பார்க்கவேண்டும்.

**சிந்தியா! பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் முஸ்லிம்கள் பற்றி அவதூறான கருத்துக்களை வெளியிட்டு வருகிறாரே?**

**எம்.எஸ்.இர்ஷாத், புத்தளம்.**

"எமது நாட்டின் சாபக்கேடுகளில் இதுவும் ஒன்று. யாரொருவர் மக்கள் கவனத்தைப் பெற்று அரசியலில் செல்வாக்குமிக்கவராக வரவிரும்புகின்றாரே அவ்வாறானவர், தூக்குகின்ற ஆயுதம் இனவாதம்.


"இது இலங்கையில் வாழுகின்ற மூவின மக்களுக்கும் பொருந்தும். இதற்குப் பல உதாரண புருஷர்களைச் சொல்லமுடியும். அந்த வரிசையில் இடம்பிடிக்க முயல்கின்றவர்களில் ஞானசார தேரரும் ஒருவர்" என்று பக்கத்தில் உள்ள பெட்டிக்கடையில் இருக்கும் பெரியவர் ஒருவர் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்கக்கூடியதாக இருந்தது.

**சிந்தியா! வெற்றியோடு விடை பெற்றிருக்கிறாரே நம்ம மஹேல...?**

**யோ.சனுஷன், யாழ்ப்பாணம்.**

கடந்த 17 வருடங்களாக இலங்கை அணியின் துடுப்பாட்டச் சுவராக விளங்கிய மஹேல ஜெயவர்த்தனவின் விலகல் இலங்கை அணிக்கு பாரிய அழுத்தத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனினும், மறுமுனையில் சங்கக்கார இருப்பதால் அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முதியவர் ஒருவர் மூத்தவர்களின் திறமைகளையும் அனுபவங்களையும் உள்வாங்கி




தம்மைப் புடம் போட்டுக்கொள்ளவேண்டும்.

உலகப் புகழ்பெற்ற துடுப்பாட்ட வீரரான அரவிந்த டி சில்வாவின் இடத்தை மஹேல நிரப்பியது போன்று மஹேலவின் இடத்துக்கு பொருத்தமானவரைத் தெரிவு செய்யவேண்டிய சவாலான பொறுப்பு தற்போது தேர்வுக் குழுவினருக்கே ஏற்பட்டு வருகின்றது.

பார்ப்போம். யார் வருகிறார்கள் என்று?

---

*(21ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

### ஊழியர்களை ஊக்குவிப்பதில்...

திருப்திகரமான செயற்பாடு வெகுமதிகளை பெற்றுக்கொடுக்கும். ஒரு ஊழியனிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பதனை அவனோ, அவளோ தெளிவாக அறிந்திருந்தால் அது அந்த ஊழியரிடத்தில் காணப்படும் குறைகளை சீர்செய்து கொள்ளமுடியும். இந்தத் திட்டம் உயர்ந்தளவிலான செயற்றிறனுக்கான ஊக்கப்படுத்தியாக காணப்படுகின்றது.

செயற்றிறன் மதிப்பீடு பெறுமதி வாய்ந்த தகவல்களை மிக நெருக்கடியான தருணத்தில் மனிதவள முகாமைத்துவ செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு வழங்குகிறது. வெகுமதிகளை பகிர்ந்தளித்தல் (சிறப்பு ஊதியம், உயர்வு) அபிவிருத்திக்கான பயிற்சிகளின் தேவைக்கான பின்னூட்டல் மற்றும் மனிதவளமுறை மதிப்பீடு, சட்ட தேவைக்கான செயற்றிறன் ஆவணங்கள் செயற்றிறன் மதிப்பீடு வேலைத்திறனில் நேரான தாக்கத்தை கொண்டிருப்பதால் அது ஊக்கப்படுவதற்கு வழிவகுக்கிறது என Kuvass.P , என்பவர் 2006இல் கென்யாவில் ஆய்வை மேற்கொண்டார்.

எதிர்கால செயற்றிறனை முன்னேற்றுவதற்கான வழிகளை கண்டுபிடிப்பதும், வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்வதும் வளங்களில் இருந்து உச்சப் பயன்பாட்டை பெறுவதற்கான வழியை ஏற்படுத்துவதுமாகும் என Helen. Peterson தனது கட்டுரை ஒன்றில் செயற்றிறன் மதிப்பீட்டின் பொதுவான நோக்கம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

ஊழியர்களது பங்களிப்பு செயற்றிறன் மதிப்பீட்டில் உயர்வாகக் காணப்படும் போதும் அவர்களது திருப்திநிலையும் மதிப்பீட்டு முறையில் நீதித்தன்மையும் காணப்படும் போதும் ஊழியர்கள் அதிகமாக ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

மேலும் மதிப்பீடானது அதிகமாக ஊழியர்களின் பயிற்சிக்கும் அபிவிருத்திக்கும் பயன்படுத்தப்படவேண்டுமென ஊழியர்கள் விரும்புகிறார்கள் என்பவர் தனது ஆய்வின்மூலம் குறிப்பிட்டுள்ளார்.

எனவே மேற்கூறிய ஆய்வுகளை பார்க்கும்போது செயற்றிறன் மதிப்பீடு அனைத்து நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

தனியார்துறை அல்லது அரசதுறை நிறுவனங்களாக இருந்தாலும் செயற்றிறன் மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

ஏனெனில், செயற்றின் மதிப்பீட்டு செயன் முறையானது நிறுவனமொன்றுக்கு ஊழியர் ஒருவர் தொடர்பான பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைவதுடன் ஊழியர்களுக்கு ஊக்கப்படுத்தும் ஒரு கருவியாகவும் அமைகின்றது.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்று மில்லை."

**வணக்கமுங்கோ!**

**யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுரத்தடியில தமிழ் மன்னர்களுக்கு சிலை நிறுவியிருக்கினமுங்கோ. எடுத்த வீச்சுக்கும் மாகாணசபைக்காரர்தான் சிலைகளை நிறுவி தன்மானத் தமிழினத்தின்ர மானத்தை உலகுக்கு உணர்த்திப்போட்டினமோ எண்டு தயவுசெய்து தப்பாக நினைச்சுப் போடாதையுங்கோ.**

அவையள் தமிழ் மக்களின்ர தன்மானத்தை உசுப்பேத்திவிட்டு வாக்கு வாங்கிவினமே தவிர உப்பிடி சிலைகள் எல்லாம் நிறுவமாட்டினமுங்கோவ். அவையள சிலை வைக்கச் சொன்னால் முள்ளிவாய்க்காலில பிரபாகரனுக்குச் சிலை வைக்கப் போறம் எண்டு ஒரு சுனாமியை ஏற்படுத்தி தமிழ் மக்களைச் சூடாக்குவினம். மறுபக்கம் சிங்கள மக்களை கடுப்பாக்குவினம்.

பிறகு ஆமிக்காரர், ஆளுனர், அரசாங்கம், அதிகாரிகள் தங்கட சிலை வைப்புக்கு தடை போடுகினம் அல்லது ஒத்துழைக்கினம் இல்லை எண்டு ஆளுக்கொரு மேடையில காவணக் கட்டோட நிண்டு கூத்தாடுவினம். கடைசியில எதுவுமே நடக்காது. பிறகு ஐ.நா. சபையில பிரச்சினையைப் பேசி அங்கீகாரம் எடுக்கப்போறம் எண்டு தீர்மானத்தை வடக்கு மாகாணசபையில நிறைவேற்றி புளகாங்கிதம் அடைவினம்.

எங்கட தமிழ் ஊடக அதர்மங்களில் அந்தச் செய்திகளை சூடாப்போட்டு பரபரப்புக் காட்டுவினம். பிறகு வேறொரு சூடு கிடைத்ததும் இதுகளைக் கைவிட்டுப் போடுவினம். ஊடகங்கள் கையை விட்டதும் தன்மானத் தமிழர்களும் அதை மறந்து போடுவினம்.

உதுல பிரச்சினை என்னண்டு தெரியுமோ. சிலை நிறுவுறதாயிருந்தாலும், சில வேலைகளைச் செய்யிறதாக இருந்தாலும் அதை எப்படி அணுக வேணும் எண்டதிலதானுங்கோ இராஜந்திரம் தெரிஞ்சிருக்க வேணுமுங்கோ.

இராஜதந்திரம் தெரிந்திருந்தாலும் குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிப்பதற்கு மனதளவில் விருப்பமும் வேணுமுங்கோ. பிரபாகரனுக்குச் சிலை எழுப்புறதில கூட்டமைப்புக்கு விருப்பமோ எண்டு கேட்டால் அதுவும் இல்லையுங்கோ. ஏன் தெரியுமோ?

சம்பந்தரின்ர தலைவர் அமிர்தலிங்கத்தை கொலை செய்தது பிரபாகரன், சுரேசின்ர தலைவர் பத்மநாபாவைக் கொலை செய்தது பிரபாகரன். செல்வத்தின்ர ஸ்ரீ சபாரட்ணத்தைக் கொலை செய்தது பிரபாகரன். சித்தார்த்தனின் தலைவர் உமா மகேஸ்வரனைக் கொலை செய்தது பிரபாகரன்.

அவ்வளவு ஏன்? தனது தீர்ப்புக்களில குற்றவாளிகளின் தலைவனாக தற்போதைய வடக்கு முதலமைச்சர் தீர்ப்புச் சொன்னதும் பிரபாகரனுக்கு எதிராகத்தான்.

கஜேந்திரகுமாரின்ர தகப்பன் குமார் பொன்னம்பலத்தைக் கொலை செய்தது பிரபாகரன் எண்டால், இவைக்கு உளப்பூர்வமாக பிரபாகரனைத் தலைவராக ஏற்றுக்கொண்டு சிலை நிறுவுவினமோ?

ஆனால் தமிழ் மக்களின் வாக்குகளுக்காக இதையெல்லாம் மறுத்து ஒரு தலைசிறந்த தேசிய நாடகத்தை ஆட இந்த விண்ணன்கள் தயங்க மாட்டினமுங்கோவ். பெரும்பான்மையாக தமிழ்ச்சனம் வாழும் வெள்ளவத்தையிலுள்ள 57ஆவது வீதிய தமிழ்ச்சங்க வீதியாகப் பெயர் மாற்றம் செய்வதற்கு மனோகணேசன் எத்தனைக் குத்துக்கரங்களை அடிச்சுப்பார்த்தார். அவரால முடியேல்ல.

ஆனால், பெரும்பான்மையாகச் சிங்களச் சனம் வாழுகின்ற மாத்தளையில அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சேர் பொன் இராமநாதன் வீதியைப் பெயரிட்டு திறந்து வைத்துள்ளார். அது எப்படி சாத்தியமாகும்?

அதுகும் அணுகுமுறை சார்ந்த விஷயம்தானுங்கோ. சரியான அணுகுமுறை இருந்தால் சாதிக்கலாம் எண்டதுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அந்த வீதித் திறப்பும் யாழ்ப்பாணத்தில எல்லாளன் உட்பட்ட தமிழ் மன்னர்களுக்கு சிலை நிறுவி திறந்துவைத்ததும் உதாரணமுங்கோவ்.

செய்யிற திறனும், செய்யிற விருப்பமும் சரியான அணுகுமுறையும் நல்ல தலைமைக்கு அவசியமுங்கோ.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

# வரலாறு படைத்த வல்லுநர்கள்

# முதன் முதலில் பறந்தவர்கள்



சைக்கிள் கடையை நடத்திக்கொண்டே இப்படிப் பட்டங்களைப் பறக்கவிட்டு ஆராய்ச்சியும் செய்து வந்தார்கள்.

ஒரு நாள்... வில்பர், "ஆர்வில்! நீ ஓட்டோ லிலியந்தாலைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா? என்று கேட்டான்.

"அது யார்? என்றான் ஆர்வில்லி."

ஓஹியோவிலுள்ள டேய்ட்டன் நகர லைபரரியிலிருந்து, தான் எடுத்து வந்து படித்துக் கொண்டிருந்த சயன்ஸ் ஜெர்னலை ஆர்வில்லியிடம் நீட்டினான் வில்பர். அதில் வெளியாகி இருந்த ஒரு கட்டுரை, இவ்வுலகின் போக்கையே மாற்றி அமைப்பதற்கான காரியத்தில் சகோதரர்கள் ஈடுபடுத்துவதற்குக் காரணமாக அமைந்தது. லிலியந்தால் என்ற ஜெர்மானியர், தான் தயாரித்த ஓர் கருவி மூலம் (கிளைடர்) யந்திரம் ஏதுமின்றி, காற்றின் சக்தியினால் வானத்திலே பறந்த கதையை விவரித்திருந்தார்கள் அக்கட்டுரையில்.

"பலர் நடக்கக் கூடாத கனவுகளைக் காண்பார்கள். ஆனால் இந்த லிலியந்தால் வெட்டிக் கனவு காண்பவரல்ல. நிஜமாகவே ஆகாயத்தில் மிதந்திருக்கிறாரே!" என்று வியந்தார்கள் ரைட் சகோதரர்கள். அன்று இரவுமுழுவதும் ஆர்வில்லி தூங்கவில்லை. அண்ணா வில்பரையும் தூங்கவிடவில்லை. இருவரும் லிலியந்தாலை, அவரது சாதனையைப் பற்றியே வியந்து வியந்து பேசினார்கள். அக்கட்டுரை அவர்கள் ஆர்வத்தை வளர்க்கலாயிற்று. ஆகாயத்தில் மிதந்து வழுக்கிச் செல்லுவது பற்றி மேலும் தெரிந்துகொள்ளுவதில் ஆசை உண்டாயிற்று.

ஆகவே ஸ்மித் ஸோனியன் இன்ஸ்டியூட் தலைவருக்கு தங்கள் விருப்பத்தை தெரிவித்துக் கடிதம் எழுதினார்கள். அந்த விஞ்ஞானக் கழகத்தின் டைரக்டரான சாமுவேல் லாங்லே, அவர்களுடைய கடிதத்தைப் பார்த்தார். அவர்களுடைய ஆர்வத்தை அறிந்த அவர் ஆகாயத்தில் பறக்க, மிதக்க இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் வெற்றி, தோல்விகளையும் முன்னேற்றம் பற்றிய தகவல்களையும் அனுப்பிவைத்தார். ரைட் சகோதரர்கள் ஆர்வமுடன் அவற்றைப் படித்தார்கள். வியந்தார்கள்.

மனிதன் தரையிலிருந்து முதலில் ஆகாயத்தில் கிளம்பியது பலூனில்தான் என்றாலும் ஆகாயத்தில் பறப்பதற்கு வழிகாட்டியாக இருந்தவை கிளைடர்கள் எனப்படும் மிதக்கும் சாதனங்கள்தான்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(21.08.2014 தொடக்கம் 27.08.2014 வரை)

## மேடம்

அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லதாகும். ஒரு சிலருக்கு உற்றார் மற்றும் உறவினர்களால் எதிர்பாராத ஆதாயங்களை அடைவீர்கள். படித்த வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்களின் மூலமாக நல்ல இலாபம் பெறுவார்கள். புதிய ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்குவதைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. ரேஸ் லோட்டரி போன்ற சூதாட்ட விச்யங்களில் பணம் வந்து சேரும் என எண்ணி ஏமாற்றம் அடைய வேண்டாம். காதல் விசயங்களில் எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்துசேரும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

## இடபம்

நண்பர்களால் வீண் பிரச்சினைகள் வர இருப்பதால் கவனமுடன் பேசிப்பழகுதல் நல்லதாகும். தாயின் உடல்நிலையில் இருந்துவந்துள்ள பாதிப்புகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். பொருளாதாரத்தில் சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். தாயின் உடல்நிலையில் வெகுநாட்களாக இருந்து வந்துள்ள உடல்நிலை பாதிப்புகள் குறைந்து காணப்படும். கணவன், மனைவிக்குள் காரண மற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் தொடர்புகள் ஏற்படக்கூடிய காலமாகும். சகோதர சகோதரர்களின் சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

## மிதுனம்

பொருளாதாரத்தில் இருந்துவந்துள்ள நெருக்கடிகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். வீடு, வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமாகப் பொருட்செலவுகள் உண்டாகலாம். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். தீராத நாட்பட்ட நோய்கள் தீர்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் வீண் பிரச்சினைகள் உருவாகி பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களை நாடுவது நல்லது. காரணமற்ற மனச்சஞ்சலங்கள் வர இருப்பதால் புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பது உகந்ததாகும்.

## கடகம்

சகோதர சகோதரிகளின் தடைப்பட்ட திருமண காரியங்கள் மற்றவர்களின் உதவியால் நிறைவேறும் காலமாகும். புதிய கடன் வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும். புதிய வீடுகள் மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவால் மனம்கிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். ஒரு சிலருக்கு பணிசெய்யும் இடங்கள் மற்றும் வீடுகளை இடமாற்றம் செய்வீர்கள். பொதுநலத் தொண்டுகளில் மிகவும் பிரியமுடன் ஈடுபட்டு நற்பெயர் புகழடைய வாய்ப்பு உள்ளது.

## சிங்கம்

குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடவும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று திரும்பி வரக்கூடிய காலமாகும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல செய்திகள் கிடைக்கும். நீண்டகாலமாக பிள்ளை இல்லாதவர்களுக்கு இறையருளால் புத்திர பாக்கியம் உண்டாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமாகப் பேசிப் பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். உத்தியோகம் இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு கிடைக்கும். ஒரு சிலருக்கு வீடு மற்றும் பணி இடமாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும்.

## கன்னி

ரேஸ் லோட்டரி போன்றவற்றின் மூலமாக திடீர் தனவரவுகள் உண்டாகும். முன்கோபம் தவிர்த்தல் நல்லது. உடம்பில் கண், காது, தலை போன்ற பாகங்களில் சிற்சில உபாதைகள் வருவதன்மூலம் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். குடும்பச் சொத்துக்களில் வெகுகாலமாக இருந்துவந்துள்ள பிரச்சினைகள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் திரும்ப கிடைக்கும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்கான முயற்சிகளில் சற்று பின்னடைவுகள் உண்டாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## துலாம்

விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான நற்பலனையே செய்யும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன்கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். ஆடம்பரச் செலவுகளைச் செய்ய எண்ணி புதிய கடன்கள் வாங்குவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய கூட்டுத்தொழில் செய்வதற்கான முயற்சிகளில் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். தந்தை – மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள பிரச்சினைகள் குறைந்த ஒற்றுமை உண்டாகும். புதிய ஆடைகள் மற்றும் அணிகலன்களை வாங்குவதற்கு வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய நண்பர்களின் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. பழுதுபட்ட பழைய வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்காக பொருட்செலவுகள் வந்துசேரும்.

## விருச்சிகம்

பழைய வாகனங்களை விற்றுப் புதிய வாகனம் வாங்குவதற்கான முயற்சிகளில் சற்று பின்னடைவுகள் ஏற்பட்டு விலகும். காதல் சம்பந்தமான விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லோட்டரி மற்றும் சேர் மார்க்கெட் தொழிலில் ஈடுபடுவோர்களுக்கு நல்ல பலன்கள் கிடைக்கும். நீண்டநாட்களாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் பொருட்கள் திரும்பக் கை வந்துசேரும். மாணவர்கள் கல்வியில் பரிசு மற்றும் பாராட்டுக்களைப் பெறுவதோடு அரசு உதவித்தொகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. கமிசன் தொழில் செய்வோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லதாகும். பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும். பிரிந்துபோன கணவன் – மனைவி இருவரும் ஒன்றுசேருவார்கள்.

## தனுசு

புதிய வீடு, நிலம் மற்றும் வாகனங்களை வாங்குவதற்காகப் புதிய கடன் வாங்குவீர்கள். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். விட்டுப்போன பழைய உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து நல்ல சூழ்நிலை உருவாகும். நண்பர்களின் வீட்டு சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொண்டு மன மகிழ்ச்சி அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் உறவினர்களின் மூலமான நல்ல செய்திகள் வந்துசேரும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்கும். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக வேண்டி வரும் என்பதால் புதிய தொடர்புகளை தவிர்த்தல் நல்லது. பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும்.

## மகரம்

குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதன்மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவுகளால் எதிர்பாராத பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம். விவசாயம் செய்பவர்களுக்கு சுமாரான பலன்கள் கிடைக்கும் காலமாகும். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்து கடன் உதவித்தொகைகள் நண்பர்களின் உதவியால் கிடைக்கும். தொழிற்சாலை மற்றும் வீடுகளை மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். விபரீதமான எண்ணங்களை கைவிட்டுக் காரியத்தில் கவனமாய் இருப்பது நல்லது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## கும்பம்

காதல் சம்பந்தமான விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. திருமண சம்பந்தமான முயற்சிகளை இன்னும் சற்றுக்கால தாமதமாகவே நடத்துவது சிறந்ததாகும். மாணவர்களுக்கு புதிய படிப்புகள் சம்பந்தமாக நல்ல தகவல்கள் கிடைக்கும். உடல்நிலையில் காய்ச்சல் மற்றும் உஷ்ண சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். கண் காதுகளில் கவனம் தேவை. தடைப்பட்டுப்போன சகோதர சகோதரிகளின் சுபகாரிய சம்பந்தமாக நல்ல தகவல்கள் வந்துசேரும். வராத பணம் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. புதிய வீடு மற்றும் நிலபுலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். புதிய வாகனங்கள் வாங்குவதற்கான முயற்சிகளை சற்று தள்ளிப்போடுதல் நல்லது.

## மீனம்

நீண்டகாலமாக திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமண காரியங்கள் நிறைவேறும். விடுபட்டுப்போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது. தேவையற்ற மனச்சஞ்சலங்களைத் தவிர்க்கவும். தாயின் உடல்நிலையில் சில பாதிப்புகள் வரக்கூடுமாகையால் கவனமுடன் இருக்கவும். குலதெய்வ வழிபாடுகளை செய்துவருவது நல்லது. உற்றார் மற்றும் உறவினர்களால் எந்தவிதமான ஆதாயமும் இல்லை. கோர்ட் சம்பந்தமான வழக்கு விசயங்களில் எதிர்பார்த்த சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். கவனமுடன் இருக்கவேண்டிய காலமாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

# தேசிய சேமிப்பு வங்கி மூலம்

## மனதில் உருவான கனவு இல்லத்தை நனவாக்கிக்கொள்ள




# வீட்டுக் கடன்!

- உங்களுக்கென ஒரு வீட்டை அமைத்துக்கொள்ள அல்லது கொள்வனவு செய்ய
- வீடு ஒன்றை அமைத்துக்கொள்வதற்கான காணியை வாங்க
- வீடமைப்பு நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய, புனர்நிர்மாணம் அல்லது பகுதியை இணைத்துக்கொள்ள
- வீட்டை நவீனமயப்படுத்தல் மற்றும் வீட்டுத் தோட்டங்களை அழகுபடுத்தல்
- வீடமைப்பு சம்பந்தமாக ஏனைய நிதி நிறுவனங்களிலிருந்து பெற்ற கடனை மீளச் செலுத்துதல் உட்பட உங்களது அனைத்து வீட்டுத் தேவைகளுக்கும்

மிகக்குறைந்த வட்டியுடன் வீட்டுக்கடன்

- மறைமுகக் கட்டணங்கள் எதுவுமில்லை
- உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய ஆவணங்கள் உட்பட தேவையான காகிதாதிகளுக்கான துரித சேவை
- காணிகளுக்கு பிணையாக தனிநபர் கடன் வசதி

வருமானம் தொடர்பான விபரங்களுடன்

**அருகிலுள்ள NSB கிளைக்கு இன்றே விரையுங்கள்!**

கடமை புரியும் 24 மணித்தியாலங்களில் Express வீட்டுக்கடனை உங்களுக்குப் பெற்றுத்தருதல்.

தலைமை அலுவலக கடன் பிரிவு மற்றும் கண்டி, ஜா-எல, மொறட்டுவ, கிருலப்பனை, யக்கல, பதுளை, இரத்தினபுரி, மாத்தறை. குருநாகல் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய கிளைகளில்

நிபந்தனைகள் அடங்கும்

NSB

துரித அழைப்பு 0112379379

Fitch Rating:AAA (lka)



இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டர்பிரைஸஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஓகஸ்ட் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு


THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 05 வியாழக்கிழமை (21.08.2014) பக்கங்கள் IV ஓசை - 324

### மின் உற்பத்தி நிலையக் கழிவுகளால்

## சுன்னாகம் கிணறுகளில் ஒயில் அறிக்கை சமர்ப்பிக்க குழு அமைப்பு



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து வெளியேறும் கழிவு ஒயில் மற்றும் கிறிஸ் என்பன அப்பகுதியிலுள்ள நிலத்தடி நீரில் கலந்துள்ளதாக தெரிவிக்கப்படுவது குறித்து விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து உடன் அறிக்கை சமர்ப்பிக்கும் வகையில் உடுவில் பிரதேச செயலர் நந்தகோபாலன் தலைமையில் 9 பேர் கொண்ட ஆய்வுக்குழுவொன்றை அமைத்துள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து அப்புறப் படுத்தப்படுகின்ற கழிவு ஒயில் மற்றும் கிறிஸ் என்பன அப்பகுதி நிலத்தடி நீரில் கலந்துள்ளதாக முறைப்பாடுகள் எழுந்துள்ள நிலையில் ஏற்கனவே இவ்விட

IV ஆம் பக்கம் பார்க்க

## விசா அனுமதி மறுக்கப்பட்டாலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்

### நவிப்பிள்ளை தெரிவிப்பு

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கான விசா அனுமதியை அந்நாடு வழங்க மறுத்தாலும், விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசா மறுப்பு அறிவிப்பு குறித்து பி.பி.சி.யிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ள அவர் ஸ்கைப், செய்மதிபுகைப் படங்கள், இணையத் தொலைபேசிகள் போன்ற நவீன வசதிகளைப் பயன்படுத்தி தனது குழுவால் விசாரணைகளை முன்னெடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

சிரியாவிற்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட போதும் தனது குழுவினர் நம்பகத்தன்மை வாய்ந்த அறிக்கை

IV ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பு குழு இன்று புதுடில்லிக்கு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையிலான குழு இன்றைய தினம் புதுடில்லி செல்லவுள்ளது.

இந்தக் குழு எதிர்வரும் 23 ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசவுள்ளது. கூட்டமைப்பின் குழு இன்று மதியம் புதுடில்லி பயணமாகும் என்றும், சம்பந்தன் தலைமையிலான இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன், பொன்.செல்வராசா ஆகியோர் அடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

22,23 ஆம் திகதிகளில் புதுடில்லியில் தங்கியிருக்கும் இவர்கள் இந்திய பா.ஜ.க. அரசின் முக்கிய தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

IV ஆம் பக்கம் பார்க்க

# இலங்கை மீதான அழுத்தத்திற்கு அதன் அமைவிடமே காரணம்

### சவால்களை முறியடிக்க உதவியளிக்கும் சீனா

(கொழும்பு)

பூகோள ரீதியில் இந்து சமுத்திரத்திலும், பசுபிக் வலயத்திலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் இலங்கை அமைந்திருப்பதனாலேயே இலங்கை மீதான அழுத்தங்களும் சவால்களும் அதிகரித்து வருவதாகவும், ஆனால் சவால்களை வெற்றிகொள்வதற்கு, சீனா எப்போதும் இலங்கைக்கு ஆதரவளிக்குமென்றும் இலங்கை பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய சீனப் பிரதிநிதி தெரிவித்தார்.

முன்னேறி வரும் நாட்டுக்கான சவால்கள் எனும் தொனிப் பொருளில், கொழும்பில் நடைபெற்ற சர்வதேச பாதுகாப்பு மாநாட்டின் இறுதி தினம் நேற்றாகும். சுமார் 55 நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு பிரதிநிதிகள் பங்கேற்கும் இம்மாநாட்டை, பாதுகாப்பு அமைச்சு 4 ஆவது தடவையாக ஏற்பாடு செய்திருந்தது.

நேற்று முற்பகல் இம்மாநாட்டில் உரையாற்றிய சீனாவின் தந்திரோபாய மற்றும் சர்வதேச தொடர்புகள் நிறுவனத்தின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி திருமதி. வேங்வே உவா, இலங்கை

IV ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நா. மனித உரிமை விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் இலங்கை

### வலியுறுத்துகிறார் பான் கீ மூன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு உதவுமாறு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் இலங்கையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பான் கீ மூனின் பேச்சாளர் ஸ்டிபெனே துஜாரிக் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை ஆணையகத்தினால் உருவாக்கப்பட்ட மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்துடன் ஒத்துழைக்குமாறு செயலாளர் நாயகம் இலங்கையை கேட்டுக்கொள்கிறார்.

இலங்கை அரசாங்கமும் அதன் மக்களும் ஐக்கிய நாடுகளின் முழுமையான கட்டமைப்புடன் ஆக்கபூர்வமாக இணைந்து செயற்பட வேண்டுமென அவர் கேட்டுக்கொள்கிறார். இது நாட

IV ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் இலங்கை முஸ்லிம் குழுக்கள் தொடர்பு

### கோத்தாபய குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கையிலுள்ள முஸ்லிம் குழுக்கள் சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் தொடர்பைப் பேணி வருகின்றமை குறித்து உன்னிப்பாக கண்காணித்து வருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சிக்கல்களுக்கான நடவடிக்கை மையத்துக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது, இனக் குழுக்களிடையே மதவாதம் தலைதூக்குவதே யுத்தத்திற்கு பிந்திய இலங்கையின் கரிசனைக்குரிய விடயமாக உள்ளது. அதற்குத் தீர்வு காணாவிட்டால் எதிர்காலத்தில் இன ரீதியான பதற்ற நிலை தலைதூக்கலாம்.

யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளால் முஸ்லிம்களும் பாதிகப்பட்டனர். இதன் பின்னர் முஸ்லிம்கள் தங்களது பாதுகாப்பை

IV ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை - சீன வலுவான உறவு; கவலை இல்லை இந்தியாவிற்கு

### என்கிறார் சுப்பிரமணிய சுவாமி

(கொழும்பு)

இலங்கையும் சீனாவும் தமக்கிடையே வலுவான உறவைப் பேணி வருகின்றமை தொடர்பில் பா.ஜ.க. தலைமையிலான இந்திய அரசுக்கு எந்தக் கவலையும் இல்லையெனத் தெரிவித்திருக்கிறார் பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி.

கொழும்பில் நடைபெறும் பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்துகொண்டு சீனப் பிரதிநிதிகள் குழு எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு ஒரு நாடு குறித்து மாத்திரமே கவலையுள்ளது. அந்த நாட்டை சேர்ந்த தீவிரவாதிகள் தமிழ்நாடு ஊடாக இந்தியாவுக்குள் ஊடுருவ இலங்கையைத் தளமாக பயன்படுத்துகின்றனர்.

இந்தியா இதுகுறித்து இலங்கைக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இலங்கை, சீனாவுடன் கொண்டுள்ள வலுவான உறவுகள் குறித்தோ பொருளாதார வர்த்தக துறைகளில் அந்த நாடு இலங்கையுடன் இணைந்து செயற்படுவது பற்றியோ இந்தியாவுக்கு எந்தக் கவலையுமில்லை. அவர்களுடன் உறவு வைத்திருக்காதீர்கள் என்று சொல்ல எங்களுக்கு அதிகாரமோ, உரிமையோ இல்லை. சொன்னாலும் அவர்கள் கேட்கமாட்டார்கள். சீன ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தை இந்தியாவும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது என்றார்.

## நான்கு ஆலயங்களில் ஒரே இரவில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவில் அருகருகே இருந்த நான்கு ஆலயங்கள் உடைக்கப்பட்டு அங்கிருந்த தங்கம் மற்றும் வெள்ளியிலான பொருட்கள் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இத்திருட்டுச் சம்பவம் சுதுமலை வடக்குப் பகுதியில் அமைந்துள்ள சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

சிவனாலயத்தின் முன்புறத்திலிருந்த இரு கதவுகளையும் உடைத்து மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான நகைகளை எடுத்துள்ளதுடன், சுற்றுமதிலால் ஏறி முருகன் ஆலய வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த கிரீடத்தையும் திருடிச் சென்று அதில் பொருத்தப்பட்டிருந்த தங்கக் குடைகளை எடுத்துக் கொண்டு கிரீடத்தை சிவாலயத்தில் வைத்துள்ளனர்.

பின்னர் அருகாமையிலுள்ள அம்பாள் ஆலயத்தின் கூரை வழியாக உள்ளே சென்று அங்கு

IV ஆம் பக்கம் பார்க்க

# புகைத்தல் பொருட்களின் விற்பனையை தவிர்த்து வரும் உணவகங்கள்

தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள உணவகங்கள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்வதைத் தவிர்த்து வருவதை காணக்கூடியதாகவுள்ளதென தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி எஸ்.நந்தகுமார் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதி காரி பிரிவிலுள்ள வர்த்தக நிலையங்கள், உணவகங்களின் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், சுகாதார, வைத்திய அதிகாரி பணிமனை, சைவ மகா சபை, சுகாதார அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டவர்கள் இணைந்து புகைத்தலுக்கெதிரான பேரணியையும் நடத்தியிருந்தனர்.

இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக தற்போது தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பல வர்த்தக நிலையங்கள் புகைத்தல் பொருடகளை விற்பனை செய்வதை தவிர்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஏனைய வர்த்தகர்களும் புகைத்தல் பொருட்கள் விற்பனை செய்வதை தவிர்க்க முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (48)

## கோரிக்கைகளை சமர்ப்பிக்கலாம்

யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்ற கல்வித்துறை தொடர்பான தேவைகள், பிரச்சினைகள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியோருடைய கோரிக்கைகளினை எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்பாக இணைப்பாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அலுவலகம், யாழ். மாவட்டச் செயலகம் (அறை இல 43) என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

**இல.06 கனகசபை லேன்,**
**சிவலிங்கப்புளியடி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**
021 222 8680,
077 592 5088.

(C/3733)


## யாழ். புகையிரத நிலையத்திற்கு முன்பாக தனியார் பேருந்து தரிப்பிட நிலையம்

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ். புகையிரத நிலையத்திற்கு முன்னாள் தனியார் பேருந்து தரிப்பிட நிலையம் அமைக்க யாழ். மாநகர சபையினால் இடம் வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற மாநகர சபையின் விசேட கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய புகையிரத நிலையத்திற்கு முன்னாலுள்ள 9 ஏக்கர் நிலப்பரப்பை இவ்வாறு தனியார் பேருந்து நிலையம் அமைக்க வழங்குவது என ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேறியது.

இதேவேளை கஸ்தூரியார் வீதியிலுள்ள கடைகள் வீதியிலிருந்து 33 அடி தூரத்தில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத கடைகள் அப்புறப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**

உத்தியோகபூர்வ முடிவு

| | |
|---|---|
| வெற்றி வாரம் - | 283 |
| திகதி - | 2014.08.19 |
| வர்ணம் - | மஞ்சள் |

வெற்றி இலக்கங்கள் — ஆங்கில எழுத்து

**17 40 43 63 A**

பரிசுத் தொகை ரூபா. **11,423,100/-** வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 15 | 750,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 205 | 205,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 392 | 392,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9477 | 568,620/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4887 | 195,480/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 124392 | 2,487,840/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18141 | 362,820/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 11,423,100/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,961,760/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 11,666,320/-

2014.08.22ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

web : www.dlb.lk

(C/3761)


### வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வயவையூர் கை.சீதாராமனின் 'யாருமற்ற தீவினிலே' கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று பி.ப. 2.00 மணிக்கு திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் அரியாலையூர் வி.எம்.கே. குமணா தலைமையில் நடைபெறவுள்ளது. (08)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் கஜவல்லி உற்சவமான இன்று ஆலயத்தொண்டும் வழிபாடும் என்னும் விடயம் பற்றி மு.நித்தியானந்தன் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து கோண்டாவில் கைலாசநாத வேத சிவாகம, பெரியபுலம் வடகேசரிப்பிள்ளையார் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.


தொடர்ந்து விசேட நிகழ்வாக திருமதி புஸ்பமலர் யோகராஜன் மாணவர்களின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

★★★ ★★★ ★★★ ★★★

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் கஜவல்லி மகாவல்லி உற்சவமான இன்று திருமதி குணபூஷணம் நாகராசா வழங்கும் பாட்டு இசையரங்கம் பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. (42)

## நல்லைக் கந்தனுக்கு இன்று கஜவல்லி மகாவல்லி உற்சவம்



### எல்லாமே அவனருளால்!

தஞ்சமென அடைந்தோரைத் தங்கவேலன் காக்கட்டும்
வஞ்சகமே இலாப்பக்தி வையமதில் நிலைக்கட்டும்
செஞ்சொல்லால் செந்தில்வேல் திருநாமம் முழங்கட்டும்
குஞ்சரமும் கொடிபடையும் புடைசூழ்ந்து நிற்கட்டும்
மஞ்சமதில் மணவறையில் அலங்காரன் உலாவரட்டும்
பஞ்சமும் பசியுமவன் பரிவுகண்டு பறக்கட்டும்
துஞ்சுவாரும் கெஞ்சுவாரும் இல்லாமல் போகட்டும்
எஞ்சுவன எல்லாமே அவனருளால் சிறக்கட்டும்!

ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம்-மூளாய்

### ஆறுபடைவீடு கொண்ட முருகா!

யாழ் நல்லூரில் குடிகொண்ட வேலனே!
வினை தீர்த்து அருள்புரியும் குமரேசனே!
கும்பிடுவார் துயர்களையும் வேலவனே!
தோகை மயில் மீதினிலே காட்சிதா!
காவடிகள் உனை நாடி வரும் கந்தா!
கண்கலங்கி நிற்போரை காத்திடும் வரதா!
சேவலும் மயிலுமாய் ஆனாய் நீயே!
ஆறுபடை வீடு கொண்ட [illegible]!

[illegible]

### நல்லூரில் ஆட்சி புரிபவனே

ஆறுமுகன் நல்லூரில் ஆட்சி புரிவதனால்
ஊறுவரா தென்றுவகை யோடிருக்க-வீறுகொண்டு
வந்த படையால் மருண்டோடச் செய்தவனே
சொந்தவிடம் மீளவழி சொல்.

அன்புடனே நல்லூரா ஆறுமுகா உன்நாமம்
என்றுமே ஓதாத நாளில்லைக் கன்றாவைத்
தேடுவது போலுன்னைத் தேடுகிறே னோடிவந்து
கூறுகின்ற வாறெனக்குக் கூறு.

-நல்லூர் கந்தன் பாமாலை-

### மயில் மீது ஏறிவா!

மயில்மீது வீதியுலா மங்கையருடன் நீ வருகையிலே
குயில்கூவும் கொலுசொலிக்கும் கூறுமடியார் பாவொலிக்கும்
வாயில் கத வெங்கும் வண்ண ஒலி ஒலிக்கும்
கோயில் வீதியெங்கும் குமரனவன் அழகொலிக்குமே!

கவிஞர் சரசாலையூரான்-

### நற்காட்சி தருவாயே!

கந்தன் என்று சொன்னால் கரைந்திடுமே நெஞ்சமே
பந்த வினை அகற்றும் பாலசுப்ரமணியனே குகனே
எந்தனிடர் தீர்க்கும் ஏரம்பனின் சோதரனே முருகனே
சிந்தை மகிழ நீ நல்லூரில் நற்காட்சி தருவாய் ஐயா!

சைவத்தமிழ்ச்சுடர் -இராசையா ஸ்ரீதரன்

# உள்ளூராட்சி உறுப்பினர்களின் தேவைகளை வடமாகாண சபை பூர்த்தி செய்யவில்லை

## யாழ்.மாநகரசபை முதல்வர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் தேவைகளை இதுவரை பூர்த்தி செய்யவில்லை என யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

நேற்று யாழ்.மாநகரசபையின் விசேட பொதுக்கூட்டம் இடம்பெற்றது. இதன்போதே முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் தொலைபேசிக் கட்டணம் வழங்கப்படாமை தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.



முதல்வர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் தேவைகளான எரிபொருள் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் தொடர்பில் உரிய தீர்மானங்கள் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பினோம், ஒன்றுக்கு இரு முறை அனுப்பினோம். ஆனால் உள்ளூராட்சி அமைச்சர் இது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த மாகாண சபை என்ன எங்களுக்குச் செய்திருக்கிறது? அதிகாரம் மட்டும் இருக்கின்றது எனத் தெரிவிப்போர் அமைச்சினூடாக உள்ளூராட்சி மன்றங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால் அது இன்றுவரை செய்யப்படவில்லை.

இனி இது விடயத்தில் நாமாகவே முடிவுகளை எடுத்து கட்டணங்களை வழங்குவது தொடர்பில் ஆராய வேண்டும் என்றார். (இ)

# மாவடிப் பிள்ளையார் ஆலய புதிய நிர்வாக சபை தெரிவு



(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று மாவடிப்பிள்ளையார் ஆலயத்தின் புதிய நிர்வாகம் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

செம்பியன்பற்று மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் புதிய தலைவராக வல்லிபுரம் கந்தசாமி (ஓய்வு பெற்ற வைத்திய சாலை ஊழியர்) மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உபதலைவராக ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (பிரதேசசபை உறுப்பினர்), செயலாளராக கணபதிப்பிள்ளை ஸ்ரீரஞ்சன் (ப.நோ.கூ.ச முகாமையாளர்), உப-செயலாளராக கந்தசாமி சிவாகரன் (வர்த்தகர்), பொருளாளராக ஐயாத்துரை ஸ்ரீரங்கராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி சிவஞானசுந்தரம் சரஸ்வதி, பொன்.தங்கராசா (ஜே.பி), வை.கந்தசாமி, இ. சக்திதாஸன் உட்பட 9 பேர் கொண்ட நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது (116)

# நல்லூரானுக்கு காவடிகள் இரு வீதி வழியாகவே செல்லும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழா தினமான எதிர்வரும் 24 ஆம் திகதி காவடிகள் இரு வீதி வழியாக உள்நுழைவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா நேற்றுத் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையில் பத்திரிகையாளர்களை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தேர்த்திருவிழா இடம்பெற இருப்பதனால், அன்றைய தினம் காவடி எடுக்கும் அடியார்கள் இரு வழிகளை பயன்படுத்தி தமது நேர்த்திக் கடன்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்தவகையில், சங்கிலியன் வீதி மற்றும் அரசடி வீதிகளை பயன்படுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை, விஷேட திருவிழாக்கள் எதிர்வரும் காலங்களில் நடைபெறவிருப்பதனால், சன நெரிசல் அதிகமாகக் காணப்படும். அந்தவகையில், அடியவர்கள் தங்க நகைகளை அணிவதை தவிர்த்துக் கொண்டு பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன் என்றார். (25)

# துணுக்காய் பிரதேச செயலகத்தில் சுற்றுலா நீதிமன்றம், மத்தியஸ்த சபை

முல்லைத்தீவு மக்களின் நலன கருதி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலக கட்டடத்தில் சுற்றுலா நீதிமன்றமும் மத்தியஸ்த சபையும் அமையவுள்ளன.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவின் மத்தியஸ்த சபையை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா செப்ரெம்பர் 3 ஆம் திகதி ஆரம்பித்து வைப்பார். அன்றைய தினம் பிரதேச செயலக கட்டடத்திலேயே சுற்றுலா நீதிமன்றம் இயங்கும் என்பதுடன், துணுக்காய், மாங்குளம், மல்லாவிப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களின் வழக்கு விசாரணை துணுக்காய் பிரதேச செயலக கட்டடத்தில் நடைபெறும் எனவும் முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மேலும் மத்தியஸ்த சபையை ஆரம்பித்து வைப்பதன் மூலம் மிக நீண்டதூரம் பயணம் செய்து வழக்குகளுக்கு முல்லைத்தீவு நீதிமன்றத்தை நாடும் பொது மக்கள் தமது பிணக்குகளையும் காசு, காணி சம்பந்தமான பிரச்சினைகளை மத்தியஸ்த சபை மூலம் தீர்த்துக் கொள்ள வழி செய்யப்பட்டுள்ளது.

மேலும் சுற்றுலா நீதிமன்றம் இயங்கவுள்ளமையும் மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைவதுடன் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் துணுக்காய் பிரதேச செயலக கட்டடத்திற்கு வழக்குகளுக்காக வருகை தரவேண்டுமென முல்லைத்தீவு நீதிமன்றம் அறிவித்துள்ளது (170)

# நிதியமைச்சின் அதிகாரிகள் முல்லை நீதிமன்றுக்கு விஜயம்



(முல்லைத்தீவு)

நிதியமைச்சின் அதிகாரிகள், பொறியியலாளர்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிமன்றுக்கு விஜயம் செய்து நீதிமன்ற கட்டட வசதிகளைப் பார்வையிட்டனர். புதிதாக சகல வசதிகளுடனும் கூடிய நீதிமன்ற கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக அரச அதிபரினால் நீதிமன்ற தேவைக்கு ஒதுக்கப்பட்ட காணியையும் பார்வையிட்டனர்.

நீதிமன்றக் கட்டடம் அமைப்பது தொடர்பில் மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மற்றும் அரச அதிபருடனும் கலந்தாலோசனை நடத்தி மிக விரைவில் கட்டடப்பணிகளை ஆரம்பிக்க உறுதியளித்துள்ளார்.

மேற்படி விடையம் தொடர்பாக மாவட்ட நீதிபதி, சட்டத்தரணிகள் சங்கமும் ஏற்கனவே பிரதமநீதியரசர் மொகான் பீரிஸுக்கு கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (170)

# கைத்தொலைபேசியில் சாரதி உல்லாசமான உரையாடல்

## பயணிகளோ திண்டாட்டம்



பேருந்து சாரதி கைத்தொலைபேசியூடாக உல்லாசமாக உரையாடுவதால் பேருந்தில் பயணிக்கும் பயணிகள் தங்களின் உயிரை கையில் பிடித்தவாறு பயணம் செய்ய வேண்டிய நிலை தற்போது ஏ-9 வீதியில் இடம் பெற்று வருகின்றது.

இதற்கு சான்றாக நேற்று முன்தினம் பயங்கரமான சம்பவத்தினை எதிர்நோக்கிய பயணி விபரிக்கையில், கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு செல்வதற்காக காலை 7.30 மணிக்கு வவுனியாவிலிருந்து புறப்பட்ட தனியார் பேருந்தில் புறப்பட்டோம். நாங்கள் புறப்பட்டதிலிருந்து நாங்கள் பயணம் செய்த சாரதி ஒரு கையால் கையடக்கத் தொலைபேசி ஊடாக உரையாடிய வண்ணம் பேருந்தினை ஒரு கையால் செலுத்தியவாறு சென்றார்.

பயணிகளாகிய நாங்கள் பலமுறை சாரதியிடம் தொலைபேசி உரையாட வேண்டாம் என்று கூறியதையும் கேட்காமல் அதற்குப் பதிலாக எங்களுக்கு ஏசி நாங்கள் இப்படித்தான் ஓடுவோம் விரும்பினால் நீங்கள் இறங்கிப் போங்கள் எனக் கூறினார்.

இவ்வாறான நிலையில் பொலிஸாரை காணும் இடத்தில் தொலைபேசியை வைப்பதும் பின்னர் உரையாடுவதுமாக இருந்தார்.

இந் நிலையில் காலை 7.30 மணிக்கு புறப்பட்ட பேருந்து 11.45 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்தது.

அவசரமான விடயத்திற்கு பயணம் செய்யும் எங்களை பாதுகாப்பாகவும், உரிய நேரத்திலும் விட வேண்டிய பொறுப்பு சாரதிக்கு உண்டு.

அவர்களே இவ்வாறு செயற்படுவது கவலைக்குரிய விடயமாகும் என கவலை யுடன் பயணம் செய்த பயணி குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் 16 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்ட மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் டெனிஸ்வரன் அங்கு உரை நிகழ்த்தும் போது சட்டத்துக்கு முரணான முறையில் செயற்படும் சாரதிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பேருந்து செலுத்துவதற்கும் தடை விதிக்கப்படும் என குறிப்பிட்ட நிலையிலும் இவ்வாறான சம்பவம் தொடர்ந்து இடம்பெறுவது வேதனைக்குரிய விடயமாகும். (70)

# போதனா வைத்தியசாலையில் ஜனவரி முதல் விபத்து சேவைப் பிரிவு

(யாழ்ப்பர்ணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அடுத்த ஆண்டு ஜனவரியில் விபத்துச் சேவைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் பவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையின் விசேட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு விசேட உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் எங்கும் இல்லாத அளவிற்கு விபத்துச் சேவைப்பிரிவு ஒன்று அடுத்த ஆண்டு ஜனவரியில் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகவுள்ளது.

ஐந்து மாடிகளைக் கொண்ட நவீன வசதிகள் கொண்ட இந்த விபத்துச் சேவைப்பிரிவை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# அமெரிக்க - சீன அதிகாரப் போட்டி இலங்கையை பாதிக்க மாட்டாது

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான அதிகாரப் போட்டி இலங்கையை பாதிக்காது என இலங்கை உயர் கடற்படை அதிகாரி ரியர் அட்மிரல் டி.சீ.குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்று வரும் பாதுகாப்பு கருத்தரங்கில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திர பிராந்திய வலயத்தின் ஆதிக்கத்தை பெற்றுக்கொள்ள சீனாவும் அமெரிக்காவும் முனைப்பு காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், அணிசேரா கொள்கைகளை இலங்கை பின்பற்றி வருவதனால் இரு நாடுகளினதும் அதிகாரப் போட்டியினால் இலங்கைக்கு பாதிப்பு கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து தரப்பினரது உதவிகளையும் இலங்கை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

கடுமையான நிபந்தனை பிறப்பிக்காது வழங்கப்படும் உதவிகளை இலங்கை ஏற்றுக்கொள்ளும் என்ற போதிலும் அதனை, அந்த தரப்புடனான கூட்டணியாக கருத முடியாது என அவர் குறிபபிட்டுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியனவே இலங்கை எதிர் நோக்கி வரும் கடற்பாதுகாப்பு சவால்களாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி சேகரிக்கும் நோக்கிலேயே போதைப் பொருள் வர்த்தகம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

புலி உறுப்பினர்கள் நாடுகளில் அடைக்கலம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் இவர்கள் அந்தந்த நாடுகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# புலம்பெயர் தமிழர்களால் இலங்கைக்கு அவப்பெயர்

## ரவிநாத் ஆரியசிங்க விசனம்

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தைப் பயன்படுத்தி புலம்பெயர்ந்த தமிழர்களின் இரண்டாம் தலைமுறையினரில் ஒரு குழுவினர் நாட்டை மோசமான விம்பமாக சித்திரிக்கின்றனர்.

இதன் மூலம் அரசியல் தொழில நன்மைகளைப் பெற முயல்கின்றனர். ஆனால் இவர்கள் ஒருபோதும் இலங்கையில் வாழ்ந்தவர்கள் இல்லை. இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் ஐ.நா.வுக்கான நிரந்தூர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத பி.ஆரியசிங்க. இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவர்கள் சிறியவர்கள், மூளைச சலவை செய்யப்பட்டுள்ளனர். சமரசம் செய்வது கடினமாகும். விடுதலைப் புலிகள் தங்கள் திட்டங்களை செயற்படுத்த அவர்களைப் பயன்படுத்துகின்றனர். தவிர இப்போது ஐரோப்பிய நாடுகளில் வாழும் புலிகளின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் உள்ளிட்ட தீவிர போக்குடைய குழுக்கள் உள்ளன.

இவர்கள் மனித கடத்தல்களில் ஈடுபட்டும் மோசடிச் செயல்களினாலும் பணத்தைப் பெறுகின்றனர் என்றும் அவர் குற்றஞ் சாட்டினார். அத்துடன் ஐரோப்பிய பொலிஸாரும் இந்தக் குழுக்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றனர் என்றார்.

# இந்தியாவுடனான உறவை வலுப்படுத்துவது அவசியம்

## பேராசிரியர் ரொஹான் குணவர்த்தன வலியுறுத்து

மோடி தலைமையிலான இந்திய மத்திய அரசின் ஆட்சியில் இலங்கை இந்திய உறவு பலப்படுத்தப்படுத்துவது நன்மை பயக்கும் என சிங்கப்பூர் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் அரசியல் வன்முறை மற்றும் சர்வதேச ஆய்வு மையத்தின் தலைவரான பேராசிரியர் ரொஹான் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்ற ஊடகவியலாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்திய அரசியல் மாற்றத்தினால் இலங்கைக்கு ஏற்படும் தாக்கங்களும் மாற்றங்களும் என்ற தலைப்பிலான உரையை நாடாளுமன்றத்தில் நிகழ்த்தியபோதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பல வருடகால உறவு காணப்படுகிறது. நன்மை தீமை கலந்ததாகக் காணப்படும் இவ்வுறவில் பொருளாதார ரீதியான சிறந்த உறவைக் கட்டியெழுப்ப இது சிறந்த தருணமாகும். இலங்கைக்கு ஏனைய நாடுகளுடன் சுமார் 21 மோதல்கள் இடம்பெற்றுள்ளன. அதில் 17 இந்தியா தொடர்புபட்ட மோதல்களாகும்.

ஏனையவை பிரிட்டிஷ், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் சீனர்களுடன் ஏற்பட்ட மோதல்களாகும். இலங்கை ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, சீனா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுடன் நெருங்கிய உறவைப் பேணுவதே இந்தியா இலங்கையுடன் முறுகலை ஏற்படுத்த பிரதான காரணமாகும்.

இந்தியாவிற்கு பல நாடுகளுடன் எல்லைப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதற்கு காரணம் இந்தியா எப்போதும் நம்பிக்கையற்ற தன்மையுடன் ஏனைய நாடுகளைப் பார்ப்பதே ஆகும்.

எனினும் தற்போது பதவியேற்றுள்ள புதிய பிரதமர் நரேந்திரமோடி மூன்றாம் கண்ணால் பார்க்கக்கூடியவர். ஏனைய இந்திய தலைவர்கள் சமூகம், அரசியல் இரண்டையும் மட்டுமே நோககாகக் கொண்டு ஏனைய நாடுகளுடன் நட்பு வைத்துள்ளனர். ஆனால் மோடி பொருளாதாரம் என்ற விடயத்தையும் கருத்திற் கொண்டு பார்க்கிறார். எனவே அவர் அனைத்து நாடுகளுடனும் நட்புறவைப் பேணுவார் என்பதில் ஐயமில்லை.

அவர் ஏனைய நாடுகளை ஐயத்துடன் பார்ப்பதில்லை. பொருளாதாரத்தைக் கருத்திற்கொண்டு செயற்படும் நாட்டுடன் நட்பை பேணுவது எமக்கு நன்மை பயக்கும். தீவிரவாதத்தை வென்று அபிவிருத்தியை நோக்கிச் செல்லும் இலங்கை இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

அவ்வாறு இந்தியாவுடனுடன் நட்பை வளர்க்கும் போது இலங்கை அந்நாட்டின் உச்ச சக்தி கொண்ட அரசியல், மாநில அரசியல் மற்றும் பிராந்திய அரசியல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புலிகள் அமைப்புடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பை மீண்டும் அரசியலுக்குள் கொண்டு வந்தது பெரிய தவறாகும். இவர்களிடையே இன்னும் தீவிரவாதம் இருக்கிறது இவை தீவிரவாத கருத்துக்கள் கொண்ட கட்சிகளாகும். இக்கட்சிகளை நாடாளுமன்றத்துக்கு கொண்டு வந்ததே பெரிய தவறாகும்.

புலிகள் பலம் வாய்ந்த தலைவரான ராஜிவ் காந்தியை கொலை செய்தனர். அரசாங்கம் 12ஆயிரம் தீவிரவாதிகளுக்கு கல்வி சமூக பொருளாதார ரீதியில் பயிற்சி வழங்கி, அவர்களுக்கு புனர் வாழ்வு அளித்துள்ளது. உலகிலேயே இது மிகவும் சிறந்ததொரு வேலைத்திட்டம் என்றே கூற வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டணியினர் எப்போதும் தமிழ் மக்களையே பார்க்கின்றனர். முஸ்லிம் கட்சிகள் முஸ்லிம்களை பார்க்கின்றனர். பொதுபலசேனாவும் அவ்வாறே செயல்படுகின்றது. இது ஒரு புற்றுநோயாகும். நாம் அனைவரும் இலங்கையர் என்றே நோக்க வேண்டும். அப்படி செயற்பட்டால் நாட்டில் எவ்வித பிரச்சினையுமில்லை.

நான் தமிழ் ஆசிரியர்களிடமும் முஸ்லிம் ஆசிரியர்களிடமும் கல்வி கற்றுள்ளேன். நான் எல்லா மதங்களையும் மதிக்கிறேன். இலங்கை சீனாவுடன் பொருளாதார நட்புறவுகளை வளர்த்து வருகின்றது. அவ்வாறே இலங்கை இந்தியாவுடனும் தமிழ் நாடுடனும் நெருங்கிய பொருளாதார நட்டபுறவுகளை வளர்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# தரம் குறைந்த முக அழகு கிறீம் விநியோகம் செய்தவருக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

தரம் குறைந்த முக அழகுக் கிறீம் விநியோகம் செய்த முகவர் ஒருவர் பாவனையாளர் அதிகார சபையினால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு தண்டம் அறவிடப்பட்டுள்ளதாக யாழ். செயலக பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரி த. வசந்த சேகரன் தெரிவித்தார்.

யாழ்.நகரில் உள்ள முக அழகு கிறீம் விநியோகிக்கும் முகவர் ஒருவர் தரமற்ற கிறீம் விநியோகிப்பதாக அதிகார சபையினருக்கு கிடைத்த தகவலை அடுத்து அம்முகவர் சான்றுகளுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்நிலையில், அவருக்கு நீதிமன்றம் 8 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் அவரால் விநியோகிக்கப்பட்ட கிறீம்களை 15 நாட்களுக்குள் மீளப்பெற வேண்டும் எனவும், இவ்வாறு இனிமேலும் தரமற்ற அழகுசாதனப் பொருட்கள் விற்பனை செய்தால் அவர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வியாபார நிலையமும் சீல் வைக்கப்படும் எனவும், நீதிமன்றினால் எச்சரிக்கை செய்யப்பட்டார். (இ, 25)

## ஐ.நா.மனித...

டினது தொடர்ச்சியான அபிவி ருத்தி, நிரந்தர சமாதானம் மற்றும் மனித உரிமை பாதுகாப் பிற்குதவும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதனை உறுதி செய்யவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எடுத்து வரும் முனைப்புக்கள் பாராட்டுக்குரியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வதேச...

தாங்களே உறுதிசெய்யத் தொடங்கினர். விடுத்லைப் புலிகளின் தோல்விக்குப் பின்னர் இந்தக் குழுக்கள் தற்பாதுகாப்பு என்ற நிலையிலிருந்து விலகி வேறு பாதையில் செல்ல முயற்சிக்கின்றன. குறிப்பாக சர்வதேச இஸ்லாமிய அமைப்புகளுடன் இவர்கள் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. இதனை உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும்.

பயங்கரவாதத்துக்கு அப்பால் இலங்கை கடந்த காலத்தில் கிளர்ச்சிகளில் ஈடுபட்ட அமைப்புகளின் ஆபத்தையும் எதிர்நோக்குகிறது. அந்த அமைப்புகள் இலங்கைக்குள் தங்களை மறுபடி ஒன்றிணைத்து, தமது இடதுசாரிக் கொள்கையை முன்னெடுக்க முயல்கின்றன என்று எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. இவர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய முகவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துகின்றனர் என்றும் தெரியவருகின்றது.

## சுன்னாகம்....

யம் தொடர்பில் உடுவில் பிரதேச-செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய தீர்மானத் திற்கிணங்க இரண்டாம் கட்ட நடவடிக்கையாக அமைச்சர் நேற்று சுன்னாகம் மின் உற்பத்தி நிலைய சுற்றாடலை ஆராய்ந்த றிந்து கொண்டார்.

இதன்பிரகாரம் நிலத்தில் கழிவுகள் கலக்கப்பட்டிருந்தமை தொடர்பில் உடுவில் பிரதேச செயலர் நந்தகோபன் தலைமையில் 9 பேர் கொண்ட ஆய்வுக் குழுவொன்றை அமைத்துள்ள அமைச்சர் இவ்விடயம் தொடர் பில் விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கும்படியும், மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் அவதானஞ் செலுத்தி அதனையும் அவ் அறிக்கையுடன் இணைக்குமாறும் பணித்து ள்ளார்.

இக்குழுவில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மத்திய சூழல் அதிகார சபை உட்பட துறைசார் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் நிபுணர்களும் அடங்குகின்றனர்.

அமைச்சருடன் உடுவில் பிரதேச செயலர், ஏனைய துறைசார் அதிகாரிகள், கிராம அலுவலர்கள், பேராசிரியர்கள், மண்வள நீர்வள ஆய்வாளர்கள் பலரும் நேற்றைய விஜயத்தின் போது கலந்து கொண்டனர்.

## இலங்கை...

பொருளாதார சமூக அரசியல் கலாசார துறையின் முன்னேற்றத்திற்குத் தேவையான உதவிகளை வழங்க, சீனா தயாராக விருப்பதாகவும், இரு தரப்பு உறவுகளை கட்டியெழுப்புவதற்கு தமது நிறுவனம் தேவையான பங்களிப்பை வழங்குமென்றும், தெரிவித்தார்.

மலேசியா மற்றும் சிங்கப்பூரும் தமக்கு ஏற்பட்ட சவால்களை வெற்றிகொண்ட விதம் தொடர்பாக, அந்நாட்டு பிரதிநிதிகள் இங்கு உரையாற்றினர்.

## கூட்டமைப்பு...

தமது இந்தியப் பயணத்தின் போது 13 ஆம் திருத்தம் தொடர்பாக பேசப்படும் என தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் மோடியையும் தாம் சந்திக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## நான்கு....

காவலாளி கடமையிலிருந்த போதிலும் ஐம்பொன்னால் செய்யப்பட்ட வேல் மற்றும் முடி என்பவற்றை எடுத்துச் சென்று வெளி மண்டபத்தில் வைத்து உருக்கிப் பார்த்து விட்டு அவற்றை அவ் விடத்திலேயே விட்டுச் சென்றுள்ளனர்.

மேலும் மேற்படி மூன்று ஆலயங்களுக்கும் முன்புறமாக அமைந்துள்ள வைரவர் ஆலயத்திற்குச் சென்று மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த விக்கிரகத்தை திருடியுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## விசா....

யொன்றை முன்வைத்துள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ள அவர் இலங்கை விடயத்திலும் இது சாத்தியமே எனக் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.